இந்தியா
பக்கம் 18



# உதயன்

சுடர்: 29 கதிர்: 281 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 18, புதன் 03.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

## கடந்த மாதம் 3,005 பேருக்கு டெங்கு தொற்று

யாழ்ப்பாணம், செப். 3
நாடளாவிய ரீதியில் கடந்த மாதத்தில் மட்டும் 3 ஆயிரத்து 5 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 109 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்தத் தகவல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

தற்போது டெங்குத் தொற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுகின்றது. யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் கடந்த மாதம் 59 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டுள்ளனர். அதே போன்று கிளிநொச்சியில் 3 பேரும், முல்லைத்தீவில் 6 பேரும், வவுனியாவில் 4 பேரும், மன்னாரில் 7 பேரும் கடந்த மாதம் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

கொழும்பு மாநகர எல்லைக்குள் 271 பேரும், கொழும்பு புறநகர் பகுதியில் 588 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)




தற்கொலை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், தற்கொலை முனைப்புள்ளோருக்கு உளநல ஆலோசனை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் 1333 என்னும் இலவச தொலைபேசி இலக்கத்தையும் பிரபல்யப்படுத்தும் நோக்குடனும் நேற்றுக் கிளிநொச்சியில் சைக்கிள் ஓட்டம், வீதி விழிப்புணர்வு நாடகம் மற்றும் பரப்புரை நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை நடைபெற்ற இந்த விழிப்புணர்வு செயற் பாட்டில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கலந்துகொண்டனர். நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் இந்த விழிப்புணர்வு செயற்பாட்டை வடக்கு மாகாணத்தில் மேற்கொள்வதற்கு யாழ். றோட்டறிக் கழகம் அனுசரணை வழங்கியுள்ளது. (ற-18)

## பிற்போடப்பட்டது ஆணைக்குழு அமர்வு



யாழ்ப்பாணம், செப்.3
இந்த மாதம் 18ஆம் திகதி கிளிநொச்சியில் நடத்தப்படவிருந்த காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்ளது. குறித்த ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்கள் இன்னமும் இலங்கைக்கு வராத காரணத்தினாலேயே இந்த அமர்வு பிற்போடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால்காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் விடயப்பரப்புகள் விரிவாக்கப்பட்டு, இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை

22 ஆம் பக்கம் பார்க்க

# போர்க்குற்ற விசாரணையை எதிர்த்து சிப்பாய் தீக்குளிப்பு

## கொள்ளுப்பிட்டியில் நேற்றுப் பரபரப்பு

யாழ்ப்பாணம், செப்.3
இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போர்க்குற்ற விசாரணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலை யத்துக்கு முன்பாக - அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகே தனக்கு தானே தீ மூட்டி உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில், 72 வயதுடைய பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த பியசேன என்ற முன்னாள் இராணுவச் சிப்பாயே உயிரிழந்துள்ளார் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக குறித்த நபர் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தியுள்ளார். அதன்போது ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேர

22 ஆம் பக்கம் பார்க்க



## சம்பந்தன் கூறியவை அனைத்தும் தெரியும் என்றார் மோடி



பக்கம் 14

## பான் கீ-மூனுக்கு வைத்திய பரிசோதனை தேவையாம்



கொழும்பு, செப்.3
இலங்கை மற்றும் மியான்மார் ஆகிய நாடுகளில் பௌத்த தீவிரவாதம் அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ள ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று கடுமையாக விமர்சித்துள்ளது பொதுபல சேனா அமைப்பு.

மத்திய கிழக்கு நாடுகளில் அட்டூழியம் புரியும் தீவிரவாத அமைப்புக்களை ஐ.நா. சபை கண்டுகொள்வதே இல்லை என்றும்அந்தஅமைப்புமேலும்

22 ஆம் பக்கம் பார்க்க

## வளலாயில் மாதிரிக் கிராமம் அமைக்கும் பணி மும்முரம்

### அங்கு எஞ்சியிருந்த கட்டடங்களும் தரைமட்டம்

யாழ்ப்பாணம், செப். 3
இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள, வளலாய் அக்கரை பிரதேசத்தில் மாதிரிக் கிராமம் அமைப்பதற்காக, அந்தப் பகுதியில் எஞ்சியிருந்த வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் அனைத்தும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அங்கு தற்போது வீதிகள் அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிய வருகின்றது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வளலாய் அக்கரை பிரதேசம் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக இருக்கின்றது. அந்த பகுதியைச் சேர்ந்த 224 குடும்பங்கள் அங்கு மீள்குடியமர்வதற்காக பதிவுகளை மேற்கொண்டுள்ளன. இருப்பினும் அந்தப் பகுதிகளில், மேற்படி குடும்பங்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எவையும்மேற்கொள்ளப்படவில்லை.

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து 25 ஆண்டுகளாக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தாது, அக்கரை பிரதேசத்தில் மாதிரிக் கிராமம் ஒன்றை அமைத்து அங்கு அவர்களைக் குடியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்காக அக்கரை பிரதேச மக்களின் சம்மதமின்றி அந்தக் காணிகளை சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள்

22 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் பிரிட்டன் தூதுவர் பொதுமக்களை நேரில் சந்தித்தார்

யாழ்ப்பாணம், செப்.3
மூன்று நாள் பயணமாக வடக்கு வந்துள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கீன், நேற்று முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்குப் பயணம் செய்து, பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

போரால் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்

22 ஆம் பக்கம் பார்க்க



## யாழ். மாவட்ட விவசாயிகள் நவீனத்துவமாக வேண்டும்

### வடக்கு விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவுரை

யாழ்ப்பாணம், செப்.3
தரமான விவசாய உற்பத்தியில் பொருள்களில் மக்கள் ஆர்வம் காட்டி வருவதால், அதற்கேற்ற வகையில் விவசாயிகள் உற்பத்தி நடவடிக்கைகளில் நவீனத்துவத்தைப் பயன்படுத்த முன்வரவேண்டும் - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் வடக்கு விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.சிவகுமார்.

22 ஆம் பக்கம் பார்க்க

## 4 மாதக் கர்ப்பிணி தீயில் எரிந்து சாவு

### கணவரே தீயிட்டார் எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், செப். 3
தீக் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 4 மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

22 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை தொடர்பில் ஐ.நா. இறுக்கமாகவே நடக்கும்

## புதிய ஆணையாளரின் நியமனம் மாற்றத்தை ஏற்படுத்தாது என்கிறது ஐ.தே.க.



கொழும்பு, செப்.3
ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குப் புதிய ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளதால், அதன் இலங்கை தொடர்பான கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படும் என்று கருத முடியாது என்று தெரிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குறித்து இலங்கை அரசு வெளியிட்ட கரிசனைகளை புதிய ஆணையாளர் கருத்தில் எடுத்துப் பக்கச்சார்பற்ற விதத்தில் செயற்படுவார் என்று நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டிருந்தது இலங்கை அரசு. அது குறித்துக் கூறும்போதே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.
"இலங்கையில் புதிய அரசோ அல்லது அமைச்சரோ பதவியேற்கும்போது இலங்கையில் கொள்கை மாற்றங்கள் நிகழ்வதில்லை. அதேபோன்றுதான் சர்வதேச அளவிலும் நடைபெறும். இலங்கை தொடர்பில் புதிய ஆணையாளரும் இறுக்கமான போக்கையே கடைப்பிடிப்பார்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை நேற்றுமுன்தினம் திருகோணமலையில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு அதன் தவிசாளர் சிரேஷ்ட சட்டத்தரணி அமீருள் அன்சார் மௌலானா தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம இந்த அலுவலகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

## சுண்டிக்குளம் கடற்பகுதியில் மீன்வரின் வலைகள் சேதம்

யாழ்ப்பாணம், செப்.3
வடமராட்சி கிழக்கு முனை மற்றும் சுண்டிக்குளம் கடற்பகுதியில் மீனவர்களின் வலைகள் விசமிகளால் வெட்டிச் சேதமாக்கப்பட்டுள்ளன.
இந்தக் கடற்பகுதியில் மீன்பிடி தொழிலுக்காகக் கட்டப்பட்ட வலைகளைக் கடந்த வாரம் இனந்தெரியாதவர்கள் வெட்டிச் சேதப்படுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.
இது குறித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் தமக்கு முறைப்பாட்டை தெரிவித்திருப்பதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.
இந்தக் கடற்பகுதியில் இழுவைப் படகு மூலம் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களாலும் இவை சேதப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)



## இந்திய மீனவர்கள் 9 பேர் கைது



யாழ்ப்பாணம், செப்.3
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 9 பேர் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் படகொன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.
இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகளை மீளப் பெற்றுத் தருமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 40 நாள்களாக தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். கடந்த முதலாம் திகதியே பணிப் புறக்கணிப்பைக் கைவிட்டு தொழிலுக்குச் செல்ல ஆரம்பித்திருந்தனர்.
இந்தநிலையிலேயே கச்சதீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் 15 வயதுடைய சிறுவன் ஒருவனும் அடங்குகின்றார். இவர் சுனாமியில் தந்தையை இழந்ததால் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளார்.
கைது செய்யப்பட்டவர்களைக் கடற்படையினர் யாழ். நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.
அதேவேளை - படகுடைந்து கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 6 பேரை நேற்று கடற்படையினர் கைது செய்துள்ளனர். 6 மீனவர்களையும் நீரியல் வளதுறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்த போதும் அவர்களை பெறுப்பேற்க அதிகாரிகள் மறுத்து விட்டனர் என்று கூறப்படுகிறது. குறித்த 6 மீனவர்களும் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். இவர்கள் இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று தெரிய வருகின்றது. (ற-4,14)

## பிள்ளையை தாக்கிய தாய் எச்சரிக்கப்பட்டு விடுதலை

கரணவாய், செப்.3
ஆலயப் பகுதியில் வைத்து தனது 5 வயதுப் பிள்ளையைக் கடுமையாகத் தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளம் குடும்பப் பெண்ணைக் கடும் எச்சரிக்கைக்குப் பின் விடுவித்துள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.
சந்நிதி ஆலயச் சூழலில் தனது 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை வைத்துப் பிச்சை எடுத்ததுடன், கற்பூரம் விற்கும் தொழிலிலும் ஈடுபட்டு வந்த இளவாலைப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண், தனது ஐந்து வயதுடைய பிள்ளையைக் கடுமையாகத் தாக்கியதுடன் கழுத்துப் பகுதியிலும் கால்களால் மிதித்துள்ளார்.
இது குறித்து ஆலயப் பகுதியில் நின்றவர்களால் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதனை அடுத்து குழந்தையைக் காப்பாற்றிய சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
இதனையடுத்துக் குறித்த இளம் தாயைக் கைது செய்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் தாக்கப்பட்ட குழந்தையையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.
மருத்துவ பரிசோதனையின் பின்னர் மருத்துவ அறிக்கையில் குழந்தை கடுமையாகத் தாக்கப்பட்டமைக்குரிய காயங்களோ வேறு அடையாளங்களோ இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் - இதனை அடுத்து குறித்த பெண்ணிடம் குழந்தையை ஒப்படைத்த பொலிஸார் அவரை ஆலயச் சூழலில் நடமாடக்கூடாது என்று எச்சரிக்கை செய்து விடுவித்துள்ளதாகவும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (த-108)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதாரக் கடன் வசதி

யாழ்ப்பாணம், செப்.3
வடக்கு மாகாணம் உள்பட, நாடளாவிய ரீதியில் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் ஊடாக சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதாரக் கடன் வழங்கும் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்தினூடாக நாடளாவிய ரீதியில் சமுர்த்திப் பயனாளிகளாக உள்ள 25 லட்சம் பேரும் கடன் பெறும் வசதியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.
வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தினூடாக இந்தத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மூன்று வருடங்களைக் கொண்டதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தில், மிகக் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படவுள்ளது.
நுகர்வுக் கடனான 5 ஆயிரம் ரூபாயையும், வாழ்வாதாரக் கடனாக 50 ஆயிரம் ரூபாயையும் எந்தவொரு சமுர்த்திப் பயனாளியும் பெற்றுக் கொள்ள முடியும். பெற்றுக் கொள்ளும் கடனை ஒரு வருடத்தின் பின்னர் செலுத்த ஆரம்பிக்க வேண்டும். அதன் பின்னரான இரண்டு வருடங்களில் கடன் 4 சதவீத வட்டியுடன் கட்டி முடிக்கப்பட வேண்டும்.
சமுர்த்திப் பயனாளி என்பதை உறுதிப்படுத்தினால் நேரடியாகவே இந்தக் கடனை சமுர்த்தி வங்கியில் பெற்றுக் கொள்ள முடியும். வேறு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை.
மேலும் இந்தத் திட்டத்துக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 13.5 பில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. கொழும்பு அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும், கொழும்பு அரசைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியல்வாதிகள் ஆரம்பித்து வைத்துள்ளனர். இதன் போது உள்ளூர் ஆளுந்தரப்பு அரசியல்வாதிகள் எவரும் அழைக்கப்படவில்லை. (ற-5)

## தனியார் பஸ் நிலையத்துக்கு நேற்று பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம்,செப்.3
யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள தனியார் பஸ் நிலையத்துக்கு நேற்று முதல் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன் இரும்பு வேலித் தடையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் இரவு கொழும்பு புறப்படவிருந்த சொகுசு பஸ் ஒன்றின் மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்தே நேற்று முதல் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
வழித்தட அனுமதி இல்லாமல் கொழும்பு - யாழ். சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் இடம்பெற்றது. வழித்தட அனுமதி பெற்ற பஸ்கள் மட்டுமே தரிப்பிடத்துக்குள்ளே அனுமதிக்கப்பட்டுள்ளன.
இதனால் நேற்று இரவு பத்து வரையான பஸ்களே யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டன. பஸ் நிலையத்தைச் சுற்றி நேற்று இரவு பெரும் எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். நேற்று தனியார் பஸ் நிலையத்துக்கு வந்த பயணிகளின் எண்ணிக்கையும் குறைவாகவே காணப்பட்டது. (த)

## பக்தர்களுக்கு இடையூறு; யுவதிக்கு மறியல்

கரணவாய், செப்.3
சந்நிதி ஆலயப் பகுதியில் பக்தர்களுடன் அநாகரிகமாக நடந்த யுவதி ஒருவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கு.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.
கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த சுமார் 27 வயதுடைய இளம் யுவதி ஒருவர் ஆலயச் சூழலில் அநாகரிகமாக நடந்து கொண்டதுடன் ஆலயத்துக்குச் சென்றவர்களையும் தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியுள்ளார்.
இது தொடர்பாக கிராம சேவகர் குறித்த யுவதியை சமாதானம் செய்ய முற்பட்ட போது அவருடனும் முரண் பட்டுள்ளார்.
இதனை அடுத்து குறித்த யுவதியைக் கைது செய்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் அவரை நேற்றுமுன்தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தினர்.
குறித்த யுவதி தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறுநீதிவான் உத்தரவிட்டார். (த-108-109)

## மதுபோதையில் இடையூறு; சமூகப் பணி செய்ய உத்தரவு

தென்மராட்சி, செப்.3
மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட நால்வரை சமூகப் பணியில் ஈடுபடுமாறு நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட சாவகச்சேரி, சங்கத்தானை, மீசாலை, தவசிகுளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நால்வருக்கு எதிராகப் பொலிஸார் தனித்தனி வழக்குகளைத் தாக்கல் செய்து குறித்த நபர்களை நீதிமன்றில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் நால்வரையும் ஆறு மாதங்களுக்குள் 80 மணித் தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயங்கள் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

பக்கங்கள்: முப்பத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 18 புதன் (03.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 281

# வாழ்வின் எழுச்சித் திட்டத்தில்

# தமிழ் முற்றாகப் புறக்கணிப்பு

## கையேடுகள் தனிச் சிங்களத்தில்

கொழும்பு, செப்ரெம்பர் 3

நாடளாவிய ரீதியில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் 'சஹன அருண' என்னும் நிவாரணக் கடன் திட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது தமிழ் மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழ் மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த அரச நிகழ்வுகளில் அரச நிர்வாக மொழிகளில் ஒன்றான தமிழ்மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக திவிநெகும பயனாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (22ஆம் பக்கம் பார்க்க)



## வடக்கு விவசாய அமைச்சின் நிதி மூலம் உரிய திட்டங்கள்

### காலத்துக்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்படும் என்கிறார் மாகாண அமைச்சர் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், செப்.3

வடக்கு மாகாணத்தின் விவசாய அமைச்சுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஊடாக அந்தந்தக் காலப்பகுதிக்கு ஏற்றவாறு உரிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிதி வீணடிக்காமல் திட்டமிட்ட வகையில் அனைத்து வேலைத் திட்டங்களும் படிப் படியாகவே மேற்கொள்ளப்படும் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இழைய வளர்ப்பு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட வாழைக்குட்டிகளை யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா தலதா விகாரை பிரதேசம் புனித பூமியானது

வவுனியா, செப். 3

வவுனியா மாவட்டத்தில் ஸ்ரீ தலதா விகாரை அமைந்துள்ள பிரதேசத்தை பௌத்த சாசன அமைச்சு புனித பூமியா

(22ஆம் பக்கம் பார்க்க)

## வழி அனுமதியற்ற பஸ்கள் கொழும்பு செல்வதற்கு தடை

### இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 3

யாழ். - கொழும்பு சேவையில் ஈடுபடும் வழி அனுமதிப் பத்திரம் இல்லாத தனியார் பஸ்கள் எதிர்வரும் திங்கட்கிழமை வரை சேவையில் ஈடுபடக் கூடாது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளதோடு அந்தப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் உரிமையாளர்களைக் கொழும்புக்கு அழைத்துள்ளது.

இன்று அந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பேச்சு நடத்துவது வரவேற்கக்கூடியது. ஆனால் எதிர்வரும் திங்கட்கிழமை வரை

(22ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்க்கால் நினைவு தடுப்பு; மேலதிக நடவடிக்கை ஏதுமில்லை

### மாகாண பேரவைத் த்லைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 3

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்காக வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கு வருகை தந்த உறுப்பினர்கள் தடுக்கப்பட்டமை தொடர்பில், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 26 பேர் ஒப்பமிட்டு அனுப்பிய கடிதத்துக்கு சபைச் செயலாளரிடமிருந்து உரிய விளக்கம் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பேரவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார். மேற்படி விடயத்தில் மேல் நடவடிக்கை எடுப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்

இறுதிப் போரில் மாண்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தச் சென்றவேளை பேரவைச் செயலகத்துக்கு முன்பாக அவமரியாதைக்கு உட்படுத்தப்பட்டோம் என்று தெரிவித்த, சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், இது குறித்து வடக்கு மாகாண சபையின் 26 உறுப்பினர்கள் கையொப்பம் இட்டு அவைத் தலைவருக்குக் கடிதம் அனுப்பியிருந்ததாகவும், அதற்கு எந்தவொரு பதிலும் வழங்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டி

(22ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை வாகனமும் ஓட்டோவும் மோதி விபத்து

யாழ்ப்பாணம், செப். 3

கடற்படையினரின் வாகனமும் ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஓட்டோ சேத

(22ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரவன்னியன் சங்கத்தின் மோசடி; அதிகாரிகளை இனங்காண்பதற்குக் குழு

### அமைச்சர் டெனீஸ்வரன் அமைத்தார்

யாழ்ப்பாணம், செப். 3

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பண்டாரவன்னியன் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கண்டறியப்பட்ட மோசடியுடன் தொடர்புடைய அரச அதிகாரிகளையும் இனங்காண்பதற்காக மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழுவை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குட்பட்ட மக்களுக்கு மலசல கூடம் அமைப்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வேலைநிறுத்தம் முடிவுக்கு மருந்து வழங்கல் ஆரம்பம்

### வைத்தியசாலைகள் வழமைக்கு

யாழ்ப்பாணம், செப். 3

யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில், வைத்தியசாலைகளில் பணிபுரியும் நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்வல்லுநர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப்போராட்டம் முடிவுக்கு

(22ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கான இழைய வளர்ப்பிலான வாழைக்குட்டிகளை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோர் நேற்று வழங்கினர். (த-14)

## இழுவை வலைப் பயன்பாட்டின் சாதக, பாதகம் ஆராயக் குழு

### மாகாண மீன்பிடி அமைச்சால் நியமிப்பு

யாழ்ப்பாணம், செப். 3

நீர்ப் பரப்பின் நடுவில் இழுவை வலையைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், இதன் சாதக, பாதக நிலைமைகளை அறிந்து முடிவெடுப்பதற்காக, வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் கடந்த 29 ஆம் திகதி வல்வெட்டித்துறை மீனவர்கள் மற்றும் பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதி மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியிருந்தனர்.

இதன்போது இன்பருட்டிச் சங்கத்தினரால், தமது கடற்கரைப் பகுதிகள் அரிப்புக்கு உள்ளாவதால் அவற்றைத் தடுப்பதற்குப் பாதுகாப்பு அணை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்போது, மாகாண சபையின் அடுத்த

(22ஆம் பக்கம் பார்க்க)

வேலை வாய்ப்பு

நீங்கள் சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ளவரா!....

யாழ் நகரில் சந்தைப்படுத்தல் துறையில் மாதாந்தம் 25000/- இற்கு மேல் அதிகமான வருமானத்தைப் பெறக்கூடிய அரிய வாய்ப்பு! நழுவ விடாதீர்கள்!

கல்வித்தகைமை அவசியமில்லை

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:- 077 011 1032, 077 011 1034

முதன்முறையாக 100 வீதமான விசா உறுதிப்பாட்டுடன்

செங்கென் விசா சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி உட்பட 26 நாடுகள் உடன் பயணம்

2 வருட, 3வருட, 5வருட விசாபெற எண்ணி 6 பேருக்கு மட்டுமே. இம்மாதம் 6 ஆம் திகதி வரை அரியவாய்ப்பு.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(51591) (6.4.3)

தொ.பே: 021 221 9016, 021 568 9090



# மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழ்ப் பாட ஆசிரியர்களுக்கான தரவட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் நூல்கள் தொடர்பான தரவட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெறுபேற்றுத் தரத்தை உயர்த்தும்நோக்குடன் வலயக் கல்வி அலுவலக தமிழ்ப் பாடப் பிரிவினரால் தயாரிக்கப்பட்ட வழி காட்டல் கை நூல்களே ஆசிரியர்களுக்கு கையளிக்கப்படவுள்ளன. வலயத்தைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்புகளில் தமிழ் மொழி மற்றும் இலக்கியபாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை நிகழ்வில் கலந்து கொள்ளு மாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார். (வ-9)

## சமூகப் பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு விவாதப் போட்டி

கரணவாய், செப்.3

சமூகப் பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை பாடசாலை மாணவர்களுக்கு இடையே 'சமூகப் பாதுகாப்பு' என்ற தலைப்பில் விவாதப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

கல்வி கற்பதில் ஈடுபட்டுள்ள மாணவர் சமுதாயத்தை இலக்காகக் கொண்டு சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டம் மஹிந்த சிந்தனையின் எதிர்கால இலட்சியத்துக்கு வலுவூட்டும் நோக்கில் அரசால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சமூகப் பாதுகாப்பு மாதமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டே மாணவர்களுக்கு இடையே ஜனாதிபதி விருதுக்கான விவாதப் போட்டியொன்றை பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் 2 விவாதக் குழுக்கள் பங்குபற்ற முடியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. வலயம், மாவட்டம், மாகாணம் மற்றும் தேசிய ரீதியில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெறும் குழுவுக்கு வீரர் விருது மற்றும் ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும், 2ஆம் இடம் பெறும் குழுவுக்கு துணை வீரர் விருது மற்றும் 75 ஆயிரம் ரூபா பணப் பரிசும், 3ஆம் இடம்பெறும் குழுவுக்கு 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும், போட்டியில் சிறந்த தலைவர், சிறந்த பேச்சாளர் ஆகியோருக்கு தலா ஒரு லட்சம் ரூபா பணப் பரிசும், மாவட்ட மட்டத்தில் முதல் இடம்பெறும் அணிக்கு 25ஆயிரம் ரூபா பணப் பரிசும், திறமை காட்டிய பாட சாலை 10 குழுக்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகள் தமது வி ண் ண ப் ப ங் க ளை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்பாக 'பொதுமுகாமையாளர் இலங்கை பாதுகாப்புச் சபை, இல. 18 சமாக அரக்ஸண பியச, இராஜகிரிய வீதி, ராஜகிரிய என்ற முக்வரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-108)

### விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறையினரால் நடத்தப்படும் பட்டப் பின் படிப்பு டிப்ளோமாமாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும்15 ஆம் திகதி காலை9 மணிக்கு ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழக பதில் பீடாதிபதியும் பேராசி ரியர் புஸ்பரெத்தினம் தெரிவித்தார். (வ-415)

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச செயலகத்தில்
அபிவிருத்தி அலுவலராகக்
கடமையாற்றும்
திருமதி ஜெயமலர் கோணலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை
வேலுப்பிள்ளை கந்தசாமியின்
மறைவையொட்டி அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்,
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும் ஊழியர்களும்
பிரதேச செயலகம் உடுவில் (சி/15669)(5.6.3)

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

கடந்த 04.08.2014 திங்கட் கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி நாராயணசாமி கனகம்மா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கேணியடி, இமையாணனில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 03.09.2014 புதன்கிழமை காலை 5.00 மணிக்கு நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நீருடன் சங்கமிக்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



அமரர்
நாராயணசாமி
கனகம்மா (காந்தா)

தோற்றம் 23.05.1947
மறைவு 04.08.2014

கேணியடி, இமையாணன்.
TP:077 254 3170 (40729)(12)(3.6) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இரத்தினாபரணம் குமாரவேலு



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்திணாபரணம் குமாரவேலு 30.08.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

01.09.2014 ஆம் திகதியன்று பத்திரிகையில் வெளிவந்த அன்னாரின் மரண அறிவித்தலுக்கமைய இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.09.2014) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.30 மணியளவில் மட்டுவில் வடக்கு, ஊரிப்பிட்டி (வண்ணாத்திப்பாலம்) மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(பொ.தெய்வேந்திரன்)

மட்டுவில் வடக்கு. (47263)(4.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா சிவசிங்கராசா



யாழ். காரைநகர் தோப்புக்காட்டைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சிவசிங்கராசா 30.08.2014 சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து-மங்களம் தம்பதி யரின் மகளும், காலஞ்சென்ற சிவசம்பு- அன்னம்மா தம்பதி யரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சிவசிங்க ராசா அவர்களின் அன்பு மனைவியும், சுசீலாதேவி (லண் டன்), கமலாதேவி (இலங்கை), சிவகுமார் (ஜேர்மனி), சிறீதரன் (இலங்கை), சிறீகரன் (நோர்வே), சிவசுந்தர தேவி (இலங்கை), சியாமளா தேவி (இலங்கை), சிவ சொரூபி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேஸ் அவர்களின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற சதா னந்தமணி அவர்களின் அன்பு மைத்துனியும், கனகேந் திரன் (லண்டன்), நடனசபேசன் (இலங்கை), ரஞ்சினி (ஜேர்மனி), யசோதா (இலங்கை), இவோன் (நோர்வே), நித்தியானந்தன் (இலங்கை வங்கி), காலஞ்சென்ற இரத்தினேஸ்வரன் (இலங்கை), பேரழகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், முரளீதரன் (நோர்வே), கீதா(பிரான்ஸ்), சிவதா(இலங்கை) ஆகியோரின் பாசமிகு அத்தையும், துசந்தா (லண்டன்), முருகானந்தன்(லண்டன்), தர்சினி (நோர்வே), தனகரன் (நோர்வே), தினேஸ் (லண்டன்), சத்தியா(இலங்கை), ஜெயசுதன்(இலங்கை), நிமலன் (நோர்வே), அபிராமி (இலங்கை), நிவேதன் (இலங்கை), கமலாசன்ன (இலங்கை), துனீந்திரா (ஜேர்மனி), சுதாகரன் (ஜேர்மனி), யுனேஸ்குமார் (ஜேர்மனி), ஜென்சி (ஜேர்மனி), திலீப்குமார் (ஜேர்மனி), விஜித் (இலங்கை), டுசாந்தி(இலங்கை), குகனேசன் (பிரான்ஸ்), ஸ்ரீஅஜித் (இலங்கை), டுசானி (இலங்கை), ஜனார்த்தனி (இலங்கை), சிந்துஜா (நோர்வே), சுஜன் (நோர்வே), யுகான் (நோர்வே), கஜந்தன் (இலங்கை), சஜீவன் (இலங்கை), பிரவீனா (இலங்கை), டேஸ்மினா (இலங்கை), அஸ்வினி (இலங்கை), சரண்ஜா (இலங்கை), யதீஸ்வரன் (இலங்கை), நிதர்சன் (இலங்கை), ஷைலஜா (இலங்கை), கஸ்தூரி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அன்பினி, பாரினி, கார்த்தினி (லண்டன்), சுருதி, சந்தனா (நோர்வே), தனுஸ்கன், சஞ்சை (இலங்கை), ஜனுசியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (03.09.2014) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் மழுவைராயர் வீதி, வட்டு வடக்கு, வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
வட்டுக்கோட்டை. (51242)(6.4) 077 076 1160/076 679 4480

## நீங்கா நினைவலையில் பத்தாம் ஆண்டு நினைவேந்தல்



அமரர் சுப்பையா
சுபேந்திரன்
(செல்வா)

மனம்மகிழ 02.03.1973
மனம் நெகிழ 24.08.2004

திதி: வளர்பிறை நவமி
03.09.2014 புதன்

ஈர் ஐந்து ஆண்டுகள் நிறைவிலும்
உன் முகம் இன்னும் மறையவில்லை செல்வா!
சேர்ந்து மகிழ்ந்திருந்த அந்த நாளை
எப்படி மறந்திருப்போம் செல்வமே!
உன்னைப் பிரிந்து எத்தனை ஆண்டுகளானாலும்
எம்மனம் ஆறாது மாறாது செல்வா!
பூத்துக் குலுங்கிய பூந்தோட்டம்
இன்று பொலிவிழந்து போனதே ஐயா!
உன் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மிஷாந்த மஹால்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986ஆம் ஆண்டு, பூசம் 3ஆம் பாதம், கிரக பாவம் 27, செவ்வாய்க்குற்றமற்ற அரசதொழில் புரியும் பட்டதாரி மணமகளுக்கு சைவ போசனமுடைய அரச தொழில் புரியும் மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(சி/15657)(12.3.6) தொடர்பு:071 817 5815

## வீடு விற்பனைக்கு

மல்லாகம் நீலியம்பனை கோயில் வட்டாரம் கைலாய வைரவர் கோயிலுக்கு அண்மையில் 6½ பரப்புக் காணி வான் பயிர்களுடன் கூடிய பெரியவீடு விற்பனைக்குண்டு. இந்து சமயத்தவர் விரும்பத்தக்கதாகும்.

மில்லேன், ஆண்டார் சீமா, மல்லாகம்.
தொ.பே.: 0770 229 428
0777 243 115
(சி/51606)(3.3)

EPSON epson printer ink
(low price high quality)

epson INK - 100ML

| | |
|---|---|
| L800 | - 1650/- |
| L100/110 - | - 950/- |
| WF7011 | - 950/- |
| STYLUS PHOTO -1390 | - 1400/- |
| L110 SUPLIMATION INK | - 1000/- |
| PM 245 CARTRIDGE | - 1500/- |

MOORTHY DIGITAL COLOUR LAB
62/20, STANLY ROAD,JAFFNA.
0212221358

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
இராஜேஸ்வரி
கதிரவேலு



தோற்றம் 07.02.1947
மறைவு 29.08.1990

திதி: நவமி (03.09.2014)

அன்பும் பண்பும் கொண்ட அன்னையே!
இன்ப வாழ்வில் எம்முடன் இணைந்த தெய்வமே!
இருபத்து நான்கு ஆண்டுகள் கழிந்தாலும்
இதயத்தில் உம் நினைவு மாறவே மாறாது
உயிருள்ளவரை உள்ளளவும் நினைத்தல் நன்று

103/4, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [51582](4.3.6)

குடும்பத்தினர்.

## செயல் நூல் வெளியீடு நாளை

தென்மராட்சி, செப்.3
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் கணித பாடத்தில் திறமைச் சித்திபெறும் நிலைக்கு பாடத் திட்டத்தை இலகுவில் கிரகிக்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட செயல் நூல் வெளியிடப்படவுள்ளன. இந்த நூல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் கணித பாட ஆசிரியர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.
தணித பாட அலகுகளும் மற்றும் அதன் ஆற்றல் மட்ட செயற்றிட்டங்களுக்கான செயற்பாடுகளும் தொடர்பிலான செயல் நூல் வெளியீடு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வுக்கு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத் தலைவர் மருத்துவர் எஸ். சிறிசற்குணராஜா கலந்து கொள்வார்.
இந்த நிகழ்வில் வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## சமய சந்நிதிகளில்

வியாபாரிமூலை, இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பரத் திரு விழாவும் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.
பெருந்திருவிழாக் காலத்தில் தினமும் மதியம் அன்னதான நிகழ்வும் மாலையில் சமயச் சொற்பொழிவுகளும் இடம் பெற்று வருகின்றன. (ஓ-173)

♦♦♦

...ாலி கிழக்கு மெய்ஞான வைரவர் கோயிலில் வருடாந்த ...லங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகின்றது.
தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை 108 சங்காபிஷேகம் நடைபெறும். (வ)

## தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி கிளை நிர்வாகிகள் தெரிவு

இலங்கை தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதிக் கிளை புனரமைப்புக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவர் - க.அருந்தவபாலன், உப தலைவர்கள் - சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர்- சி.துரைராஜா, செயலாளர்- மாகாண ...ப உறுப்பினர்- கே.சயந்தன், உதவிச் செயலாளர்- சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ச.தங்கராசா, பொருளாளர் - சாவகச்சேரி நகர சபை உபதலைவர் கு.சதாசிவமூர்த்தி மேலும் பத்துப் பேர் நிர்வாக சபை உறுப் பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர். (வ-9)

**வேலையாள்கள் தேவை**
யாழ்.நகரில் உள்ள மொத்த, சில்லறை கருவாட்டுக் கடைக்கு வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு: 077 230 6390/077 116 6090 (51595) (12.3.6)

## பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத வியாபார நடவடிக்கைகளை எமக்குத் தெரியப்படுத்துங்கள்

### கொடிகாமம் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி மக்கள் சந்திப்பில் தெரிவிப்பு



கொடிகாமம், செப்.3
பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் நீங்கள் அறிந்தவற்றை எமக்குத் தெரியப்படுத்தலாம் என்றார் கொடிகாமம் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி சரத்சந்திர.
கடந்தவாரம் வரணி வடக்கு பிரதேச சிவில் பாதுகாப்புப் குழுவினருக்கும் கொடிகாமம் பொலிஸாருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று வரணி வடக்குசைவப்பிரகாசவித்தியாசாலை மண்டபத்தில் இடம் பெற்றது. அங்குக் கலந்துரை[illegible] யாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-
பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் நீங்கள் அறிந்தவற்றை எமக்குத் தெரியப்படுத்தலாம். எமது வாகனங்கள் இரண்டு 24 மணித்தியாலமும் ரோந்து நடவடிக்கைகயில் ஈடுபடுகின்றன. தற்போது கூடுதலாக நகைகள் வீடுகளில் திருட்டுப் போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் தாயும் மகளும் வசித்து வந்த நிலையில் அவர்களது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் நகைகளை சுவாமி அறையில் வைக்கும் பழக்கத்தை கொண்டுள்ளனர்.
இது திருடர்களுக்கு வசதியாக உள்ளது. நகைகளை பாதுகாப்பாக வேறுஇடங்களில் வைத்திருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.
வேறு வீடுகளுக்கு வரும் அறிமுகமற்ற நபர்களை உங்கள் வீட்டுக்குள் அழைத்துவந்து உரையாடாதீர்கள்.
பொருள்களை வாங்கும் சாட்டில் உங்கள் வீட்டுச் சுற்றாடல்களையும் அவர்கள் அவதானித்து பின்னர் அவர்களே உங்கள் வீடுகளுக்கும் வந்து களவெடுக்கும் நபர்களாக உள்ளனர்.
மேலும் உங்கள் பிரதேசத்தில் சட்ட விரோத மண் கடத்தல், கால் நடைகள் கடத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களைத் தெரிந்தால் எமக்கு அறிவிக்கவும். உடனடியாக நாம் சம்பவ இடத்துக்குவருகை தந்து நடவடிக்கை எடுப்போம். கசிப்பு உற்பத்தி போன்ற விடயங்கள் பற்றியும் எமக்குதகவல் தாருங்கள்"- என்றார் இந்தக் கலந்துரையாடலில் பிரதேச கிராம அலுவலர் ஏ.பிரதீபன் மற்றும்பொதுமக்கள்எனப் பலர் கலந்து கொண்டனர். (வ-122)

## செயலமர்வு

கரணவாய் செப்.3
வடமராட்சி வலயப் பாடசாலைகளின் வருடாந்த தொகைமதிப்பு தொடர்பான படிவங்களைப் பூரணப்படுத்துவது தொடர்பான செயலமர்வு ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.
பாடசாலைகளில் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கேட்டுள்ளார்.
இதேவேளை - தெரிவு செய்யப்பட்ட அதிபர்களுக்கான கண்காட்சி தொடர்பாக ஒழுங்கு செய்யப் பட்ட கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-108)

## திருக்குறள் மனனப் போட்டிகள் பிற்போடல்

கரணவாய், செப்.3
வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே இன்று புதன்கிழமை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திருக்குறள் மனனப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒக்ரோபர் மாதத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
வடமராட்சி கல்வி வலயத்தால் தரம் 6 - 13 வரையான மாணவர்களுக்கிடையே திருக்குறள் மனனப் போட்டிகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்தப் போட்டிகள் இன்றுநடைபெறுவதாக இருந்த போதும் அவை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது.
எனவே இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்களின் பெயர் விவரங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிமனைக்குஅனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.
இதேவேளை- குறித்த போட்டிகள் இடம்பெறும் திகதிகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ-108)

**பாராட்டி அக மகிழ்கின்றோம்**
மகா வித்துவான் சித்தாந்த பண்டிதர்,
வாகீச கலாநிதி Dr.கனகசபாபதி
நாகேஸ்வரன்
அவர்களது கலாநிதிப் பட்டத்திற்கான ஆராய்ச்சி நூலான சுதேச தமிழ் மருத்துவ இலக்கியங்கள் என்ற ஆய்வு நூலுக்கு இலங்கை கலைக் கழகம் சாகித்திய இலக்கிய விருதை 03.09.2014 புதன்கிழமை கொழும்பு BMICH இல் வழங்கிக் கௌரவிப்பதையிட்டு அகமகிழ்வதோடு, மகா வித்துவானை உளமாரப் பாராட்டி மகிழ்கின்றோம்.


என்றும் அன்பு மாணவர்கள்.
ந. சத்தியரூபன், இ.சதீஸ்கரன்
(51604)(4.5.6)

**அறிவித்தல்**
**நல்லூர் பிரதேசசபை, நல்லூர் உப அலுவலகம்**
**ஆதனப் பெயர் மாற்றம்**
**160/5, அரியாலை வீதி, வட்டாரம்-11**
நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம்-11 அரியாலை வீதியிலுள்ள இல. 160/5 எனும் ஆதனம் எமது பதிவேட்டில் **வெற்று** ஆக காணப்படுகின்றது.
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான சீ.வீரகத்திப்பிள்ளை என்பவரால் வரையப்பட்ட 13752/24.07.2013 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் **"நாவலடி வாய்க்கால் வளவு"** நிலப்பரப்பு 06 ஆனால் தற்கால அளவுப்படி நிலப்பரப்பு 05 குளி 11.395 அளவுடைய இவ் ஆதனம் தனது தந்தை வழி முதுசமாக தனது தந்தை கந்தையா கனகசபைக்கு வந்தடைந்து அவரால் 1975 ஆம் ஆண்டளவில் தனக்கு நன்கொடையாக வழங்கப்பட்டதென்றும் 1995 இல் ஏற்பட்ட இடம்பெயர்வின் போது குறித்த உறுதி தொலைந்து விட்டதென்றும் **இராஜேஸ்வரன் கைம்பெண் இந்திராணி** என்பவர் வெளிப்படுத்தியுள்ளார்.
நல்லூர் பிரதேச சபையின் ஆதனப்பதிவேட்டில் குறித்த ஆதனத்தினை தனது பெயரிற்கு மாற்றம் செய்து தருமாறு இராஜேஸ்வரன் கைம்பெண் இந்திராணி என்பவர் விண்ணப் பித்துள்ளார்.
இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராஜேஸ்வரன் கைம்பெண் இந்திராணி என்பவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறு பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.
ப.வசந்தகுமார்
தலைவர், நல்லூர் பிரதேசசபை.
03.09.2014 (f/15649) (1.6.3)

**தேவை**
திருநெல்வேலியில் அமைந்துள்ள றெஸ்ரோரன்ட் ஒன்றுக்கு Cook (சமையல் ஆள்) தேவை. (51584) (4.6.3)
தொடர்பு: 077 653 4411

**சோதிடம்**
* கல்வியியல் சித்தியுண்டா? * உத்தியோகம் கிடைக்குமா?
* வியாபரம் விருத்தியாகுமா? * விவாகம் நடைபெறுமா?
* வெளிநாடு போகலாமா? * நோய் நீங்குமா?
* கேட்டுப்பாருங்கள்!
டாக்டர் த.சிவானந்தன் பிரபல சோதிடர்
சிவா சோதிட நிலையம்
100, அரசடி வீதி, கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.
(யாழ்/இந்துமகளிர் கல்லூரியடி)
077 899 6281 (51596) (12.3.6)

**வீடு, காணி விற்பனைக்கு**
யாழ்.நகர் மத்தியில் மாட்டின் லேனில் ஒரு பரப்புக் காணியில் 4 அறைகள் (ஒரு A/C அறை), 2குளியலறை, சமையலறை கிணற்றுடன் வீடும் மற்றும் பாதை வசதியுடன் வீடு, கட்டக்கூடிய ¾ பரப்பு சதுரக் காணி வீட் டுடன் விற்பனைக்குண்டு.
பிரபல பாடசாலைகள், கோயில்கள், புகை யிரத நிலையம், வைத்தியசாலை பேருந்து நிலையம் என்பன அருகில் உள்ளது.
தொடர்பு: 077 911 0703 (51575) (4.6.3)

**ஆரோக்கிய வாழ்விற்கு நலமளிக்கும் சித்த மருத்துவ சிகிச்சை**
நோய் வராது பாதுகாக்கும் 'வருமுன் காத்தல்' சிகிச்சை ஹேர்பல் கெல்த் கெயர் சென்ரர் கொக்குவிலில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நம் முன்னோர்கள் கையாண்ட இம்முறை தற்போது அழிவடைந்துவிட்டது. வாகனங்களுக்கு அதன் பாவனைக்கேற்ப சேவிஸ் செய்வது போல் மனித உடலுக்கு செய்வது கிடையாது. இதனால் இன்று மூட்டுக்களில் வலி, இருதய நோய், புற்று நோய்த் தாக்கம், கண்பார்வைக்குறைபாடு, இளமையில் முதுமை என பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றீர்கள். தற்போது ஆயுள்வேத சித்த மருத்துவ முறை யினால் உடலுக்கு எண்ணெய் மசாஜ், கண்ணுக்கு கலிங்கமிடல், இருதய நோய் தாக்கத் துக்குள்ளாகாமல் மூலிகை உணவு மருந்துகள், மூளை, நரம்பு மண்டலங்களுக்கு புத்துணர் வூட்டல், மூலிகைக் குளியல், பஞ்சகர்ம சிகிச்சை போன்ற வருமுன் காத்தல் சிகிச்சை முறை சித்த மருத்துவத்தில் அதிகூடிய தகைமையுள்ள கேரளா சிறப்பு ஆயுள்வேத பயிற்சி பெற்ற மருத்துவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்சிகிச்சையில் பங்கு கொள்ள விரும்புவோர் முற்கூட்டியே தங்கள் நாள், நேரம் என்பவற்றை முற்பதிவு **செய்ய அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்**
0750413579, 0778201195,0212222537.
சித்த ஆயுள் வேத பாரம்பரிய சிகிச்சையை தினமும்
காலை 9.30 மணி-பி.ப.5 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
(இது ஒரு தனியார் மருத்துவ சேவை)
குறிப்பு: மேற்குறிப்பிட்ட மருத்துவம் மருத்துவ தேவையுடையவர்களுக்கு மட்டும் செய்யப்படுகின்றது.
**ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்** (51580) (5.6.3)
65,கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் (கொக்குவில் சந்தி)

# காணிக் கச்சேரிகளை விரைவில் நடத்துமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா, செப்.3

காணிக் கச்சேரிகளை விரைவில் நடத்திக் காணி உரிமையாளரை அடையாளப்படுத்தும் பத்திரங்கள், உறுதிகளை வழங்க வவுனியா பிரதேச செயலகங்கள் முன்வர வேண்டும் என வவுனியா மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக அரச காணிகளில் வசித்து வரும் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படாமையால் குடும்பச் சண்டைகள், கிராமச்சண்டைகள் ஏற்பட்டு பல்வேறு பிணக்குகள் தோன்றியுள்ளன.

போர்க் காலத்தில் பல்வேறு பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள மக்கள் உட்படப் பலரும் இதனால் பல்வேறு மன உளைச்சலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதேவேளை பிரதேச செயலகங்களில் காணி முறைப்பாடுகள் தொடர்பான தீர்வுகள் மற்றும் காணிக் கச்சேரிகள் மந்த கதியிலே நடைபெற்று வருகின்றன.

இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பிரதேச செயலகங்களில் குறித்த உத்தியோகத்தரின் ஆளணிப்பற்றாக்குறை நிலவுவதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதே காரணத்தை பல வருடங்களாகக் கூறி வருகின்றமை சலிப்பை ஏற்படுத்துவதாகவும் பாதிக்கப்பட்ட கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே விரைவில் காணிக் கச்சேரிகளை நடத்தி ஏற்படும் பிணக்குகளைக் குறைக்க உதவுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

# குருமன்காட்டுப் பகுதியில் இருவருக்கு வாள் வெட்டு

வவுனியா, செப்.3

வவுனியா, குருமன்காட்டுப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதககபபடடுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு பின்னர் மோதலாக வெடித்தது. குருமன் காட்டுப் பகுதியில் இரு இளைஞர்கள் குழுக்களும் சண்டையிட்டன. இதன்போதே இருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

குருமன்காடு பகுதியைச் சேர்ந்த தபோதரன் தினேஸ்குமார் (வயது-25), மணியரசன் ரமனராஜ் (வயது-25) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (த-402)

# 'திவிநெகும' தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் அகத்தி முறிப்பு கிராமத்தில் அபிவிருத்திகள்

மன்னார், செப்.3

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபைக்குட்பட்ட அகத்தி முறிப்புக் கிராம சேவகர் பிரிவில் உள்ள அலக்கட்டு கிராமத்தில் தற்போது மக்கள் மீள் குடியேறி வருகின்றனர்.

இந்த மக்களின் மிகவும் முக்கியமான பிரச்சினையாகக் காணப்பட்ட பாதை மற்றும் மின்சாரத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அபிவிருத்திப் பணிகள் முசலி பிரதேச சபைத் தவிசாளர் எம்.எஹியானால் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.



தற்போது குறித்த கிராமத்துக்கான வீதிகள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக ஏனைய வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும் என முசலி பிரதேச சபை தவிசாளர் எம். எஹியான் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அகத்தி முறிப்புக் கிராமத்தின் பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் கிராம அபிவிருத்தி உறுப்பினர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-56)

# வன்னேரிக்குளத்தையும் தேவன் குளத்தையும் இணைத்து நீர்த் தேக்கம் உருவாக்க வேண்டும்

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தையும் தேவன்குளத்தையும் இணைத்து நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்கும்படி வன்னேரிக்குளம், ஜெயபுரம் கிராமங்களின் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குளத்தின் கீழ் 375 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின் றது.

1954 ஆம் ஆண்டு உருவாக் கப்பட்ட வன்னேரிக்குளம் முழுமையாக புனரமைக்கப்பட்டிருக்க வில்லை.

1983ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஜெயபுரம் கிராம மக்களுக்கென தேவன்குளம் உருவாக்கப்பட்டு அந்தக் குளத்தின் கீழ் 526 ஏக்கர் நெற்செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் பயிர்ச்செய்கை ஒரு காலத்திலும் மேற்கொள்ளப்படவில்லை.

வன்னேரிக்குளத்திலும் ஜெய புரத்திலும் மீள்குடியேற்றம் நடைபெற்ற காலத்திலிருந்து இரு குளங்களையும் ஒன்றிணைத்து நீர்த் தேக்கம் உருவாக்குவதன் மூலம் 1000 ஏக்கருக்கும் மேலான நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளமுடியும் என கிராம மக்களால் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை அந்த முயற்சிகளை மேற்கொள்ளப்படவில்லை.

தேவன்குளத்தின் அணைக்கட்டுப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளபோதிலும் அந்தக்குளத்தின் கீழான 526 ஏக்கர் நிலப்பரப்பில் மிதிவெடிகள் இருப்பதன் காரணமாக விவசாய முயற்சிகள் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் மிதிவெடிகளை அகற்றி இருகுளங்களையும் ஒன்றிணைத்து விவசாய முயற்சிகளுக்கு குறிப்பாக ஜெயபுரம் கிராம மக்கள் வயல் நிலம் இல்லாத நிலையில் வாழ்ந்துவரும் நிலையில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளக் கூடிய நிலையை உருவாக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-18)

## ஈர விழிகளுடன் 5ஆம் ஆண்டு





அன்னை மடியில்
07.01.1988

இறைவன் அடியில்
28.08.2009

### அமரர் கருணாதேவன் றஜீபன் (றஜி)

(வணிக முதற்தேர்வு - முதலாம் ஆண்டு மாணவன்-
யாழ். பல்கலைக்கழகம்)

திதி: பூர்வபக்க நவமி

ஆயிரம் கோடி ஆனாலும் நாம் மீண்டு வருவதற்கு
மீண்டும் நீ வர வேண்டும்
ஊமையாய் அழுகுதையா தந்தையுள்ளம் உன்னுடன்
நண்பனாய் மீண்டும் பகிர்ந்து கொள்ள
ஏங்கித் தவிக்குதையா தாய் மனது
உன்னை மீண்டும் சுமந்து பெற்றுவிட
வெறுமையாய் போனதையா அண்ணனுக்கு... "தம்பி"
நீ இல்லாத நாள்கள் எல்லாம்
சொந்தம் பந்தங்கள் சுற்றத்தார் நண்பர்கள்
சொல்லித் தீரவில்லை உந்தன் சுயமான பண்புகளை.
வலியைத் தாங்கிவிட இதயத்துக்கு முடியவில்லை
வலிந்து ஏற்றுவிட மனதில் துணிவுமில்லை.
நடைப்பிணமாய் ஆன பின்பும் நன்றே நாம்
நடித்துத் திரிகின்றோம்.
தாங்க முடியவில்லை தங்கமான எம் கண்ணே
தவித்து தனியே நிற்கின்றோம் தயைபுரிந்து வந்துவிடு

அதே அன்பும் பண்பும் அழகும் அறிவுடனே
கெட்டித்தனம் சுட்டித்தனம்
குறும்புத்தனம் சுறுசுறுப்புடனே
கோபம் இரக்கம் கருணை பொறுமையுடன்
சிரிப்பு சிணுங்கல் அரவணைப்பு அக்கறையுடன்
வெட்கம் சந்தோசம் சாந்தம் பக்குவத்துடன் -நீ
மீண்டும் வந்துவிட வேண்டுகிறோம் சமாதான தூதனாய்
உன் தெய்வ வார்த்தைகளை நம்புகின்றோம் நாம்
கண்ணே எம்மிடமே நீ வந்துவிடு....

சுகவாழ்வும் ஒரு நாளில்
பாதாளம் போகுமென்பது
பாரறிந்த உண்மையன்றோ?
எதிர்பார்த்தது நிழலை
அடைந்தது வெயிலை
நாம் பெற்ற பாடம் இதுதானா?
பேசிப் பேசி பல நாள்
நேசம் வளர்த்து நெஞ்சம் மகிழ்ந்தே
ஆசைக் கனியாய் ஆகும் போது
ஆண்டவன் பறித்தால்
இலாபம் ஏது?
அன்று ஆயிரம் சண்டைகள்
போட்டுக் கொண்ட போதும்
நாம் பிரியவே இல்லை...
இன்று....
சண்டைகளே இல்லை
ஆனாலும்,
எம் அருகில் நீ இல்லை
அன்று... நறுமணத்துடன்
ஒரு பூங்கொத்தில்
பூத்துக் குலுங்கிய நாம்
இன்று .....
வாசமே இல்லாத பூங்கொத்தாய்....
உன்னை ஏங்கி
நம்பிக்கையுடன் நகர்ந்து
கொண்டே செல்கிறோம் நதி போல்...
ஓர் இடத்தில் காத்திருக்கும் கடலாக நாம்...

சுஜி ஸ்ரோர்ஸ் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

என்றும் உன் நினைவலைகளுடன்..
உன் குடும்பத்தினர்.

(51616)(10.6.3)

03 SEP 2014
பொது சன நூலகம்





## ஆஸ்திரேலியாவில் ஓர் அதிசய சிவன் கோயில்


சிட்னி, செப்.3

ஆஸ்திரேலிய தலைநகர் சிட்னியின் புறநகர் பகுதியான மிண்ட்டோவில் உலகிலேயே முதன்முதலாக மனிதர்களால் உருவாக்கப்பட்ட குகைக் கோயிலினுள் 4.5 மீற்றர் உயரமுள்ள பளிங்குக் கல்லினாலான சிவபெருமானின் சிலை பிரதிட்டை செய்யப்பட்டது.

'முக்தி குப்தேஸ்வரர் கோயில்' என்று பெயரிடப்பட்டுள்ள அந்தக் கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்ட சிவபெருமானின் சிலை உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள வாரணாசியில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளது.

ஒற்றைப் பளிங்குக்கல்லில் வடிக்கப்பட்ட இந்த அழகிய சிலை, சிவபெருமான் நான்கு கரங்களுடன் அமர்ந்திருப்பதுபோல் செதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையின் பின்புறத்தில் நிமிடத்துக்கு ஒரு நிறம் என்ற வகையில் மிளிரும் கண்ணைக் கவரும் வண்ண விளக்குகள் காண்போரைப் பக்திப் பரவசத்துக்குள்ளாக்குவதாக ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பக்தர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தக் குகைக் கோயிலினுள் 1,128 சிற்றாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

குகையினுள் 10 அடி ஆழத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் ஒரு பெட்டகத்தில் உலகின் பலநாடுகளைச் சேர்ந்த சுமார் 20 லட்சம் பக்தர்கள் 'ஓம் நமசிவாய' என்று தங்கள் கைப்பட எழுதிய பிரதியும் வைக்கப்பட்டுள்ளது. (வ)



பாகிஸ்தான் பிரதமருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தினமும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. ஆர்ப்பாட்டம் ஒன்றில் இடம்பெற்ற கடும் மோதல்களைத் தடுக்க கலகத் தடுப்பு பொலிஸார் முற்பட்டபோது ஆர்ப்பாட்டக்காரர் களால் பொலிஸார் கடுமையாகத் தாக்கப்பட்டனர். (வ)

## சீனாவிலுள்ள பாடசாலையில் கத்திக் குத்து; குழந்தைகள் மூவர் சாவு

பீஜிங், செப்.3

சீனாவின் ஹூபேய் மாகாணத்திலுள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் மாணவர்கள் மீதும், ஆசிரியர்கள் மீதும் ஒருவர் திங்கட்கிழமை நிகழ்த்திய கத்திக் குத்துத் தாக்குதலில் 3 குழந்தைகள் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

தாக்குதலை நிகழ்த்திய சென் என்ற அந்த நபரும், பாடசாலையின் மாடியிலிருந்து குதித்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

கடந்த இரு நாள்களில் சீனாவில் நடைபெறும் இரண்டாவது சம்பவம் இது.

அந்நாட்டின் யுன்னான் மாகாணத்தில் வாகனப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது மர்ம நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை கத்தியால் குத்தியதில் 4 பேர் காயமடைந்தனர். தாக்குதல் நிகழ்த்திய நபரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

பயங்கரவாதிகளும், சமூக விரோதிகளும் பொதுமக்கள் மற்றும் பொலிஸார் மீது சரமாரியாக கத்திக்குத்துத் தாக்குதல் நிகழ்த்துவது அண்மைக் காலமாக சீனாவில் அதிகரித்து வருகிறது. (வ)

## பலஸ்தீனத்தில் 1000 ஏக்கரை உரிமை கொண்டாடும் இஸ்ரேல்



டோக்கியோ, செப்.3

பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் பெத்தலகேம் அருகில் உள்ள 1000 ஏக்கர் நிலத்தை இஸ்ரேல் அரசு உரிமை கோரி உள்ளது.

மேற்குக் கரையின் கவாத் பகுதியில் இஸ்ரேலிய குடியிருப்பு உள்ளது. அதன் அருகில் உள்ள 1000 ஏக்கர் நிலம் இஸ்ரேல் அரசுக்கு சொந்தமானது என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இதற்கு பலஸ்தீனர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அருகில் உள்ள சூரிப் நகர மேயர் அகமது கூறியபோது, இஸ்ரேல் உரிமை கோரும் இடம் பலஸ்தீனர்களுக்குச் சொந்தமானது. அந்த இடத்தை இராணுவ பலத்தில் அபகரிக்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டினார்.

இஸ்ரேல் அரசின் அறிவிப்புக்கு அந்த நாட்டு மனித உரிமை அமைப்பான பீஸ் நவ் என்ற அமைப்பும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (வ)

# 2 ஆம் உலகப் போருக்குப் பின் இந்தியாவுக்குத் தளபாடங்கள்

## முதல்முறையாக வழங்குகிறது ஜப்பான்

டோக்கியோ, செப்.3

இரண்டாம் உலகப் போருக்குப்பின்னர் முதலாவது முறையாக இந்தியாவுக்கு இராணுவத் தளபாடங்களை வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 5 நாள் பயணமாக ஜப்பான் சென்றுள்ளார். அங்கு ஜப்பான் பிரதமர் ஷின்சோ ஆபேயை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசுகையில், இரு நாடுகளுக்கும் இடையேயான இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான முடிவு எட்டப்பட்டது.

2 ஆவது உலகப் போரில் ஜப்பான் தோல்வியைத் தழுவிய நிலையில் வெளிநாடுகளுக்கு இராணுவ தளபாட விற்பனைக்கு அந்த நாடு தடை விதித்தது. தற்போது இந்தியாவுக்குக் கடற்படைக்கான தளபாடங்களை வழங்குவதற்கு ஜப்பான் முன் வந்துள்ளது. ஜப்பான் பிரதமர் ஆபே- பிரதமர் மோடி இடையேயான பேச்சுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலும், இருநாட்டு பிரதமர்களும் இராணுவ உறவுகளின் முக்கியத்துவம் குறித்து மீண்டும் பேசி முடிவுக்கு வந்தனர். அதில் இரு நாடுகளுக்கும் இடையேயான இராணுவ உறவுகளை வலுப்படுத்தும் முடிவு எட்டப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறையில் இரு நாடுகளும் கூட்டுறவு மற்றும் பரிமாற்றங்களுக்கான தீர்மானத்தில் கையெழுத்திட்டன. இதுதொடர்பாகச் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் மோடி ,

இருநாடுகளின் நலன் குறித்த அக்கறையைக் கருத்தில் கொண்டு, இரு நாட்டு இராணுவ ஒத்துழைப்புக்குப் புதிய கோணத்தையும், புதிய உந்து சக்தியையும் வழங்க நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். இராணுவத் தொழில் நுட்பம் மற்றும் தளபாடம் ஆகிய பிரிவுகளில் கூட்டுறவு வலுப்படுத்தப்படும். உயர் தொழில்நுட்பம், விஞ்ஞானத் தொழில்நுட்பம் ஆகியவற்றிலும் இருநாடுகளிடையே ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்த தீர்மானித்துள்ளோம். மேலும் இரு நாட்டு மக்களுக்கு இடையேயான உறவுகள், கல்வித்துறை சார்ந்த பரிவர்த்தனைகள் ஆகியவற்றிலும் கூட்டுறவை வலுப்படுத்த முடிவு எட்டப்பட்டுள்ளது- என்றார். (வ)

# நான் விரும்பினால் 2 வாரங்களில் கீவ்-வைக் கைப்பற்றுவேன்

## இவ்வாறு கூறுகிறார் ரஷ்ய ஜனாதிபதி

மொஸ்கோ, செப்.3

நான் விரும்பினால் 2 வாரங்களில் கீவ்-வை கைப்பற்ற முடியும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் தன்னாட்சிப் பகுதியாக இருந்து வந்த கிரைமியா பொதுவாக்கெடுப்பு நடத்தி ரஷ்யாவுடன் இணைந்து கொண்டது. கிரைமியாபோன்று கிழக்கு உக்ரைனும் சேர விரும்புகிறது. ஆனால் இதற்கு உக்ரைன் எதிர்ப்புத் தெரிவிக்கிறது. இதனால் கிழக்குப் பகுதியில் உள்ள ரஷ்ய ஆதரவு பெற்ற கிளர்ச்சியாளர்கள் உக்ரைன் அரச படைகளுடன் போரில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மோதலில் டுநெக்ஸ்ட் மற்றும் லுகான்ஸ்க் மாகாணங்களில் இதுவரை 2600 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் தென்கிழக்கில் கடலோர நகரமான நோவாஜோவ்ஸ்க்கை கைப்பற்றி உள்ளனர். மரியூபோல் துறைமுக நகரை நோக்கி ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் முன்னேறிவருகின்றனர். கீவ் மற்றும் மேற்குப் பகுதியில் ரஷ்யா இராணுவ உதவி



பெற்ற கிளர்ச்சியாளர்கள், உக்ரைன் இராணுவத்தை வெளியேற்ற முயற்சி செய்து வருகின்றனர்.

கிளர்ச்சியாளர்கள் முன்னேற்றத்துக்கு ரஷ்யாவே காரணம் என உக்ரைன் குற்றஞ் சாட்டி வருகிறது, ஆனால் இதை ரஷ்ய அரசு மறுத்து வருகிறது. உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

ஐரோப்பிய யூனியன் நாடுகள் உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா பின்வாங்காவிட்டால் மேலும் பல பொருளாதார தடைகளை விதிக்கப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளன.

இந்தநிலையில் அமெரிக்க செனட்டர்கள் ரஷ்யாவுக்கு எதிராகப் போராட உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்க வலியுறுத்தி வருகின்றனர். வெளியுறவுக்குழுவின் செனட் தலைவர் ரோபர்ட் மென்யின்டஸ் ரஷ்ய ஜனாதிபதி புடின் தனது ஆக்கிரமிப்பின் விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்று கூறி உள்ளார்.

உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர கிழக்கு உக்ரைனுக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கூறிவருகிறார்.

இந்த நிலையில் இத்தாலியைச் சேர்ந்த ஒரு பத்திரிகைக்கு பேட்டி அளித்த ரஷ்ய ஜனாதிபதி புடின் நான் விரும்பினால் 2 வாரங்களில் கீவ்-வை கைப்பற்றமுடியும் என்று கூறி உள்ளார். (வ)

## இரு உயிர்களைக் காப்பாற்ற பஸ்ஸைத் தூக்கிய 50பேர்



இந்தியாவின் மகராஷ்டிரா மாநிலம், புனேயில் 50 இற்கும் மேற்பட்டோர் இணைந்து பஸ் ஒன்றைத் தூக்கி, விபத்தில் சிக்கிய 2 கல்லூரி மாணவர்களைக் காப்பாற்றியுள்ளனர். புனேயில் வேகமாகப் பயணித்த பஸ் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு கல்லூரி மாணவர்கள் பஸ்ஸுக்கு அடியில் சிக்குண்டனர். விபத்தை நேரடியாகக் கண்ட சுமார் 50 பேர் விரைந்து சென்று பஸ்ஸை ஒரு பக்கமாகத் தூக்கி மாணவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். (வ)

# இந்திய சமூகத்தின் சிறப்பு அஹிம்சை

## ஜப்பானில் பிரதமர் மோடி பெருமிதம்

டோக்கியோ, செப்.3

அமைதியும், அஹிம்சையும் இந்திய சமூகத்தின் மரபணுவில் பின்னிப் பிணைந்திருக்கின்றன என்று ஜப்பானில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி 4 நாள் சுற்றுப்பயணமாக ஜப்பான் சென்றுள்ளார். 4 ஆவது நாளான நேற்று அவர் சேக்ரட் ஹார்ட் பல் கலைக்கழகத்தில் உரையாற்றிய போது:-

"அமைதியும், அஹிம்சையும் இந்திய சமூகத்தின் மரபணுவில் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

இந்திய மண் புத்த மகான் பிறந்து வாழ்ந்த பெருமையுடையது.

புத்தர், அமைதியை நிலைநாட்டவே வாழ்ந்தார். அதற்காகவே பாடுபட்டார். அந்த செய்தி நாடு முழுவதும் பரவிக் கிடக்கிறது. எனவே அணு சக்தி மூலம் இந்தியா அழிவை ஏற்படுத்தாது.

இந்தியா அணு ஆயுதத் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாததற்குக் காரணம் அதில் சில குறைபாடுகள் இருப்பதே.

சர்வதேச சமூகம் சில நடைமுறைகளை அறிமுகப் படுத்தலாம்.

ஆனால் இத்தகைய ஒப்பந்தங்களையும் கடந்து கட்டுப்பாட்டுடன் இருப்பது சமூகத்தின் சிறப்பு. மகாத்மா காந்தி தலைமையில் கோடிக் கணக்கான மக்கள் அஹிம்சா வழியில் சுதந்திரத்தை பெற்றனர்.

இந்திய சமூகம் அஹிம்சையைக் கடைப்பிடிக்கிறது என்பதற்கு இதுவே மிகப் பெரிய அடையாளம். அமைதியும், அஹிம்சையும் இந்திய சமூகத்தின் மரபணுவில் பின்னிப் பிணைந்திருக்கின்றன" என்றார்.

இந்தியா, அணு ஆயுதங்களை வைத்திருப்பதோடு, அணு ஆயுதங்கள் பரவலைத் தடுக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மறுப்புத் தெரிவிப்பது குறித்து மோடியிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது அவர் இவ்வாறு பேசினார். (வ)

# நாலந்தா பல்கலைக்கழகத்தில் மீண்டும் வகுப்புகள் ஆரம்பம்

பீகார், செப்.3

இந்தியாவின் பழம்பெருமை வாய்ந்த பல்கலைக்கழகமான நாலந்தா பல்கலைக் கழகம் திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் செயற்படத் தொடங்கியது.

பீகார் மாநிலத்தில் உள்ள ராஜகிருஹம் பகுதியில் இயங்கி வந்த இந்தியாவின் புராதன நாளந்தா பல்கலைக் கழகம், 800 ஆண்டுகளுக்கு முன்னர், அன்னியப் படையெடுப்பாளர்களால் அழிக்கப்பட்டது. அதே இடத்தில் மீண்டும் அமைக்கப்பட்ட நாலந்தா பல்கலைக்கழகத்தில் திங்கட்கிழமை வகுப்புகள் ஆரம்பமாகின.

தற்போது அங்கு 15 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் மட்டும் வகுப்புகள் ஆரம்பித்த தினத்தில் வகுப்புக்கு வந்திருந்தனர். முதல் நாளில் சுற்றுச் சூழல், வரலாறு ஆகிய பாடங்கள் நடத்தப்பட்டன. இங்கு தற்போது பணியாற்றும்



மொத்தமுள்ள 6 பேராசிரியர்களில் 2 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அந்தப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கோபா சபர்வால் கூறியதாவது:

நாலந்தா பல்கலைக்கழகத் திறப்புக்கு சிறப்பு விழா எதுவும் ஏற்பாடு செய்யப்படவில்லை. எதிர்வரும் 14 ஆம் திகதி வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் நாலந்தா பல்கலைக்கழகத்தைப் பார்வையிடவுள்ளார். பல்கலைக்கழக புதிய கட்டடம் அமைப்பதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் படும்.

35 நாடுகளைச் சேர்ந்த 1,400 மாணவர்கள் இங்கு பயில விண்ணப்பித்திருந்த நிலையில், முதல் கட்டமாக அவர்களில் 15 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இங்கு படிப்படியாக பல்வேறு பாடங்கள் சேர்க்கப்படும். இந்தப் பல்கலைக்கழகத்தை மீண்டும் உருவாக்குவதற்கு அரும்பாடுபட்ட பீகார் முன்னாள் முதல்வர் நிதீஷ் குமாருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் கூறினார். (வ)


## ஆண்டுகள் ஐந்து ஆனபின்பும் ஆறவில்லை உம் நினைவு

### அமரர் சின்னத்தம்பி செல்வராஜா

(மாயவன் பாரவூர்தி உரிமையாளர்)



மண்ணோடு 06.07.1951 கண்ணோடு 28.08.2009

திதி: நவமி (03.09.2014)

ஆண்டுகள் ஐந்து ஆனபோதும் அப்பா !!
உங்கள் நினைவுகள் இன்னும் நீங்கவில்லை.
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் நீங்கள் இருந்து
எமக்காய் என்றும் ஒளி வீசினீர்கள்
எம்மை விட்டு நீங்கள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்முடனே,
எங்கள் உயர்வுகளுக்கு எல்லாம்
உங்கள் ஆசீர்வாதம் என்றும் இருக்கின்றது.
ஐந்தாண்டுகள் என்ன நூறாண்டுகள் ஆனாலும்
உங்கள் கள்ளமில்லாச் சிரிப்பும் நேசமும்
மறைந்து போகுமா எம்மைவிட்டு

என்றும் உங்கள் நினைவுகளுடன் நாம்
குடும்பத்தினர்.
சங்கானை வீதி, அச்சுவேலி.

# தமிழ் கூட்டமைப்பின் இலக்கு தமிழீழத்தை உருவாக்குவதே

## இந்திய அரசு அதற்குத் துணைபோவது ஏமாற்றம் தருகின்றது என்கிறார் அமைச்சர் சம்பிக்க



கொழும்பு, செப்.3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழீழ இலக்குக்கு இந்தியாவின் புதிய அரசு துணைபோவது பெரும் ஏமாற்றமளிக்கின்றது. இலங்கைக்குள் பிரிவினையை ஏற்படுத்த இந்தியா முயற்சிக்குமானால், அதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்தியப் பயணம் குறித்தும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நிலைப்பாடு குறித்தும் கருத்துத் தெரிவிக்கும்போதே சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

"இலங்கையில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை சர்வதேச அளவில் கொண்டு சென்ற போதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இலக்கு என்ன வென்பது வெளிப்பட்டு விட்டது. கூட்டமைப்பின்நோக்கம்என்ன வென்பதைத்தெளிவாகப்புரிந்து கொண்டுள்ள இந்தியாவின் புதிய அரசும் அவர்களுக்கு துணை போகும் வகையில் செயற்படுவது எமக்கு ஏமாற்றமளிக்கின்றது.

இலங்கையின் தேசிய விடயங்களில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலோ அல்லது நாட்டுக்குள் பிரிவினையினை ஏற்படுத்தும் வகையிலோ இந்தியா செயற்பட முயற்சிக்குமாயின் அதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்க மாட்டோம்.

இந்தியாவின் முன்னைய அரசின் உதவியுடனேயே இலங்கையில் பிரபாகரனால் பயங்கரவாத அமைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்குத் துணைபோகும் கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பும் செயற்பட்டது.

தற்போது புலிப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டாலும் கூட்டமைப்பின் பயங்கரவாத நடவடிக்கைகள் செயற்பட்டுக் கொண்டே உள்ளது.

தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்துக்கு அடித்தளமிடும் நோக்கம் கொண்டது. பிரதமர் நரேந்திர மோடியின் அரசு அதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்தியாவுடன் அரசு நல்ல உறவு முறையை பேணுகின்றது. இந்தியா இலங்கை அரசுடன் உண்மையாகசெயற்படும் என்கின்ற நம்பிக்கையும் எமக்கு உள்ளது. எனவே, அந்த உறவைத் தொடர்ச்சியாக நல்ல முறையில் கொள்வோம்."- என்று தெரிவித்துள்ளார். (ந)



சுற்றுலா மேம்பாடு கருதி இலங்கை வந்திருந்த சீன அழகிகள் 15 பேரும் நேற்றுமுன்தினம் மத்தள சர்வதேச விமான நிலையம் ஊடாகத் தாய்நாடு திரும்பிச் சென்றனர். சீன தேசிய அழகுராணிப் போட்டியின் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகியிருக்கும் அழகிகளே இவ்வாறு இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

# கலகொட ஞானசாரதேரருக்கு நீதிமன்றம் கடும் எச்சரிக்கை

## பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகி உடன் வாக்குமூலம் அளிக்குமாறு உத்தரவு

கொழும்பு, செப்.3
வழக்கு ஒன்று தொடர்பில் பொலிஸ் நிலையம் சென்று வாக்குமூலம் வழங்கத் தவறியிருந்த பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு நீதிமன்றம் கடும் எச்சரிக்கை விடுத்ததுடன், அவரை உடனடியாகப் பொலிஸ் நிலையம் சென்று வாக்குமூலம் அளிக்கும்படியும் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி மைத்திரி குணரட்ணவை நாய் என நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஞானசார தேரர் திட்டியமை தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளின் போதே, ஞானசார தேரர் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 9ஆம் திகதி கலகொட அத்தே ஞானசார தேரர், சட்டத்தரணியைத் திட்டியிருந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்று மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் பொலிஸார் இதுவரையில் விசாரணை நடத்தவில்லை என்று, மைத்திரி குணரட்ணவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளதுடன், பௌத்த பிக்கு ஒருவருக்கு எவ்வாறு இந்தளவு அதிகாரம் கிடைக்கப் பெற்றது என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

வாக்கு மூலமொன்றைப் பதிவு செய்துகொள்வதற்காகபொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கலகொட அத்தே ஞானசார தேரருக்கு அழைப்பு விடுத்த போதிலும் அவர் இதுவரையில் பொலிஸ் நிலையத்துக்கு வரவில்லை என்று கொம்பனித்தெரு பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். இந்தக் காரணங்களை கருத்திற் கொண்ட நீதிவான், உடனடியாகப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று ஞானசார தேரர் வாக்குமூலமொன்றை அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். (ந)

# மேர்வின் உரையை தடுத்த ஜனாதிபதி

கொழும்பு, செப்.3
பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் உரையை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இடையே தடுத்து அவருக்கு அறிவுரை வழங்கிய சம்பவமொன்று நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.


ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக மொனராகலையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், அமைச்சர் மேர்வின் சில்வாவும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அமைச்சர் தமது உரையில், மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தொடர்பில் விமர்சனங்களை முன் வைத்து அவரைத் தனிப்பட்ட ரீதியில் தாக்கிப் பேசினார்.



மேர்வின் சில்வா

அதனை அவதானித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சரின் பேச்சை இடைநிறுத்தியதுடன் எவரையும் தனிப்பட்ட ரீதியில் தாக்கிப் பேசக்கூடாது என்று அறிவுரை வழங்கினார். ஜனாதிபதியின் அறிவுரையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் மேர்வின் தனது உரையைத் தொடர்ந்தார். (ந)



கண்டி பள்ளேகலேயில் 39 நடுத்தர குடும்பங்களுக்காக வீடுகளை 218 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் வீடமைப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது. வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் ஊடக தகவல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் அடிக்கல் நட்டு நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தனர். தேசிய வீடமைப்பு அதிகார சபையும், தனியார் நிறுவனம் ஒன்றும் இணைந்து இந்த வீட்டுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளன. (ந)

# விஜித தேரரின் வழக்கு நவம்பர் 17ஆம் திகதி

கொழும்பு, செப்.3
பொலிஸாருக்குத் தவறான தகவல்களை வழங்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட வட்டரக்க விஜித தேரர் தொடர்பான வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மஹியங்கனை பிரதேச சபை உறுப்பினரான வட்டரக்க விஜித தேரர் கடந்த ஜூன் மாதம் கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில், கடும் தாக்குதல்களுக்கு உள்ளான நிலையில் பாணந்துறை பாலத்துக்கருகே பொலிஸாரால் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தான் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாகவும், தாக்குதலுக்கு இலக்கானதாகவும் அவர் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

ஆயினும் அவர் தன்னைத் தானே தாக்கிக்கொண்டார் என்றும், தவறான முறைப்பாட்டை வழங்கினார் என்றும் தெரிவித்து பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட விஜிததேரர் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதுதொடர்பான வழக்கே எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதி, பாணந்துறை நீதிவான் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ந)

# மக்களுடைய வாழும் உரிமையை உறுதி செய்தார் மஹிந்த ராஜபக்ஷ

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் பசில் ராஜபக்ஷ



கொழும்பு, செப்.3
மக்களின் வாழும் உரிமையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே உறுதி செய்தார் என்று தெரிவித்துள்ளார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ.

அண்மையில் மத்துகம பிரதேசத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோருக்கு இடையில் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில், நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியும், சூழவுள்ள கடற்பரப்பின் மூன்றில் இரண்டு பகுதியும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தாரை வார்க்கப்பட்டிருந்தது.

பொறுப்பு வாய்ந்த அரசு என்ற ரீதியில் இந்தத் தேசத்தை அரசு ஒரே கொடியின் கீழ் கொண்டு வந்தது.

நாட்டின் அனைத்து இன மக்களும் அச்சமின்றி வாழக் கூடிய பின்னணியை ஜனாதிபதி தலைமையிலான அரசு ஏற்படுத்தியது. நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொறுப்பாக மாறியுள்ளது. வெளிநாட்டு சக்திகளிடமிருந்தும், உள்நாட்டு சதிகாரர்களிடமிருந்தும் நாட்டை காக்க வேண்டியது அவசியமானது. ஜனநாயக அரசியலில் ஈடுபட்டு வரும் உலக நாடுகளில் இலங்கையின் சுதந்திரக் கட்சி முக்கிய இடத்தை வகித்து வருகின்றது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ந)

# முதலில் குடும்பம்
## அடுத்துத்தான் கல்யாணம்




சின்னத்திரை உலகில் மைனா என்றால்தான் நந்தினியைத் தெரியும். சரவணன் மீனாட்சி தொடரில் இவரது நகைச்சுவை அட்டகாசங்களைப் பார்த்து ரேவதி என்று இருந்த கதாபாத்திரத்தின் பெயரை மைனா என்றே மாற்றி விட்டார்கள்.

படப்பிடிப்புக் குழுவுக்கு வெளியேயும் மைனா என்றே அழைக்கிறார்கள். எதையும் வெளிப்படையாக பேசக்கூடியவர் நந்தினி. தன்னை பற்றியும் வெளிப்படையாகப் பேசுகிறார். மதுரையில் குடிசை வீட்டில் பிறந்தேன். பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் போதே, குடும்பப் பாரம் சுமக்க வேண்டியதாகி விட்டது. இதனால் வேலைக்குப் போனேன். நான் பார்ப்பதற்கு சுமாரா இருப்பதால் உள்ளூர் தொலைக்காட்சியில் வேலைக்குச் சேர்ந்தேன்.

இதன் போது இயக்குநர் பாண்டிராஜ், வம்சம் படத்தில் கஞ்சா கருப்புக்கு ஜோடியா நடிக்க வைத்தார். அதன் பின்னர் கேடி பில்லா கில்லாடி ரங்காவில் சூரிக்கு ஜோடியாக நடிச்சேன். நகைச்சுவை நடிகை என்ற முத்திரை கிடைத்தது. அதைவைத்துதான் சின்னத்திரை தொடருக்கு வந்தேன். செல்லமே, அழகி தொடர்களில் சின்ன சின்ன கதாபாத்திரங்களில் நடித்தேன். சரவணன் மீனாட்சிதான் என்னை முழுசா அடையாளம் காட்டியது.

இப்போது வீட்டில் திருமணப் பேச்சை ஆரம்பித்துள்ளார்கள். காதலித்துத்தான் திருமணம் செய்வதில் உறுதியா இருக்கின்றேன். அதுக்குக் கொஞ்சம் நாள் ஆகும். காரணம் இப்போது வாடகை வீட்டில்தான் இருக்கின்றோம். சொந்தமாக ஒரு வீடு வாங்க வேண்டும். இப்போதும் அப்பா, அம்மா வேலைக்கு போய்க் கொண்டிருக்கிறாங்கள். அவர்களுக்கு ஓய்வு கொடுக் கணும். இந்தக் குடும்பக் கடமைகளை முடித்த பின்னர்தான் எனக்கென்று ஒரு குடும்பத்தை அமைக்க வேண்டும் என்கின்றார், மைனா என்கின்ற நந்தினி.

# அழகுக் கைவண்ணம்



## இன்றைய பேஸ்புக் தத்துவம்



சீரியல் பார்த்து அழும் பெண்களை விட அவங்க கல்யாண சீ.டியைப் பார்த்து அழும் ஆண்கள்தான் அதிகம்

# ரஜினி
## ரசிகராக மாறிய நியூசிலாந்து கிரிக்கெட் வீரர்



விநாயகர் சதுர்த்தி அன்று சூப்பர் ஸ்ரார் ரஜினி நடித்து வரும் லிங்கா திரைப் படத்தின் முதலாவது உத்தியோகபூர்வ 'போஸ்டர்' வெளியிடப்பட்டது. இது பலதரப்பட்ட மக்களையும் கவர்ந்துள்ளது. ரசிகர்கள் தங்கள் இணையத்தள பக்கங்களில் அதனை போட்டுள்ளனர்.

ரஜினியின் தீவிர ரசிகரான தமிழக கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக், லிங்காவின் போஸ்டரை தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டு "முதல் நாள் முதல் ஷோ பார்க்க ஆசையாக இருக்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

தினேஷ் கார்த்திக்கின் ருவிட்டரை பின்தொடர்கின்றவர்களில் நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ரோஸ் டெய்லரும் ஒருவர். அவர் லிங்கா போஸ்டருக்கு விருப்பம் தெரிவித்ததுடன், "மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவர்" என்றும் ரஜினியைக் குறிப்பிட்டிருக்கிறார்.

அதற்கு பதிலளித்த தினேஷ் கார்த்திக் "உங்களிடமிருந்து இதை கேட்கும்போது சந்தோஷமாக இருக்கிறது. தலைவர் படத்தை பார்க்க நீங்களும் தயாராக இருங்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.



# உளவியல் சொல்லும் உண்மைகள்..!

1. அதிகம் சிரிப்பவர்கள், அதிகம் தனிமையில் வாடுபவர்கள்.
2. அதிகம் தூங்குபவர்கள், சோகத்தில் இருப்பவர்கள்.
3. வேகமாக அதே நேரம் குறைவாக பேசுபவர்கள், அதிகமாக ரகசியங்களை வைத்திருப்பவர்கள்.
4. அழுகையை அடக்குபவர்கள், மனதால் பலவீனமானவர்கள்.
5. முரட்டுத்தனமாக உண்பவர்கள், மன அழுத்தத்தில் இருப்பவர்கள்.
6. சின்ன சின்ன விடயங்களுக்கும் அழுபவர்கள் அப்பாவிகள். மனத்தால் மென்மையானவர்கள்.
7. சின்ன சின்ன விடயங்களுக்கும் கோபப்படுபவர்கள் அன்புக்காக ஏங்குபவர்கள்.!

# கருப்பட்டியின் மருத்துவக் குணங்கள்



பருவம் அடைந்த பெண்களுக்கு கருப்பட்டியையும், உளுந்தையும் சேர்த்து உளுந்தங்களி செய்து கொடுத்தால் இடுப்பு வலிமை அடைவதுடன், கர்ப்பப்பையும் ஆரோக்கி யமாக இருக்கும்.

சீரகத்தை வறுத்து சுக்கு, கருப்பட்டியுடன் சேர்த்துச் சாப்பிட்டால், நன்கு பசி எடுக்கும்.

ஓமத்தை கருப்பட்டியுடன் சேர்த்துச் சாப்பிட் டால் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் கீழ்வயிற்று வலி, வாயுத் தொல்லை நீங்கும்.

குப்பைமேனிக் கீரையுடன் கருப்பட்டியைச் சேர்த்து வதக்கிச் சாப்பிட்டால் வறட்டு இருமல், நாள்பட்ட சளித்தொல்லை நீங்கும். தேநீ ருக்கு சீனிக்குப் பதிலாக கருப்பட்டி போட்டுக் குடித்தால் உடலில் சீனியின் அளவு கட்டுப்பாடாக இருக்கும்.

நீரிழிவு நோயாளிகளும் கூட கருப்பட்டி தேநீர் குடிக்கலாம்.

இதில் சுண்ணாம்புச் சத்தும், நோய் எதிப்பு சக்தியும் அதிகமாக இருக்கிறது. நீரிழிவு நோயாளிகள், கைக்குத்தல் அரிசி சாதத்துடன் கருப்பட்டியைக் கலந்து சாப்பிட்டு வந்தால், சீனியின் அளவு கட்டுப்பாட்டில் இருப்பதுடன், அடிக்கடி சிறுநீர் போவதும் குறையும்.

# பூண்டும் அதன் மருத்துவ குணமும்



பூண்டில் உள்ள ஈதர் எமது நுரையீரல் குழாய் மற்றும் முகத்தில் அமைந்துள்ள குழிகளில் படிந்திருக்கும் கெட்டியான சளியை இளக்கி வெளியேற்றி விடும்.

பால், தேனுடன் பூண்டு கலந்த கலவையை தினமும் பருகி வர் வயிற்றுக் கடுப்பு குணமாகும். அதிகமான கொழுப்பு, மூட்டுவலி உள்ளவர்களுக்கு நல்லது.

காசநோயால் துன்பப்படுபவர்கள் ஒரு டம்ளர் பாலுடன் ஒரு டம்ளர் தண்ணீர், பத்து மிளகு, சிறிது மஞ்சள் பவுடர், ஒரு பூண்டின் உரித்த முழுப் பற்கள் ஆகியவற்றைக் கொதிக்க வைத்து, ஒரு கப் ஆனவுடன் வடிகட்டி அப்பாலை அருந்த வேண்டும்.

இந்தப் பூண்டுப் பாலை காலையும் இரவுதூங்குவதற்கு முன்பும்சாப்பிட சளி, இருமல், வாயு போன்ற அனைத்து நோயும் சரியாகும்.

நோய் சரியானவுடன் இந்தப்பூண்டுப் பாலை நிறுத்திவிட வேண்டும். ஆஸ்துமா நோயால் துன்பப்படுபவர்கள் இந்தப் பூண்டுப் பாலை சாப்பிட அவர்களின் மூச்சுத் திணறல் ஓரளவு சரியாகும்.

பூண்டை உணவுடன் சேர்த்து சாப்பிட நமது உடலில் உள்ள நச்சுப் பொருள்கள் சுலபமாக வெளியேறி விடும்.

மற்றும் வைரஸ் போன்ற தேவையற்ற துன்பம் தரும் உயிர்களையும் இந்தப் பூண்டு அழிப்பதுடன் உணவுப் பாதையில் ஏதேனும் வீக்கம் ஏற்பட்டிருந்தாலும் தேவையற்ற காற்று அடைத்திருந்தாலும் அவற்றையும் சரி செய்து விடும். எமது குடலில் குடியி ருக்கும் புழுக்களும்பூண்டு சாப்பிடுவதால் அவை தானாகவே வெளியேறிவிடும்.

நம்முடைய முகத்தில் தோன்றும் பருக்கள் மீது பச்சைப் பூண்டை பலமுறை தேய்த்து வர பருக்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து விடும். ருசிக்காக ஆசைப்பட்டு எண் ணெயில் பொரித்த தின்பண்டங்களை அதிகமாகச் சாப்பிட நேர்ந்தால், உடனே இரண்டு பச்சைப் பூண்டுப் பற்களை எடுத்து சிறிது சிறிதாகக் கடித்து சாப்பிட செரிமானத் தன்மை ஏற்படும்.



# தலைமுடியின் பராமரிப்பு

உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான்,தலைமுடியும் ஆரோக்கியமாக இருக்கும். உடல் ஆரோக்கிய மின்மைக்குக் காரணம் சத்துக்குறைவு தான். சுவை யானது என்று நாம் தேர்ந்தெடுத்து உண்ணும் உணவுகளில் போதிய ஊட்டச்சத்துகள் இல்லாத காரணத்தால் ஆரோக்கியம் குறைவதோடு முடி தொடர்பான பிரச்சினைகளும் தலைதூக்குகின்றன.

குளிப்பதற்கு முன்னர் கூந்தலில் உள்ள சிக்குகளை அகற்றவும். தலைமுடிக்கு ஏற்ற ஷாம்புகளையே பயன்படுத்த வேண்டும். குளித்த பின்னர் ஈரத்துடன் முடியை சீவ வேண்டாம். ஈரமான கூந்தலை வேகமாகத் துவட்டுவதைத் தவிர்க்க லாம்.

உங்கள் தலைமுடியைப் பராமரிப்பதில் சீப் புக்கும் முக்கிய பங்குண்டு. தலைமுடியை சீவும்போது அகலமான பற்களைக் கொண்ட சீப்பு முலம் சிக்கை அகற்றவும். தலைக்கு குளித்தால் முடியை சீப்பு கொண்டு சிக்கு எடுபதை விட கைகளால் முதலில் சிக்கு நீக்கி விட்டு பின்னர் சீப்பைப் பயன்படுத்துவது நல்லது.

சுருட்டை முடி உள்ளவர்கள் சீப்பு உபயோ கிப்பதைத் தவிர்க்கவும். சீப்பு உபயோகிக்கும்போது நீங்கள் விரும்பும் வகையில் முடியை அழகு படுத்த முடியாது. நீங்கள் பயன்படுத்தும் சீப்புகளை அடிக்கடி சவர்காரம் போட்டு நன்றாகக் கழுவுங்கள். அதில் உள்ள அழுக்கு உங்கள் முடியின் பள பளபை மங்கச் செய்துவிடும்.

உங்கள் தலைமுடியை நன்றாக மசாஜ் செய்யுங்கள். விரல் நுனிகளால் தலைமுடியை மெதுவாக தேய்க்கவும். இதனால் தலையில் இரத்த ஓட்டம் அதிகரிப்பதுடன், தலைமுடி நீளமாக வளரும்.



# மழை காலத்தில் சருமபாதுகாப்பு

சருமமானது மழைக்காலத்தில் எப்போதும் ஈரமாக இருப்பதால், சருமத்தில் நோய்த் தொற்றுகள் ஏற்படக்கூடும்.

குளிர்காலத்திலும் சருமத்துக்கு போதிய பராமரிப்புக்களை கொடுக்க வேண்டும்.

தயிர் மற்றும் ஒரு துளி எலுமிச்சை சாறு சேர்த்து நன்கு கலக்கி பின்னர், சருமத்தில் தடவி, சில நிமிடங்கள் ஊற வைத்து பின்னர் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

பப்பாளியின் விதைகளை எடுத்து, அதில் சிறிது சர்க்கரை சேர்த்து அரைத்த பின்னர் அந்தக்கல வையை முகத்தில் பூச வேண்டும்.

நாட்டுச்சர்க்கரையில், ஒலிவ் எண் ணெய் கலந்து, முகத்தில் தடவி சில நிமி டங்கள் மென்மையாக மசாஜ் செய்து வெது வெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இதை வாரம் ஒரு முறை செய்து வர வேண்டும். ஒரு மாதம் தொடர்ந்து செய்து வந்தால் சருமம் பொலிவடைவதைக் காணலாம்.



# தேன்

தேன் இயற்கையே தரும் சத்தும் சுவையும் உள்ள உணவாகும். தேனில் விற்றமின்கள் மற்றும் சிற்றிக் அமிலம், குளுகோஸ், பொஸ்பரஸ், கந்தகம், இரும்புச்சத்து, உப்புசத்து, மக்னீசியம், கல்சியம், அயடீன், பொட்டரசியம், குளோரின் போன்ற அனைத்துச் சத்துக்களும் நிறைந்துள்ளன.

தேன் வெளிப்படையாக இனிப்புச் சுவை உடையதாயினும், உடலுக்கு அது கசப்புச் சுவையைத் தருகிறது. கசப்புச்சுவை நரம்புகளுக்குப் பலம் தருபவை எனவே தேனைச் சாப்பிட நரம்புகள் பலம்பெறுகின்றன.

அத்துடன் பசியும் ருசியும் உண்டாவதோடு. நல்ல உறக்கமும் ஏற்படுகிறது. உடல் பருத்தவர்களுக்கும், உடல் இளைத்தவருக்கும் தேனே சிறந்த மருந்தாக உள்ளது. உடல் பருமனானவர்கள் தினமும் வெந்நீரில் இரண்டு தேக்கரண்டி விட்டு அருந்தி வர, உடலிலுள்ள ஊளைச் சதை குறையும் பலம் அதிகரிக்கும்.

உடல் மெலிந்தவர்கள் இரவு உணவிற்குப் பின், ஒரு கப் பசும்பாலில் இரண்டு தேக்கரண்டி தேனை விட்டு அருந்திவர, உடல் பருமன் கிட்டும், ஆயுளும் நீடிக்கும்.

தேனை புண்களுக்கு மருந்தாகவும் பூசலாம். தீப்பட்ட காயங்களுக்கு தேன் ஒரு சிறந்த மருந்தாகும்.

> வெந்நீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து ஒரு தேக்கரண்டி தேனும் கலந்து, தினமும் பருகி வர நல்ல குரல் வளம் கிட்டும், தொண்டைக் கட்டும் நீங்கும்.

வெந்நீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து ஒரு தேக்கரண்டி தேனும் கலந்து, தினமும் பருகி வர நல்ல குரல் வளம் கிட்டும், தொண்டைக் கட்டும் நீங்கும்.

தேன் பருகுவதன் மூலம் பல தொற்று நோய்கள், மலேரியா, அம்மை போன்ற நோய்கள் வரமால் தடுக்கலாம்.

பேரீச்சம்பழத்தைக் தேனில் ஊற வைத்து உண்பதால் நல்ல இரும்புச்சத்தோடு. தேனிலுள்ள சத்துக்களும் கிடைக்கும் அது போல், ரோஜா மலரிலுள்ள இதழ்களை தேனில் ஊறவைத்து உண்பதால், உடலுக்குபலமும், குளிர்ச்சியும், தாதுவிருத்தியும் உண்டாகும்.

## வவுனியா தோணிக்கல்லில் தண்ணீருக்காக போராட்டம்

வவுனியா, செப்.3

வவுனியா தோணிக்கல் பகுதியில் பொதுக் கிணற்றில் தண்ணீரைப் போதியளவு பெற்றுக் கொள்வதற்காகக் கடந்த



ஞாயிற்றுக்கிழமை ஏ-9 வீதியை மறித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் நிலவும் வறட்சியை அடுத்து தோணிக்கல் தேக்கவத்தை பகுதியில் உள்ள கிணறுகள் வற்றத் தொடங்கியுள்ளன.


இந்த நிலையில் அப்பகுதியில் உள்ள பொதுக் கிணற்றில் ஓரளவு தண்ணீர் உள்ளதால் பல பொதுமக்கள் அதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் பொதுக் கிணற்றுக்கு அருகில் வசித்துவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தி நீர் பெறுகிறார்.

இதனால் கிணற்று நீர் விரைவில் வற்றுவதால் தாம் போதிய நீரைப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்குமாறு கோரியே இரவு 8 மணி முதல் 9 மணி வரை ஏ-9 வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பௌத்த தேரர் ஒருவர் தலையிட்டதை அடுத்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது. (த-402)




தமிழுக்குப் பெரும் பங்காற்றிய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவு தின நிகழ்வு நேற்று முன் தினம் வவுனியாவில் இடம்பெற்றது. தனிநாயகம் அடிகளார் பற்றி தாம் எழுதிய நூலை தமிழ்மணி அகளங்கன் வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தனிடம் வழங்குகிறார். (த-421)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு செயலாளரை நியமிக்க வேண்டும்

**நிறைவேறியது கூட்டத்தில் தீர்மானம்**

கிளிநொச்சி, செப்,3

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு செயலாளர் ஒருவரை நியமனம் செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சாதாரண பொதுச்சபைக் கூட்டம் கடந்த 27 ஆம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் பர்ணாந்து டொமினிக் அன்ரன் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் தனது தலைமையுரையில், பிரதேச சபைக்கு செயலாளர் நியமிக்கப்படாமையினால் சபை நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமலுள்ளது.

இதன் காரணமாக இந்தக் கூட்டத்தில் செயலாளர் நியமனம் தொடர்பாக மட்டும் ஆராயப்படும் எனத் தெரிவித்ததுடன், செயலாளர் ஒருவரை நியமிக்குமாறு தான் வடமாகாண முதலமைச்சர் மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோரிடம் நேரடியாகச் சென்று கோரியதாகவும் கூறினார்.

இதன் பின்னர் சபைக்குச் செயலாளரை நியமனம் செய்யக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தில், எமது சபையின் செயலாளர் இளைப்பாறிச் சென்று ஒருமாத காலத்தின் பின்னர் கடந்த 9 ஆம் திகதி புதிய செயலாளர் செ.ரமேஸ் ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டார்.

அதன் பின்னர் கடந்த 24 ஆம் திகதி செயலாளர் நியமனம் ஆளுநரால் ரத்துச் செய்யப்பட்டது.

இதன் காரணமாக சபையின் நிதி நடவடிக்கைகள் முற்றாகத் தடைப்பட்டுள்ளன. கடந்த இரண்டு மாத காலத்தில் மேலாகச் சபையின் எந்த விதமான கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக மக்களுக்குரிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குச் சபை உள்ளாக்கப்பட்டுள்ளது.

எனவே பிரதேச சபைக்கு செயலாளர் ஒருவரைக் காலதாமதமின்றி நியமனம் செய்யுமாறு வடமாகாண முதலமைச்சரைக் கோருவதென பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (த-18)

## பால் சேகரிக்கும் நிலையம் கிளிநொச்சி நகரில் வேண்டும்

### கால்நடை வளர்ப்போர் கோரிக்கை

கிளிநொச்சி, செப்.3

கிளிநொச்சி நகரத்தில் பால் சேகரிப்பு நிலையமொன்றை அமைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற கால்நடை வளர்ப்போர் சங்கக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரிலே பால் சேகரிக்கக் கூடிய நிலையமொன்று இல்லாமையால் கால்நடை வளர்ப்போர் பாலை விற்பனை செய்வதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.




கிளிநொச்சி மாவட்டத்தில் 35ஆயிரம் மாடுகள் உள்ள போதிலும் இவற்றில் 25 ஆயிரம் பசுக்களாக உள்ளன. குடுதலான பால் சேகரிக்கப்பட்டபோதிலும் பால் பழுதடையாமல் பாதுகாக்கக் கூடிய நிலையம் இல்லாத குறைபாடு காணப்படுகின்றது.

நாள்தோறும் மாவட்டத்தில் 5 ஆயிரம் லீற்றர் பால் சேகரிக்கப்படுவதாகவும் அதனால் பாதுகாக்க முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

இதனையடுத்துக் கிளிநொச்சி நகரிலே பால் சேகரிப்பு நிலையமொன்றை அமைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-18)

## கிளிநொச்சி விதை நெல் வேறு மாவட்டங்களுக்கு

### உடன் தடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, செப்.3

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் விதை நெல்லுக்காக உற்பத்தி செய்யப்பட்ட நெல் வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது எனவும், அதனைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் கடுமையான வறட்சியால் சகல இடங்களிலும் விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில்; 2014-2015 ஆண்டு காலபோக நெற்செய்கைக்கு சுமார் 60ஆயிரம் ஏக்கருக்குரிய விதை நெல் தேவையான நிலையில் 20 ஆயிரம் ஏக்கருக்குரிய நெல்லையாவது உற்பத்தி செய்



யும் நோக்கில் இரணை மடுக் குளத்தின் கீழ் 450 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுத் தற்போது அறுவடை நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லை மாவட்டத்தின் தேவை கருதாது அறுவடை செய்தவுடனேயே வியாபாரிகளுக்கு விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

இதனால் விதை நெல்லுக்குரிய தட்டுப்பாடு மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

இவ்வாறு அறுவடை செய்யப்படுகின்ற விதை நெல்லை ஏனைய உள்ளூர் விவசாயிகளும் பெற்றுக்கொள்ளும் வகையில் வெளி மாவட்டங்களுக்கு நெல் விற்பனை செய்வதைத் தடுத்துக் குறித்த நெல்லை உரிய திணைக்களங்கள் நியாய விலையில் பெற்று மீளவும் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-55)

## வட்டக்கச்சி மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் வேண்டும்

**அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை**

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் நியமிக்கும்படி வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியின் உபநகரமான வட்டக்கச்சியில் உள்ள உயிர்நாடியான மருத்துவமனையில் மீள்குடியேற்றத்திலிருந்து நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படவில்லை. ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்தில் 15 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு செல்லவேண்டியுள்ளது.

செவ்வாய், வியாழன் நாள்களில் மட்டும் கிளிநொச்சியிலிருந்து செல்லும் மருத்துவர்கள் மக்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை வழங்குகின்றனர். மிகுதி நாள்களில் விபத்துகள், மகப்பேறு உட்பட சகல சிகிச்சைகளுக்கும் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கே மக்கள் செல்ல வேண்டியுள்ளது.

மிகவும் நெருக்கடிகளுடன் வாழும் வட்டக்கச்சி, இராமநாதபுரம் கிராமங்களின் மக்கள் இலகுவாகச் சிகிச்சையினை பெற்றுக்கொள்ளவும், கிளிநொச்சி பொது மருத்துவ மனைக்குச் செல்லாதிருக்கவும் வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவரை நியமிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-18)

## 'திவிநெகும' கடன் திட்டத்தின் அறிமுக வைபவம் மன்னாரில்

மன்னார், செப்.3

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டத்துக்கு அமைவாக வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கடன் வழங்கும் நிகழ்வு ஒன்று நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை மன்னார் சமுர்த்தி வங்கிச் சங்கக் கிளையில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், வாழ்வின் எழுச்சி வலயம் 6 பணிப்பாளர் திருமதி. சரோஜினி பத்மரஞ்சன், வாழ்வின் எழுச்சி மன்னார் மாவட்ட உதவி ஆணையாளர் கே.சசிதரன், மன்னார் மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையாளர் ஏ.ஜே. ஜேக்கப், மன்னார் பிரதேச செயலாளர் வசந்தகுமார், மன்னார் நகரசபை உறுப்பினர் நவுசீன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 4 வீத வட்டியில் இந்தக் கடன் வழங்கப்படுவதோடு கடனைப் பெற்ற முதல் வருடம் கருணைக் காலம் வழங்கப்படும்.

அதன் மூலம் கடன் பெற்ற முதல் வருடம் கடன் தொகை அறவிடப்படமாட்டாது. அதன் பின் 24 மாத காலம் தவணைக் காலம் வழங்கப்பட்டு கடன் தொகை அறவிடப்படும்.

இதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தொழில் உபகரணங்களை வாங்கவும், ஏனைய வங்கிகளில் அல்லது பெறு கடன்கள் இருப்பின் அந்தக் கடன்களிலிருந்து விடுபடவும், இந்தக் கடன் தொகை வழங் கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. குறித்த கடன் திட்டத்துக்கு அமைவாகத் தெரிவு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கு 5ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரையான கடன் தொகை வழங்கப்பட்டு வருகிறது. (த)

# கழிவகற்றும் பணிகள் முற்றாக முடக்கம் நல்லூர் பிரதேசமெங்கும் சுகாதார சீர்கேடு

## பிரச்சினைக்கு இன்னும் தீர்வேதும் இல்லை; பொதுமக்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம்.செப்.3

அகற்றப்படும் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதற்கு இடம் இல்லாமையால் அந்தச் செயற்பாட்டை முற்றாக நிறுத்தியுள்ளது நல்லூர் பிரதேச சபை. இதனால் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகள் அகற்றப்படாமல் தேங்கியுள்ளதால் துர்நாற்றம் வீசுவதுடன் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாய நிலையும் தோன்றியுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

நல்லூர் பிரதேச சபை ஏற்கனவே கோண்டாவிலில் குப்பை கொட்டிவந்த காணி கழிவுகளால் நிரம்பியுள்ளது. இதனால் அங்கு தொடர்ந்து குப்பை கொட்டமுடியாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து நல்லூர் பிரதேச சபையால் நாவற்குழிப் பாலத்துக்கும் யாழ்.வளைவுக்கும் இடைப்பட்ட அரியாலைப்பகுதியில் கழிவுப்பொருள்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் குறித்த இடம் வயல் காணி என்பதால் அவ்விடத்தில் மீள்சுழற்சி செய்ய முடியாது எனக் கமநல சேவைத் திணைக்களம் அதனைத் தடுத்து நிறுத்திவிட்டது. இதனால் நல்லூர் பிரதேச சபை அதற்கான முயற்சியைக் கைவிட்டுள்ளது.

குறித்த பகுதியில் தனியார் ஒருவரினால் நல்லூர் பிரதேச சபைக்கு 2 ஏக்கர் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த தனியாருக்கு அந்தப் பிரதேசத்தில் மேலும் 14 ஏக்கர் காணி உள்ளது. காணிகளுக்கு வயல் வரம்புகளே பாதையாக அமைந்துள்ளன. தனது காணிக்குப் பாதை போடுவதற்காக அவர் பல தடவைகள் முயற்சித்த போதும் வயல் காணிக்குள் பாதை போடுவதற்கு கமநல சேவைகள் திணைக்களம் அனுமதி வழங்கவில்லை.

இதனையடுத்து அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் 2 மில்லியன் ரூபா செலவில் பாதை அமைக்கும் நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை மேற்கொண்டது. பாதை அமைக்கப்பட்டதைத்தொடர்ந்து கழிவுகளை காணிக்குள் கொட்டுவதற்காக நல்லூர் பிரதேச சபை முயற்சிகளை மேற்கொண்டபோது அதனை நிறுத்துமாறு கமநல சேவைத் திணைக்களம் அறிவித்தது.

இதனையடுத்து நல்லூர் பிரதேச சபையின் குறித்த கழிவகற்றும் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதுடன் கழிவுகளைக் கொட்டுவதற்கு இடம் இல்லை எனக் காரணம் கூறிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் தற்போது கழிவகற்றும் நடவடிக்கைகளும் தடைப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வார காலமாக நல்லூர் பிரதேச சபையால் கழிவகற்றல் நடவடிக்கை கைவிடப்பட்ட நிலையில் திருநெல்வேலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தாம் கழிவகற்றும் பணியில் ஈடுபடுவதாகவும், அதற்காக நல்லூர் பிரதேச சபையின் வாகனத்தை தருமாறும் கோரியுள்ளதுடன் திருநெல்வேலிச் சந்தையில் கழிவுகள் அகற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பா.வசந்தகுமார் தெரிவிக்கும் போது,

கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு அண்மித்ததாக உள்ள காணியில் கடந்த காலங்களில் நல்லூர் பிரதேச சபையால் அகற்றப்பட்ட குப்பைகள் கொட்டப்பட்டு வந்தன. எனினும் அந்த இடத்தில் இனிக் குப்பைகள் கொட்ட முடியாத அளவுக்கு காணி நிரம்பியுள்ளது. இதனையடுத்துத் தனியார் ஒருவரால் அரியாலைப் பகுதியில் கண்டி வீதியில் 800 மீற்றருக்கு அப்பால் உள்ள காணியொன்று நல்லூர் பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

எனினும் அந்தக் காணி வயல் காணி என்பதால் கழிவுகளைக் கொட்டுவதற்கு கமநல சேவைத் திணைக்களம் அனுமதி தர மறுத்துள்ளது. அத்துடன் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரால் இந்த விடயம் வடக்கு மாகாண சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதை அடுத்து அந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்து கழிவுகளைக் கொட்டுவதற்கு இடம் இல்லாத காரணத்தால் அந்த நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளோம். கமநல சேவைத் திணைக்களத்திடம் இருந்து சட்ட ரீதியான அனுமதி வழங்கப்படவில்லை. இந்த நிலையில் கழிவகற்றுவதற்குப் பொருத்தமான இடத்தை தேடிக் கொண்டிருக்கிறோம். இராணுவத்தினர் தாம் குப்பை அகற்றுவதற்கு வாகனம் தருமாறு எம்மிடம் கேட்டனர். நிர்வாகப் பிரச்சினைகள் இருப்பதால் உழவு இயந்திரத்தைத் தர முடியாது என அவர்களிடம் தெரிவித்துள்ளோம்-என்றார்.

இது தொடர்பில் கமநல சேவைத் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கழிவகற்றும் நிலையம் அமைக்கும் இடம் வயல் காணி என்பதாலும், நன்னீர் தேங்கி நிற்கக்கூடிய இடம் என்பதாலும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் கவனத்தில் கொண்டு அவற்றைத் தடுத்து நிறுத்தியுள்ளோம்- எனத் தெரிவித்தனர்.

நல்லூர் பிரதேச சபை ஏற்கனவே கழிவுகள் கொட்டப்பட்ட இடத்தில் பொருத்தமான திண்மக்கழிவு மீள்சுழற்சிகளை ஏற்படுத்தி இருந்தால் இத்தகைய பாதிப்பை எதிர்கொண்டிருக்கத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (த-14-7)

## வைக்கோல் குவியல்கள் விசமிகளால் தீவைப்பு

தென்மராட்சி. செப்.3

சாவகச்சேரி கல்வயல் விளைவேலிப் பகுதியில் வளவில் குவிக்கப்பட்டிருந்த இரு பெரிய வைக்கோல் குவியல்கள் கடந்த ஞாயிறு இரவு இனந்தெரியாதோரால் தீ வைத்து எரிக்கப்பட்டன.

சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வைக்கோல் குவியல்களே தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

கல்வயல் விவசாய சம்மேளனத்தின் செயலாளர். கா.வேதநாயகம் என்பவரது வளவில் குவிக்கப்பட்டிருந்த வைக்கோல் குவியல்களே இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளன.

சம்மேளனத்தின் செயலாளர் தமது பட்டியில் உள்ள மாடுகளுக்கும். பயிர்களை அழித்த போது பிடிக்கப்படும் மாடுகளுக்கும் உணவாக வழங்கவென இவர் தனது சொந்தப் பணத்தில் வைக்கோல் வாங்கி குவித்து வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)



கைதடி மேற்கு சனசமூக நிலையம் வீடற்ற நிலையில் உள்ள நிலைய அங்கத்தவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன்படி கைதடி மேற்கு உதயநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்ட வீடு ஒன்றை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் கடந்த 30 ஆம் திகதி திறந்து வைத்தார். அருகில் கைதடி சனசமூக நிலைய தலைவர் லயன் ப.செல்லத்துரை காணப்படுகிறார். (த-9)

## குப்பை ஏற்றியவரை தீண்டியது விசப்பாம்பு

தென்மராட்சி, செப்.3

வளவுக்குள் சேகரித்த குப்பையை வயலுக்குக் கொண்டு செல்ல வாகனமொன்றில் ஏற்றிய நபர் விஷப் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது.

பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு அனுப்பி வைக் கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னப்பா நாகேஸ்வரன் (வயது-56) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். (த-9)

## கைதடி வயோதிபர் இல்லத்துக்கும் 60

தென்மராட்சி, செப்.3

கைதடி அரச முதியோர் இல்லமான சாந்தி நிலையமும் முதுமை வயதை அடைந்துள்ளது.

சாவகச்சேரித் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதி விவசாய அமைச்சருமான வேலுப்பிள்ளை குமாரசாமியின் ஏற்பாட்டில் கைதடியில் அமைக்கப்பட்ட முதியோர் இல்லம் கடந்த 1954 ஒக்ரோபர் இரண்டாம் திகதி அந்த வேளை பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலவினால் திறந்து வைக்கப்பட்டது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதி அறுபது வருட கால சேவையை சாந்தி நிலையம் பூர்த்தி செய்கிறது.

சமூக மட்டத்தில் விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் வகையில் சாந்தி நிலையத்தை சமூகத்துடன் இணைக்கும் பல்வேறு நிகழ்வுகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

சர்வதேச முதியோர் வாரத்தில் இந்த நாள் வருவதால் அன்றைய தினம் முதியோர்களைக் கௌரவிக்கும் முகமாக கண்காட்சி, ஊர்வலங்கள், சமயப் பெரியார்களின் ஆன்மிகச் சொற்பொழிவுகள் போன்றவை நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, அரச முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் கடமையாற்றி ஓய்வு பெற்றும், இடமாற்றல் பெற்றும் சென்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த உத்தியோகத் தர்கள், ஊழியர்கள் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அத்தியட்சகர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (த-9)

## வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் நாற்று மேடை அமைக்க பயிற்சி

வலி.வடக்கு, செப். 3

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் ஆறாம் கட்டமாக வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்குப் பயிர்கள் வழங்குவதற்காக நாற்று மேடை அமைப்பவர்களுக்கான பயிற்சி வகுப்பு உடுவில் கமத்தொழில் திணைக்கள அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



வாழ்வெழுச்சித் திட்டதின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நாற்று மேடைப் பயனாளிகளுடன் கிராம அலுவலர்கள், வாழ்வெழுச்சித் திட்ட அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் மருத்துவ மாதுக்கள் ஆகியவர்களும் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டார்கள்.

கமத் தொழில் திணைக்கள அலுவலர்கள், பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோரால் கட்டம் கட்டமாக இந்த வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

குறிப்பாக நாற்று மேடை தயாரித்தல், நாற்றுக்களை விநியோகம் செய்தல் மற்றும் இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்துதல் தொடர்பாகச் செயலமர்வில் விளக்கங்கள் வழங்கப்பட்டன. (த-86)

## நவீல்ட்டில் அழகுக்கலை பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப். 3

கைதடி நவீல்ட் பாடசாலையில் அழகுக்கலைப் பயிற்சி வகுப்புகள் அடுத்த வாரமளவில் ஆரம்பமாகவுள்ளதாகவும் ஆர்வமுடையவர்கள் பாடசாலையிலுள்ள தொழிற் பயிற்சியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

6 மாத காலப் பகுதியைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறி கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. ஆர்வமுடையவர்கள் கைதடியிலுள்ள செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் இயங்கி வரும் இந்தத் தொழிற்பயிற்சியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (த-4)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பிள்ளையாரை நீரில் கரைப்பது நியாயமா?

தனிநாட்டுக்கான ஆயுதப் போர் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கு அடைந்துவரும் விரும்பத்தகாத மாற்றங்கள் பல. மாணவர்கள் இடையிலான போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு, பெண்கள் மீதான குடும்ப வன்முறைகளின் அதிகரிப்பு, பாலியல் வன்புணர்வுகளின் வகைதொகையற்ற அதிகரிப்பு, களவு, கொள்ளை, லஞ்சம் மற்றும் ஊழல் என்று இந்த வேண்டத்தகாத - விரும்பத்தகாத மாற்றங்கள் பல்கிப் பெருகி வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய சட்டத்தின் காவலர்கள் சாட்டுப் போக்குக் கூறிக்கொண்டு வாளாவிருப்பது இவை எல்லாவற்றுக்கும் ஏதாவது பின்னணி இருக்குமோ என்ற அச்சத்தையும் வடக்கு மக்களிடம் ஏற்படுத்தத் தவறவில்லை.

இந்த வேதனை - சோதனைகள் ஒருபுறம் அதிகரித்துச் செல்ல, அவசியமே இல்லாத இறக்குமதிக் கலாசாரங்கள், சடங்குகளின் திணிப்புகளும் நிலைமையை மேலும் சிக்கலாக்குவதுடன் கவலை கொள்ள வைக்கின்றன. அப்படி மிக அண்மையில் வந்துள்ள புதிய சடங்கு, பிளையாரைக் கடலில் கரைக்கும் விநாயகர் சதுர்த்தித் திருவிழா.

இதுவரையில் ஈழத் தமிழர்களிடம் இந்தப் பழக்கம் இருந்ததில்லை. பிள்ளையாரை முதல் தெய்வமாக வணங்கும் வழக்கம்தான் ஈழ இந்துக்களிடம் இருந்து வந்துள்ளது. விநாயகனைத் தொழுது ஆரம்பிக்கும் காரியங்கள் விக்கினங்கள் இன்றி நடந்தேறும் என்பதே அவர்களின் அசையாத நம்பிக்கையாக இருந்து வந்துள்ளது. எந்தக் கோயில்களுக்குச் சென்றாலும் அங்கும் பிள்ளையாரை முதலில் வணங்கிவிட்டே ஏனைய தெய்வங்களிடம் செல்லும் வழக்கத்தைக் கொண்டவர்கள் ஈழ இந்துக்கள்.

அப்படிப்பட்ட பிள்ளையாரை தூக்கிச் சென்று கடலில் கரைக்கும் சடங்கு என்பது எதற்கானது? இதில் என்ன தேவை இருக்கிறது? செய்யவேண்டியவைகள் எத்தனையோ இருக்க இப்படியான புதிய - வேண்டாத - சடங்குகள்தானா பெருந்தொகைச் செலவில் உருவாக்கப்படவேண்டும்?

வடஇந்தியாவிலே இத்தகைய சடங்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தே இடம்பெற்று வருகின்றது. அண்மைக் காலமாகவே அது தமிழ்நாட்டிலும் பரவி வருகின்றது. அங்கும்கூட விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் பக்தியை வளர்ப்பதற்குப் பதில் மதப் பதற்றத்தை ஏற்படுத்துபவையாகத்தான் இருக்கின்றன. விநாயகர் சிலைகளைத் தாங்கிச் செல்லும் ஊர்வலங்கள் முஸ்லிம்கள் செறிவாகச் செல்லும் வீதிகள் ஊடாகவே செல்ல வேண்டும் என்று அடம்பிடிப்பதால் ஏற்படும் பதற்றம் அது.

இத்தகைய ஒரு கலாசாரத்தை, இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுகிறது என்ற ஒரே காரணத்துக்காக இங்கும் கொண்டு வருவதற்கு முயற்சிப்பதில் என்ன நியாயம் இருக்கமுடியும்? உடனடியாக இது தடுத்து நிறுத்தப்படவேண்டும். ஒரு சிறு குழுவினர்தான் இந்த முயற்சியில் ஈடுபட்டார்கள் என்று ஒதுக்கித் தள்ளிவிடமுடியாது. அதுவே பின்னாளில் பெரு விருட்சமாகி இன்னும் இன்னும் வேண்டத்தகாத பிரச்சினைகளின் மூலவேர் ஆகிவிட அனுமதிக்க முடியாது.

அதெல்லாவற்றுக்கும் முன்பாக இப்படிப்பட்ட ஒரு சடங்கு இப்போது எமக்கு முக்கியமா என்று கேட்டால் இல்லை என்பதே திட்டவட்டமான பதில். அத்தோடு பிள்ளையார் சிலைகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தும் வேதியல் பொருள்கள் மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் நிறமூட்டிகளால், சிலைகள் கரைக்கப்படும் நீர் மாசுபடுகிறது என்று சுற்றுச்சூழலியலாளர்கள் இந்தியாவில் போர்க்கொடி தூக்கி வருகிறார்கள். இன்று இங்கு கடலில் ஆரம்பிக்கும் இந்தச் சடங்கு நாளை பல்கிப் பெருகினால் குளங்களையும் கேணிகளையும் குட்டைகளையும்கூட விட்டுவைக்காத நிலைமை ஏற்படும். அப்போது பசளையாகப் பயன்படுத்தப்படும் அடி உரத்துக்கு மேலாக இந்த நிறமூட்டிகளாலும் வேதியல் பொருள்களாலும் நிலத்தடி நீரையும் மாசாக்கிவிடுவோம்.

மதத்தையும் பக்தியையும் வளர்ப்பதற்கு இத்தகைய சடங்குகள் அவசியமில்லை. எனவே இந்து மத நிறுவனங்கள் மற்றும் சமயத் தலைவர்கள் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு இத்தகைய தேவையற்ற இறக்குமதிக் கலாசாரங்களை துடைத்தெறிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# சம்பந்தன் கூறியவை அனைத்தும் தமக்கு தெரியும் என்றார் மோடி

*சகல தரப்புகளோடும் பேச்சு நடத்த வலியுறுத்து.

*13 ஆவது திருத்தம் : ஜனாதிபதி அளித்த வாக்குறுதி பற்றியும் பிரஸ்தாபம்.

*இரு தரப்பு பேச்சு மீண்டும் தொடங்குமா?

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

புதுடில்லியில் உள்ள இந்தியப் பிரதம மந்திரி நரேந்திர மோடியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இலங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை அவர் கைகூப்பி தமிழில் வணக்கம் என்று கூறி வரவேற்றார்.

பேச்சுகள் ஆரம்பமானதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பக்கம் திரும்பி நான் முதலில் நீங்கள் கூறுவதைக் கேட்க விரும்புகிறேன் என்று இந்தியில் கூறினார். அது உடனடியாக மொழி பெயர்க்கப்பட்டது. சந்திப்புக்கு 30 நிமிடங்களே ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அனேகமாக ஒரு மணி நேரம் அது நீடித்தது.

சந்திப்பு முடிவுற்றதும் நாங்கள் நூறு வீதம் உங்களுடன் இருக்கின்றோம் என்று மோடி கூறினார். இது இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவில் புதிய அல்லது ஒரு தீர்க்கமான அத்தியாயம் ஆரம்பமாவதை சுட்டுவதாக இருந்தது. முந்திய இந்திய அரசுடனான உறவுகள் சில சமயம் எதிர்ப்புகளுக்கும் அவ்வப்போது மோதல் நிலைக்கும் போய்க் கொண்டிருந்தன. ஆனால் பிரச்சினைகளை எவ்வளவு ஆழத்துடன் தெளிவான உள்நோக்குடன் மோடி அரசு அணுகப் போகிறது என்பது இப்போது வெளிப்படுவதாய் இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு. இப்போது தான் எதிர்கொண்டுவரும் வெளியுற வுத் துறையில் கவலைதரும் தகுதியின்மைகளுக்கிடையில் புதுடில்லியின் இப்போதைய ராஜதந்திர அணுகுமுறைகளின் நுணுக்கத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளுமா என்பது தர்க்கத்துக்குரிய கேள்வியாக இருக்கின்றது.

கைகளை நெஞ்சோடு கட்டிக்கொண்டு சம்பந்தன் கூறியவைகளை மிகக் கவனமாக மோடி கேட்டுக் கொண்டிருந்தார். சம்பந்தன் விவரமாக விளக்கமொன்றை வழங்கினார்.

மூன்று முக்கிய அம்சங்களாக அவர் பிரச்சினைகளை எடுத்துக் கூறினார். இராணுவ மயப்படுத்தல், குடியேற்றங்கள் மற்றும் வடக்கில் குடிப்பரம்பலை மாற்றி அமைத்தல் ஆகிய தலைப்புக்களில் அவர் பிரச்சினைகளை விளக்கினார். வேறு பல பிரச்சினைகளையும் அவர் தொட்டுக் காட்டினார். வடக்கில் 15 பிரிவுப் படையணிகள் இருப்பதாகவும், இது சமாந்தரமற்றதோர் நிலைமை என்றும் அவர் விளக்கினார். யாழ்.குடாவில் வலிகாமம் கோட்டத்தில் இராணுவம் காணிகளைக் கையகப்படுத்தி வருவதாகவும் கூறினார். அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்குச் சொந்தமான 1,600 ஏக்கர் காணி அபகரிக்கப்பட்டு இராணுவத்தினரின் குடும்பங்கள் அங்கு குடியேற்றப்படவிருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். சட்டப்படியான உரிமையாளர்களால் வழக்குகள் தொடரப்பட்டு அவை நிலுவையிலுள்ள நிலையில் சில வீடுகளும் கட்டடங்களும் உடைத்துத் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன என்றார் சம்பந்தன். இவை பற்றி ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு போகப்பட்டது. ஆனால் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றார். கட்டமைப்பான குடியேற்றங்கள் இடம்பெற்று வருவதாக தெரிவித்த சம்பந்தன் 10 ஆயிரம் வீடுகளை இராணுவத்தினருக்காக கட்டி முடிப்பதற்கான திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவிருக்கிறது என்றார். இராணுவமானது உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இப்போது மரக்கறி, பழங்கள் மற்றும் நெற் பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டு வருகிறது. வர்த்தகத் துறையிலும் இராணுவம் ஈடுபட்டிருக்கிறது என்று கூறிய அவர் இந்த விடயத்தைத் தாம் நாடாளுமன்றத்தில் ஒருமுறை கிளப்பியதாகவும் சிரேஷ்ட அதிகாரிகள் அவர்களுக்குரிய பகுதிகளில் பிரசன்னமாய் இருந்த போதும் தாம் கூறியதை அவர்கள் தங்கள் அமைச்சர்கள் மூலம் மறுக்கவில்லையென்றார்.

முல்லைத்தீவில் 5,000 சிங்களவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்தார் சம்பந்தன். ஜனாதிபதி ராஜபக்ஷ பல தடவைகள் மீண்டும் மீண்டும் வடக்கு மாகாண ஆளுநரின் பதவிக் காலத்தை நீடிக்கப் போவதில்லையென்று வாக்களித்திருந்தார். ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரலான ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கடந்த வருடம் இடம்பெற்ற மாகாண சபைக்கான தேர்தலில் இந்த மிக சிரேஷ்ட அரச அதிகாரி அரச தரப்பில் தீவிரமாக பரப்புரையில் ஈடுபட்டிருந்தவர் அவர் மீண்டும் பதவியில் நீடிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாண சபை செயற்படுவதை இவர் அனுமதிக்கிறாரில்லை. சபையில் வரவு-செலவுத் திட்டத்துக்கு சம்மதம் வழங்க அவர் மறுத்துள்ளார் என்று சம்பந்தன் கூறினார். இவைகளுக்கு மத்தியில் மாகாண முதலமைச்சர் ஒரு செயலாளரை நியமிப்பதிலிருந்தும் தடுக்கப்பட்டுள்ளார். முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடமிருந்தான கடிதம் ஒன்றையும் பிரதமர் மோடியிடம் கையளித்தார். முதலமைச்சர் விக்னேஸ்வரனை பதவி விலகச் செய்வதற்காக பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அது நடக்காது என்றார். வடக்கு மாகாண முதலமைச்சருக்குத் தாம் அழைப்பொன்றை விடுக்கவிருப்பதாகக் கூறிய பிரதமர் மோடி அதிகாரிகளை இதனைக் கவனத்தில் எடுக்கும்படியும் வலியுறுத்தினார்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தொடர்பாக சம்பந்தன் விரிவாக எடுத்துரைத்தார். கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் ஜனாதிபதி இந்திய அரசுக்கு பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தார். 13 ஆவது திருத்தத்தைச் செயற்படுத்துவார் என்றும் அதற்கு அப்பால் சென்றும் தீர்வு வழங்குவார் என்றும் கூறியிருந்தார். ஆனால் அந்த வாக்குறுதிகள் எதுவும் செயற்படுத்தப்படவில்லை என்றார். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தாங்கள் ஏன் கலந்து கொள்ளாமல் இருந்து வருகிறார்கள் என்பதற்கான விளக்கத்தையும் சம்பந்தன் முன்வைத்தார்.

## கிழக்கின் நிலைமை

கூட்டமைப்புத் தலைவர் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் விடயங்களையும் எடுத்து விளக்கினார். இந்திய அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட சம்பூர் அனல்மின் நிலையப் பணிக்காக அந்தப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் இன்னமும் இடைத்தங்கல் முகாம்களிலேயே இருந்து வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார். அவர்களுக்கு அகதிகள் என்ற முறையில் வழங்கப்பட்டுவந்த கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டுவிட்டன என்றார். கிண்ணியாவில் இந்து பக்தர்களின் பராமரிப்பில் இருந்து வந்த வெந்நீர் ஊற்றுக்களின் கட்டுப்பாடு அருகாமையிலுள்ள பௌத்த ஆலயத்திடம் வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியின் பிரதேச சபை இதனை ஆட்சேபித்த நிலையிலும் இவ்வாறு நடந்துள்ளது என்றார். இவ்வாறு மோசமடைந்து கொண்டிருக்கும் நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கருத்துக்களை கேட்டதன் பின்னர் சுருக்கமாகப் பதிலளித்த மோடி, தெரிவிக்கப்பட்ட பிரச்சினைகள் யாவற்றையும் தாம் அறிந்திருக்கிறார் என்று கூறினார். பிரச்சினைகளைக் கையாள்வதற்கு சிறப்புத் தூதுவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று சம்பந்தன் விடுத்திருந்த கோரிக்கைக்கு பதிலளித்த மோடி அது அவசியமல்ல என்றார்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் அவைகளைக் கையாளக்கூடிய வகையில் வசதிகள் பெற்றுள்ளது என்றார். இலங்கையில் தற்போது நியமனம் பெற்றுள்ள தூதுவர் வை.கே.சிங்ஹா மென்மையான போக்குடையவர் என்றாலும் ராஜதந்திர திறமைகளும் சாதகமான அணுகுமுறைகளும் கொண்டவர் என்று பாரதீய ஜனதா கட்சி தலைவர்கள் நம்புகிறார்கள். அவரே இப்போதைய நிலையில் இலங்கையில் பணிபுரிய பொருத்தமானவர் என்பது அவர்களின் நம்பிக்கை. இலங்கை ஜனாதிபதி 13 ஆவது திருத்தத்தை செயற்படுத்துவதுடன் அதற்கு மேலாகவும் செல்வதாக இந்தியாவுக்கு வாக்களித்திருக்கிறார் என்பதை இந்தியப் பிரதமர் ஏற்றுக் கொண்டார். பிரதமரை போலவே இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜை முன்னதாக கூட்டமைப்புத் தலைவர்கள் சந்தித்த போது அவர்களை அரசியல் கட்சிகள், தமிழ் பேசும் முஸ்லிம்கள் மற்றும் மலையக தமிழ் மக்கள் ஆகியவர்களின் பிரதிநிதிகளோடும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு அவரும் கேட்டுக் கொண்டார்.

அரசுடன் நேரடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதமர் மோடி கேட்டுக் கொண்டார். நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் த.தே.கூட்டமைப்பு கலந்து கொள்ளாத நிலைமையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் இப்போது தீவிர அரசியலில் இல்லாத பிரமுகர்கள் ஆகியோருடனும் இந்தியா பேச வேண்டும் என்பதாக புதுடில்லியில் ஒரு கருத்து கடந்த வாரம் நிலவியது தெரிய வந்தது. அவ்வாறாயின் அது குறிப்பிடத்தக்க மாற்றம் என்று கொள்ள முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு இரு தரப்பு பேச்சுக்களை ஆரம்பிப்பதாக இருந்தால் அது அதன் அறிவிக்கப்பட்ட நிலைப்பாட்டிலிருந்து முழுமையாக பின்வாங்கியதான ஒரு நிலையாகவே இருக்கும். ஆனாலும் இடைநடுவில் கொள்கைகளை மாற்றிக் கொள்வதென்பது இந்த அரசுக்கு ஒன்றும் புதிய விடயமன்று. அது ஒரு நீண்ட பட்டியல். உதாரணத்துக்கு ஐ.நா.செயலாளர் நாயகம் நியமித்த மூன்று நிபுணர்கள் குழுவை அங்கீகரிப்பதில்லையென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அரசின் பிரதிநிதிகள் குழுவொன்று அந்த நிபுணர் குழுவின் முன் பின்னர் சாட்சியமளித்திருந்தது.

அரசின் இந்த இரகசிய செயற்பாடு நிபுணர் குழு விடுத்த அறிக்கையின் மூலம் பின்னர் தெரிய வந்திருந்தது. பொறுப்புக் கூறும் பிரச்சினைகள் தொடர்பாக உள்ளக விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஐந்து ஆண்டு காலமாக அரசு புறக்கணித்து வந்திருந்தது. இப்பொழுது காணாமற் போனவர்கள் பற்றி ஆராய்வதற்காக அது தனது சொந்த ஆணைக்குழுவை நியமித்திருக்கிறது. அத்துடன் அதன் விசாரணைப் பரப்பு போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதுவர் மற்றும் தூதரக அதிகாரிகள் அரசின் ஊடகங்களால் தனிப்பட்ட முறையில் கண்டிக்கப்படுகி றார்கள். அந்த வகையில் உள்நாட்டில் அமெரிக்காவை இந்த அரசு கண்டிக்கிறது. ஆனால் அமெரிக்காவின் ஆதரவைத் தன் பக்கம் ஈர்த்துக் கொள்வதற்கு பொதுச் சேவை பரப்புரை நிறுவனங்களை வெளிநாட்டில் வாடகைக்கு அமர்த்திக் கொள்கின்றது.

# மணமுறிவையும் தவிர்க்க முடியும்



■ தட்சா.ஜோ

மணமுறிவு தற்போது அதிகளவில் பேசப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது. பெரியவர்களால் பேசிமுடிக்கப்பட்ட திருமணத்தில்தான் இந்த நிலை என்று யாராவது நினைத்தால் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். மணிக்கணக்கில் காத்திருந்து துளிக் கணக்கில் ரசித்திருந்து காதலித்துத் திருமணம் செய்தவர்களும் வேண்டும் மணமுறிவு என்று நீதிமன்று வாசலில் நிற்கின்றார்கள். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் மணமுறிவை நாமே உருவாக்கினோம். மணமுறிவுக்கு முக்கிய காரணமாக நாமும் இருக்கின்றோம். நாங்கள் என்பது ஆண், பெண் யாராகவும் இருக்கலாம்.

ஏராளமான ஆண்களும் பெண்களும் திருமண உறவில் மகிழ்ச்சியின்றி உள்ளனர். ஆனாலும் தாங்கள் பெற்றெடுத்த குழந்தைகளுக்காகச் சகித்துக்கொண்டும், கடமைக்காக வாழ்ந்துகொண்டும் உள்ளனர் என்பது உளவியல் நிபுணர்கள் முடிவு.

பலத்த எதிர்பார்ப்புகளோடு திருமண வாழ்வில் காலடி எடுத்து வைக்கும் ஆணோ பெண்ணோ காரணமின்றி விவாகரத்துக் கோர மாட்டார்கள். அவர்களின் எதிர்பார்ப்பு உடையும் பட்சத்தில் சிறு பிரச்சினைகள் உருவாக காலப் போக்கில் அது பெரிதாகி இனிச் சேர்ந்து வாழ முடியாது என்ற முடிவில் மணமுறிவை நாடுகின்றனர்.

கட்டாயத் திருமணமும் மணமுறிவுக்கு ஒரு காரணமாக அமைகின்றது. ஆணுக்கோ பெண்ணுக்கோ விருப்பமில்லாத பட்சத்தில் குடும்பம், சூழல், பொருளாதாரம் போன்றவற்றைக் காட்டி வற்புறுத்தி திருமண பந்தத் தில் இணைத்து விடுவது இறுதியில் பிரிவையே கொண்டுவரும். ஆனால் பொருளாதாரம், குடும்பச் சூழல் போன்ற காரணிகளால் பெண்கள் பலர் வாழப் பிடிக்காத சூழ்நிலையிலும் கணவருடன் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் குடும்பத்தவரின் வற்புறுத்தலின் பேரில் நடத்தப்படும் திருமணங்களுக்குள் சிக்கிச் சின்னாபின்னமாபவர்கள் (18 தொடக்கம் 25 வரையான) பெண்கள் என்பது ஆய்வுகளின் முடிவாகும்.

வாழப் பிடிக்காவிட்டாலும் சகித்துக்கொண்டு வாழும் பெண்களில் வெளிநாட்டு மாப்பிள்ளைகளைத் திருமணம் செய்தவர்கள்தான் அதிகம் என்று கூறலாம். அவர்கள் தமது கணவன்மாரை பொருளாதார ரீதியாக எதிர்பார்த்து நிற்கின்றனர். கணவனைப் பிரிந்தால் வெளிநாட்டில் வாழும் தகுதியை இழக்க நேரிடும் என்பதால் சகித்துக் கொண்டு வாழ்கிறார்கள். இவை தவிர மேலைநாட்டுக் கலாசார மோகம், புரிந்துணர்வின்மை, வயது வித்தியாசம் போன்றவை விவாகரத்துக்கு வழி சமைக்கின்றன.

திருமண வாழ்க்கை தோல்வி அடைந்தால், விவாகரத்துப் பெறுங்கள், மீண்டும் திருமணம் புரியுங்கள். இது தான் புதிய திருமண மந்திரமாகிவிட்டது. விவாகரத்துப் பெறுபவர்கள் மறுமணம் புரியவிரும்புவதும் அதிகரித்துள்ளது.

திருமண பந்தத்தில் இணைவதற்காகப் பல இணையத்தளங்கள் இயங்கி வருகின்றன. இது ஒருவரம். இதே நிலையில் விவாகரத்து பெற்றவர்களுக்கான தளங்களும் அவர்களின் மறுமணத்துக்கென இயங்கி வருகின்றமை ஒரு சாபக்கேடாகும்.

விவாகரத்து ஏற்படுவதற்குப் பெண்கள்தான் காரணம் என அடித்துக் கூறுபவர்களும் இல்லாமலில்லை. சமூக, கலாசார மற்றும் பொருளாதார ரீதியாகப் பெண்கள் வலிமை பெற்று வருகின்றனர். விவாகரத்து வழக்குகள் அதிகரிக்க இதுவும் ஒருகாரணம் என்பதே அவர்களின் வாதம்.

பெண்களின் நிலை மாறிவிட்டது. உயர் கல்வி பெறும் வசதியைப் பெண்கள் பெற்றுள்ளனர். வெளியில் செல்வதும், சொந்தக் காலில் நிற்பதும் தற்போது சாத்தியமாகியுள்ளது. ஆண்களின் சகல தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் பெண்களுக்கு தற்போது இல்லை. இதன் காரணமாக ஏற்படும் மோதல்களே விவாகரத்துக்குக் காரணமாகி விடுகிறது என்பதனால் பெண்களால்தான் விவாகரத்துக்கள் ஏற்படுகின்றன என்று கூறுபவர்களின் வாதமாக அமைந்துள்ளது.

விவாகரத்து என்பது இருபாலாரிலும் உள்ளது. விட்டுக்கொடுப்பு மற்றும் புரிந்துணர்வுடன் செயற்பட்டாலே வாழ்க்கையில் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும். காதலிக்கும்போது இருந்த விட்டுக்கொடுப்புக்கள், புரிந்துணர்வுகள் திருமணத்தின் பின்னர் காணாமற் போய்விடுகின்றன. இவையும் மண முறிவுக்குக் காரணமாகின்றன. மேலும் கணவனும் மனைவியும் பிரிந்தால் பாதிக்கப் படுவது அவர்கள்தான். ஆனால் அவர்கள் பெற்றோராகிய பின்னர் பிரிந்தால் அந்தப் பிஞ்சுக் குழந்தைகளே பாதிக்கப்படுகின்றன.



ஒரு காலத்தில் எல்லாமே கணவர்தான் என்று கணவன் பின்னால் திரிந்த பெண்கள் சுயமாக உழைக்க ஆரம்பித்து சொந்தக் காலில் நிற்க ஆரம்பித்த நாளிலிருந்து அவர்களிடம் ஆண்களுக்கு அடங்கிப் போகும் தன்மை குறைவடைந்துவிட்டது. இதைப் பெண்கள் சிலர் மறுத்தாலும் சிந்தித்துப் பார்த்தால் யதார்த்தம் விளங்கும்.

ஈகோ என்ற விடயம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டியது. சிறிய சண்டைகள் பெரிதாவதற்கு முக்கியகாரணமாக இந்த ஈகோ அமைந்து விடுகின்றது. சின்னச் சண்டை ஏற்படுமாயின் கணவனும், மனைவியும் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதால் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஆனால் அது நடைபெறுவதில்லை. நான் எதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டும்? அவர் கேட்டால் என்ன? என்ற இடத்தில் நிற்கின்றது ஈகோ. பெண்கள் விட்டுக்கொடுத்தால் குறைந்து விடமாட்டார்கள். தமது கணவனிடம், மன்னிப்புக் கேட்பதற்கு தயக்கம் ஏன்?

உறவுகள் பிரிதல் என்பது அவ்வளவு சுலபமானதல்ல. திருமண வாழ்வில் விரக்தி கண்டவர்கள் தமது உணர்வுகளை யாராவது புரிந்து கொள்ளமாட்டார்களா என்ற எதிர்பார்ப்புடன் வாழ்வார்கள். உறவுகள் பிரிவதால் ஏற்படும் மன வேதனையை நரகத்துக்குச் செல்பவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். நரம்புகள் அறுபடும் வலி என்றால் கூட மிகையில்லை. ஆனால் இது மிகவும் கொடுமையானது.

சாதாரணமாக பாடசாலை, பல்கலைக்கழகம், பணியிடம் என வாழ்க்கைப் பாதையில் பல பிரிவுகளைச் சந்திக்க நேரிடுகின்றது. ஆனால் மனம் ஒத்து விவாக பந்தத்தில் இணைந்து பின்னர் பிரிவதென்பது வார்த்தைகளால் சொல்ல முடியாத வலியை ஏற்படுத்துவது. ஒருவரை நிராகரிக்க ஒரு காரணத்தைக் கண்டுபிடிக்கும் நாம் ஒருவரை ஏற்றுக்கொள்ள ஆயிரம் காரணம் இருந்தாலும் அதைப் பரிசீலிக்கத் தவறுகின்றோம். ஒன்றை அழிக்க ஆயிரம் வழி இருக்கும் நிலையில் இணை சேர்க்க ஒரு வழியாவது இருக்காதா? நிச்சயமாக இருக்கும். நாம் நினைத்தால் மண முறிவோடு மன முறிவையும் சேர்த்தே தவிர்க்கலாம்.

# ‘காவி அங்கிகளை களைந்து விட்டு தார்பூச வேண்டும் இந்த பௌத்த துறவிகளுக்கு’

*தமது கூற்றினால் கொதித்தெழுந்த தேரர்களைச் சாமர்த்தியமாகச் சமாளித்து அனுப்பினார் சேர். ஜோன் கொத்தலாவலை*

■ லங்காதீப பத்திரிகையிலிருந்து சரா

1956 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் சமயத்தில் நாட்டின் பிரதமரான சேர். ஜோன் கொத்தலாவலையே காபந்து பிரதமராக இருந்தார். அவருக்கு எதிரான பிக்குகள் தலைமையில் பௌத்தர்கள் திரண்டிருந்தனர்.

"துன்மார்க்கத்தில் ஒழுகும் பௌத்த துறவிகளின் காவி உடைகளைக் களைந்து விட்டு அவர்கள் மீது தாரைப் பூச வேண்டும்" என்று சேர். ஜோன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார்.

அவரின் அந்த ஆவேச கூற்று அவருக்கு எதிராகப் பௌத்தர்கள் கிளர்ந்தெழக் காரணமாகி விட்டது. ஆனாலும் தாம் அவ்விதம் கூறியிருந்த வார்த்தைகளுக்கு, அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த பௌத்தர்களின் தீவிரமான எதிர்ப்பை அவர் கவனத்தில் கொள்ளவில்லை.

இந்த நிலையில் ஒரு நாள் பெரும் எண்ணிக்கையான பௌத்த தேரர்கள் அலரிமாளிகைக்குள் பிரவேசிப்பதற்கு ஆவேசத்துடன் வந்திருந்தனர்.



அதனால் அலரி மாளிகையின் வாயில் கதவுக்கு அருகில் பெரும் குழப்பமான நிலைமை காணப்பட்டது. அங்கு பொலிஸார் வழியைத் தடை செய்திருந்தனர். அதனால் அங்கு கொந்தளிப்பான பதற்றமான நிலை நிலவியது. இந்தப் பாரதூரமான நிலைமையை உணர்ந்து கொண்ட பிரதமரின் செயலாளரான பிரட்மன் வீரக்கோன் திகைத்து நின்றார். உடனடியாகவே அதுபற்றிப் பிரதமர் சேர். ஜோனுக்குத் தகவல் தெரிவித்தார். அதற்கு அவர் எதற்காக அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று சர்வ சாதாரணமாகக் கேட்டார் "தங்களைச் சந்திப்பதற்காக" என்றார் பிரட்மன். வாசலைக் குறுக்காக மூடிக் கொண்டிருந்தால் எப்படி அவர்களால் வர முடியும்? "வாசலைத் திறந்து பின்புறமுள்ள மைதானத்தில் கதிரைகளைப் போட்டு தேரர்கள் அங்கு அமர்வதற்கு ஒழுங்கு செய்யுங்கள் என்று செயலாளரைப் பணித்த சேர். ஜோன் கொத்தலாவலை, சற்று நேரத்தில் அங்கு நான் வருகிறேன்" என்றார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து "சிங்களம் மற்றும் தமிழுக்கு சம அந்தஸ்த்து வழங்கப்படும்" என பாராட்டத்தக்க விதத்தில் கருத்து வெளிப்படுத்தியிருந்த சேர். ஜோன் துன்மார்க்க பௌத்த துறவிகளின் "காவி அங்கிகளைக் களைந்து தார் பூச சேண்டும்" என பௌத்த துறவிகளை சிறுமைப்படுத்தும் விதமாகக் கூறியிருந்தார். இதன் காரணமாக எழுந்த எதிர்ப்பே

## இப்படியும் நடக்கிறது

பௌத்த தேரர்களை சேர். ஜோனுக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்ததுடன் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக அங்கே வந்திருந்தனர்.

இது எங்கு போய் முடியப்போகிறதோ? என்ன அசம்பாவிதம் நடக்குமோ? என்ற திகிலுடனேயே காணப்பட்டார் பிரதமரின் செயலாளரான பிரட்டன் வீரக்கோன். பௌத்த தேரர்களை மைதானத்தில் அமர்த்திவிட்டு அவர்களுக்கு முன்னால் மேலுமொரு விசேடமான கதிரை வைக்கப்பட்டிருப்பதை தூரத்தில் வரும்போதே அவதானித்தார் சேர். ஜோன். கதிரைகளை ஒழுங்குபடுத்தியிருந்த உத்தியோகத்தர் தேரர்களின் முன்னால் பிரதமர் அமர்ந்து கொள்வதற்கே அவ்விதம் அந்தக் கதிரையை வைத்திருந்தார்.

மதம் பிடித்த யானையொன்றைப் போன்று அந்தக் கதிரையின் அருகில் சென்ற சேர். ஜோன், யாரடா இந்தக் கதிரையை இங்கே வைத்தது? துறவிகளின் முன்னால் சாமானியர்கள் கதிரைகளில் அமர்வதில்லை என்பது கூடத் தெரியாதா? அன்று கர்ச்சித்தவாறே வேகமாக உதையொன்றை விட்டார் கதிரைக்கு. கதிரை சிறிது தூரம் ஆகாயத்தில் பறந்து அங்கிருந்த மலர்ச் செடியொன்றின் மீது விழுந்தது. அதன் பின்னர் எதுவும் நடக்காதது போன்று தேரர்களை வணங்கி நின்று, அவர்களிடம் விடயங்களைக் கேட்டறிந்தபோதே பௌத்த தேரர்களின் ஆவேசம் காற்றில் பறந்து போயிருந்தது. பௌத்த தேரர்களின் கருத்துகளுக்கு செவிமடுத்த சேர். ஜோன் திரும்பவும் "தங்களைப் போன்ற தர்மவழி நிற்கும் பௌத்த துறவிகளுக்கு நான் எப்போதுமே மதிப்பளிப்பேன் என்றாலும் கூட, துன்மார்க்க பௌத்த துறவிகள் சம்பந்தமான எனது கருத்தை மாற்றிக் கொள்ளத் தயாரில்லை" என்று கூறினார்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**:அலுவலகத்தில் மேலதிகாரிகளுடன் கவனமாகப் பழகுவது நல்லது. குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும். குடும்ப உறுப்பினர் உடல்நிலையில் கவனம் தேவை. வேலைப்பளு அதிகரிக்கும்



**இடபம்**: கடன் விவகாரங்களில் யோசித்து செயற்படுவது நல்லது. பெண்கள் எதிலும் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது நல்லது. கடிதப் போக்குவரத்து மூலம் நல்ல தகவல் வரும். வீண் மனச் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும்.



**மிதுனம்**: எதிர்ப்புகள் அகலும், மனதில் தைரியம் உண்டாகும். எதிர் பாராத திருப்பம் உண்டாகலாம். புதிய நண்பர்கள் சேர்க்கை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.



**கடகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு வேலை மாற்றம் உண்டாகும். குடும்பத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.



**சிங்கம்**: உறவினர்கள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். பெண்கள் திறமையாகச் சமாளித்து எந்தப் பிரச்சினையிலும் சாதகமான முடிவைப் பெறுவீர்கள். இழுபறியாக இருந்த காரியங்களில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும்.



**கன்னி**: எல்லாக் காரியங்களிலும் நன்மை உண்டாகும். செய்தொழில் சிறக்கும். நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணங்களால் வீண் அலைச்சலும் செலவும் ஏற்படலாம்.



**துலாம்**: மேலதிகாரிகளின் ஆதரவை உத்தியோகத்தர்கள் பெறுவார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். வியாபாரம் தொடர்பான பயணங்களால் அலைச்சல் உண்டாகலாம். எதிர்பார்த்த பலன் தாமதப்படும்.



**விருச்சிகம்**: பிள்ளைகளின் திறமைகண்டு மனமகிழ்ச்சி கொள்வீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும், செலவும் ஏற்பட்டாலும் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.



**தனுசு**: எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை உண்டாகும். எல்லாக் கஷ்டங்களும் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதக மாக முடியும். வீண் அலைச்சல் உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். மன அமைதியைப் பாதிக்கும் படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும்.



**மகரம்**: நண்பர்களிடம் கவனமாகப்பேசிப் பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.



**கும்பம்**: எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். தேவையற்ற மனச் சஞ்சலத்தை உண்டாக்கலாம். அதனால் எந்த ஒரு வேலைபற்றியும் அதிகம் யோசிப்பதைத் தவிர்ப்பது நல்லது. திடீர் பணத் தேவை உண்டாகலாம்.



**மீனம்**: வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும்.

## நாளை

**ஆவணி-19 வியாழக்கிழமை | 04.09.2014**

திதி: தசமி மு.இ.07.57 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப.12.54 வரை
சுபநேரம்: 07.35-09.05 வரை
இராகுகாலம்: 01.35-03.05 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### யார் மூலம் ஆன்மிகத்தை பெறுகிறோமோ அவரே உண்மையான குரு

யார் மூலம் ஆன்மிக உணர்வை நாம் அடைகிறோமோ, அவரே உண்மைக் குரு. ஆன்மிகப் பெருவெள்ளம் நம்மிடம் பாய்வதற்கு அவர் ஒரு கருவியாக அமைகிறார். ஆன்மிகப் பேருலகுடன், நம்மை அவர் இணைத்து வைக்கிறார். தனி மனிதர் ஒரு வரை அளவுக்கு மீறி நம்புவது பலவீனமாகும்; அது உருவவழிபாடாகஅமைந்து விடும். தீவிரமான குரு பக்தி, ஆன்மிகத் துறையில் விரைவில் முன்னேற உதவுகிறது. புறத்தில் இருக்கும் குரு, அகத்தில் இருக்கும் குருவுடன்நம்மைஇணைத்து வைக்கிறார். உண்மையான குரு இருந்தால் அவரை வணங்கு.குருபக்தி,உன்னை விரைவில் உயர்ந்த நிலைக்குச் செலுத்தும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் குழந்தையைப் போல்தூயவராக இருந்தார். பணத்தை ஒரு போதும் அவர் தொட்டது இல்லை. காம உணர்வு அறவே அவரிடம் கிடையாது. பெரிய மகான்களிடம் பௌதிக விஞ்ஞானத்தைத் தெரிந்து கொள்வதற்காக நீங்கள் செல்ல வேண்டாம். அவர்களுடைய ஆற்றல் அனைத்தும் ஆன்மிகத் துறையில் செலுத்தப்பட்டுள்ளது; ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரிடத்தில், மனித இயல்பு முற்றிலும் மறைந்து போய், தெய்வீக இயல்பு மட்டுமே எஞ்சி நின்றது. பாவத்தை அவரால் காண முடியாது. தீயவற்றைக் காண இயலாத அளவுக்கு அவருடைய கண்கள் தூய்மை பெற்று இருந்தன, இது முற்றிலும் உண்மை. இத்தகைய பரமஹம்சர்களின் தூய்மையால்தான் உலகம் இணைந்து செயற்படுகிறது. அவர்கள் அனைவரும் இறந்துஇந்தஉலகை விட்டுப் போய் விடுவார்களானால், உலகம் சுக்கல் சுக்கலாக உடைந்து போய் விடும். தங்கள் இருப்பு ஒன்றினாலேயே அவர்கள் நன்மை புரிகின்றனர். தாங்கள் நன்மை புரிவது அவர்களுக்குத் தெரியாது, இயல்பான நிலையிலே அவர்கள் உள்ளனர்..

## சிவப்பு இறைச்சியால் பேரழிவாம்



மேற்கத்தைய நாட்டினர் அதிக அளவில் சிவப்பு இறைச்சிகளை உணவாக உட்கொள்கின்றனர். அவர்கள் இந்த வகை இறைச்சியை வழமைக்கு மாறாக குறைந்த வீதத்தில், வாரத்தில் இரண்டு முறைகள் மட்டும் உள்ளெடுத்தால் சூழலைப் பாதுகாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கேம்பிறிஜ் மற்றும் அபேடீன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இணைந்து மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

மேற்கத்தைய நாட்டவர்களால் அதிகளவில் உட்கொள்ளப்படும் சிவப்பு இறைச்சிக்கு ஏற்ப பண்ணையாளர்களால் கால் நடைகளை அதிகளவில் உற்பத்தி செய்ய முடிவதில்லை.

அதனையும் மீறி உற்பத்தி செய்ய முனைந்தால் சூழலுக்கு பேரழிவு ஏற்படும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் பசளைப் பாவனை, கால்நடைகளால் வெளியேற்றப்படும் மீதேன் வாயு என்பனவற்றின் அளவு 2050 ஆம் ஆண்டளவில் 80 சதவீதமாக அதிகரிக்கும் என்று எச்சரித்துள்ளனர்.

இதேவேளை தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கார்பன் அளவினை பூச்சிய அளவுக்குக் கொண்டு வருமாறு முன்னர் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | | | | | | 3 | |
| 5 | | 1 | | 6 | | | 9 | 4 |
| 7 | | 3 | | 9 | 4 | 1 | 2 | |
| | | 2 | | 7 | | | 1 | |
| | | | | 5 | | | | |
| | 3 | | | 4 | | 6 | | |
| | 5 | 4 | 7 | 2 | | 9 | | 1 |
| 6 | | | | 3 | | 7 | | 2 |
| | 7 | | | | | | 5 | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 1 | 6 | 9 | 2 | 4 | 7 | 3 |
| 7 | 6 | 4 | 8 | 5 | 3 | 1 | 9 | 2 |
| 2 | 3 | 9 | 1 | 4 | 7 | 6 | 8 | 5 |
| 5 | 1 | 6 | 7 | 2 | 9 | 3 | 4 | 8 |
| 9 | 8 | 2 | 3 | 1 | 4 | 5 | 6 | 7 |
| 4 | 7 | 3 | 5 | 6 | 8 | 2 | 1 | 9 |
| 1 | 9 | 8 | 2 | 3 | 6 | 7 | 5 | 4 |
| 3 | 4 | 5 | 9 | 7 | 1 | 8 | 2 | 6 |
| 6 | 2 | 7 | 4 | 8 | 5 | 9 | 3 | 1 |

# கே.ஸி.ஸி.ஸி. கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஜொனியன்ஸ்ஸை வீழ்த்தியது பற்றீசியன்ஸ்

யாழ்ப்பாணம்,செப்.3

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி ஒரு இலக்கினால் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 26 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் காண்டீபன் 51 ஓட்டங்களையும், அச்சுதன் 21 ஓட்டங்களையும், அகிலன் 15 ஓட்டங்களையும், றஜத்தன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் பற்றீ சியன்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் லிவிங்ரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 5 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், பத்மமுரளி 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், நோபட் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

162 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 29.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். இதில் ரயுடா 66 ஓட்டங்களையும், நோபட் 34 ஓட்டங்களையும், பத்மமுரளி 24 ஓட்டங்களையும், தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொனி யன்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் அகிலன் 5.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீச்சில் 39 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், பிரிந்தா பன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சஞ்சேயன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், லவேந்திரா 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர். (ரி-23)

## இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம்,செப்.3

அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

## காலிறுதியில் உடுவில் மகளிர் கல்லூரி

வலி.வடக்கு,செப்.3

கொழும்பு கால்ரன் விளையாட்டுக்கழகத்தினால் அகில இலங்கைப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி காலிறுதியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

கொழும்பு கால்ரன் விளையாட்டு மைதானத்தில் கடந்த மூன்று நாட்களாக சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் முதல் சுற்றுப்போட்டிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் உடுவில் மகளிர் கல்லூரி காலிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரிக்கும் அம்பலாந்தோட்டை தர்மஅசோகா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 12:6 புள்ளிகள் என்ற அடிப்படையில் தர்மஅசோகா வித்தியாலயத்தை வெற்றி பெற்றது.

உடுவில் மகளிர் கல்லூரிக்கும் குருநாகல் மரியஸ்ரெலா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 19:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் மரியஸ்ரெலா வித்தியாலயத்தை வெற்றி பெற்றது.

கண்டி சென்அன்ரனீஸ் மகளிர் கல்லூரிக்கும் உடுவில் மகளிர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 20:6 புள்ளிகள் என்ற அடிப்படையில் தோல்வியைத் தழுவிக் கொண்டது. (ரி-86,23)



## கிரிக்கெட் சங்க அங்குரார்ப்பணம்



யாழ்ப்பாணம்,செப்.3

மன்னார் மாவட்ட கடினப் பந்து கிரிக்கெட் சங்க அங்குரார்ப்பண வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆகாஸ் விருந்தினர் விடுதியில் மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி பரிசுத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர் ஜெறட், மன்னார் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் ஜோசப் பீரிஸ், மன்னார் மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் உப செயலாளர் ஜெயதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் தலைவராக பி.அருளும், உப தலைவர்களாக கே. வேங்கைமாறன், தே. கோபாலப்பிள்ளை, த.ஜெயக்குமார் மற்றும் எம். என்.என்.றியாஸ் ஆகியோரும், செயலாளராக அமலராஜனும், உப செயலாளராக லூஸ்ரினும், பொருளாளராக லங்கேஸ்வரனும், உபபொருளாளராக ஐ.எம். ஜக்சனும் தெரிவு செய்யப்பட்டனர். (ரி-23)

## துள்ளுவின் அதிரடி ஹட்ரிக் கோல்கள் அரையிறுதிக்குள் திக்கம் இளைஞர்கள்

கரணவாய்,செப்..3

துள்ளு அதிரடியான ஹட்ரிக் கோல்கள் போட 3:0 என்ற கோல்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்.

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணிமன்ற ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் லீக் சுற்றில் அணிகள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப் படையில் சிறந்த அணியைத் தெரிவு செய்வதற்கான தகுதிகாண் ஆட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதில் முதலாவது தகுதிகாண் சுற்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

லீக் சுற்றில் இரு அணிகளும் மாறி மாறி வெற்றி கொண்ட நிலையில் சமபலத்துடன் களமிறங்கியதால் இரு அணி ரசிகர்களிடமும் பெரும் எதிர்பார்ப்புகள் காணப்பட்டன. ஆரம்பத்தில் இரு அணியினரும் அசத்தலாக ஆடி அணிகளின் ஆதரவாளர்களைக் மகிழ்ச்சிப்படுத்தினர். இடைவேளை வரை இரு அணியினரும் எதிரணியின் தடுப்புச் சுவர்களைத் தாண்டி கோல் போடுவதற்கு பலமுயற்சிகளைமேற்கொண்ட போதும் அவை பயனற்றுப் போக ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து இடைவேளையின் பின் திக்கம் இளைஞர் அணியின் நட்சத்திரவீரர் துள்ளு 2ஆவது, 7ஆவது மற்றும் 9ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து ஹட்ரிக் கோல்களைப் போட நவஜீவன்ஸ் அணியினர் நிலைகுலைந்தனர். இறுதியில் 3:0 என்ற கணக்கில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த கட்டத்துக்கு முன்னேற நவஜீவன்ஸ் அணி நான்காமிடத்தைப் பெற்றுக் கொண்டது. (ரி-108)

## வதிரி டைமன்ஸை வெற்றி கொண்ட குப்பிளான் விக்கினேஸ்வரா



வலி.வடக்கு,செப்.3

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரனையுடன் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வடமராட்சி வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகமும் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாக காணப்பட்ட நிலையில் கடும் போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று போட்டியை சமப்படுத்திய நிலையில் போட்டி முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் 5:4 கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது. (ரி-86)

## சம்பியனானது ஸ்கந்தபுரம் ஸ்கந்த

யாழ்ப்பாணம்,செப்.3

கிளிநொச்சி மாவட்ட தொற்றா நோய்த் தடுப்புப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஸ்கந்தபுரம் ஸ்கந்த விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸகந்தபுரம் ஸ்கந்த விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஸ்கந்தபுரம் ஸ்கந்த விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

சமபலத்துடன் இரண்டு அணியினரும் மோதிக் கொள்ள ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. வீரர்கள் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்கு கடுமையாகப் போராடிய போதும் இரண்டு அணியினரும் முதற்பாதி ஆட்டம் முடியும்வரை தமது அணிக்கான கோல்களைப் பெற்றுக் கொள்ளவில்லை. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணிகளும் ஆட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொண்டு மோதிக் கொண்டனர். இரண்டாவது பாதி ஆட்டத்திலும் எந்த அணியினரும் தமக்கான கோல்களைப் பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் ஸ்கந்தபுரம் ஸ்கந்த விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

ஆட்டத்தின் சிறந்த வீரராக ஸ்கந்தபுரம் ஸ்கந்த விளையாட்டுக்கழக அணி வீரன் கிறிஸ்ரியும் சிறந்த கோல் காப்பளாராக உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி வீரன் குணெஸ்ஸும் தெரிவு செய்யப்பட்டனர். (ரி-23)

# அதிரடியான போராட்டம் வீணாக பழிதீர்த்தது ஆஸ்திரேலியா




தனித்து நின்று அதிரடியாக ஆடிய டு பிளசிஸின் போராட்டம் வீணாக, தென்னாபிரிக்காவை 62 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றி பெற்றது ஆஸ்திரேலியா. இதன் மூலம் முன்னதாக நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்காவிடம் வாங்கிய அடிக்கு பதிலடி கொடுத்து பழிதீர்த்துள்ளது ஆஸ்திரேலியா.

சிம்பாப்வேயில் நடைபெற்று வரும் முத்தரப்பு தொடரின் நேற்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்காவும், ஆஸ்திரேலியாவும் மோதிக் கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமான தொடக்கத்தை அளித்தனர். முதலாவது இலக்குக்காக ஆரோன் பிஞ்ச் 16 ஓட்டங்களுடன் வெளியேறினார். துடுப்பாட்ட வரிசையை மாற்றி முன்னதாகவே களமிறங்கிய ஸ்டீவன் சிமித், மறுமுனையில் அசத்தலாக ஆடிக்கொண்டிருந்த பிலிப் ஹியூஜஸ்ஸுடன் இணைந்து கொண்டார். இருவருக்கும் இடையில் இரண்டாவது இலக்குக்காக 85 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த போது சிமித் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து உள்நுழைந்த மக்ஸ்வெல் 2 ஓட்டங்களுடனும், ஹியூஜஸ் 86 ஓட்டங்களுடனும் வெளியேறினர். அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியா 41.2 ஓவர்களில் 5 இலக்குகளைப் பறிகொடுத்து 187 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தடுமாறியது. இறுதி நேரத்தில் மிச்செல் மார்ஷ் அதிரடியாக ஆடி 51 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 86 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தார். இதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆஸ்திரேலிய அணி 7 இலக்குகளை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் தென்னாபிரிக்காவின் பாங்கிசோ 2 இலக்குகளையும், ஸ்ரெய்ன், மோர்க்கல், தாகிர், மக்லெரன் ஆகியோர் ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி துடுப்பாட்டத்தில் ஏமாற்றியது. சீரான இடைவெளிகளில் அடுத்தடுத்து இலக்குகள் வீழ்த்தப்பட டு பிளசிஸ் மாத்திரம், தனித்து நின்று அதிரடியாகப் போராடினார். இறுதிக் கட்டத்தில் அவரும் 'ஹிட் விக்கெட்' முறையில் ஆட்டமிழக்க தென்னா பிரிக்காவின் தோல்வி உறுதியானது. 44 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 220 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் ஆஸ்திரேலிய அணி 62 ஓட்டங் களால் வெற்றி பெற்றது. தென்னாபிரிக்கா சார்பாக டு பிளசிஸ் 109 பந்துகளை எதிர் கொண்டு 6 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 126 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் ஆஸ்திரேலியாவின் ஜோன்சன், ரிச்சர்ட்சன், மார்ஷ், மக்ஸ்வெல் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக ஆஸ்திரேலியாவின் மிச்செல் மார்ஷ் தெரிவானார்.

(ரி)



## டோனியை குறிவைக்கும் உத்தப்பா

உள்ளூர் தொடர்களில் திறமையை நிரூபித்து விரைவில் இந்திய அணியில் இடம் பிடிப்பேன். தேவைப்படும் பட்சத்தில் இலக்குக் காப்பாளராகவும் களமிறங்குவேன் என்று இந்திய வீரர் ரொபின் உத்தப்பா தெரிவித்துள்ளார்.

28 வயதாகும் ரொபின் உத்தப்பா சிறந்த துடுப்பாட்ட வீரராக விளங்குவதுடன் இலக்குகாப்பாளராகவும் விளையாடி வருகிறார். ஆனால் அணியில் நிரந்தர இடம் பிடிக்க முடியாமல் தவிக்கிறார். இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து காயம் காரணமாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா இடைவிலகினார். மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சிகார் தவானின் சமீபத்திய செயல்பாடுகளும் சிறப்பாக இல்லை. இதனால் இந்திய அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களுக் கான இடம் நிரந்தரம் இல்லாமல் உள்ளது. இந்த நிலையில் இந்த இடத் தைப் பிடிக்கப் போவதாக உத்தப்பா தெரிவித்துள்ளார்.

இது குறித்து உத்தப்பா கூறுகையில்:-
இந்திய அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களுக்கான இடம் வெறுமையாகவே உள்ளது. நடந்து முடிந்த உள்ளூர் ஆட்டங்களில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளேன். இதேபோல அடுத்து வரவுள்ள ரஞ்சிக்கிண்ணம், ஐ.பி.எல். போன்ற உள்ளூர் தொடர்களில் திறமையை நிரூபித்து, விரைவில் இந்திய அணியில் இடம் பிடிப்பேன். இதற்கான தகுதி என்னிடம் உள்ளது. தேவைப்படும் பட்சத்தில் இலக்குக் காப்பாளராகவும் களமிறங்குவேன். அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் இடம் பிடிப்பது முதல் இலக்கு. விரைவில் சம்பியன்ஸ் லீக் தொடருக்காக, கொல்கத்தா அணியுடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்ள உள்ளேன் என்று அவர் கூறினார்.

(ரி)

## இங்கிலாந்தை பந்தாடி தொடரை தன்வசப்படுத்தியது இந்தியா




இங்கிலாந்தின் பெர்மிங்காமில் நடைபெற்ற நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியைப் பந்தாடிய இந்திய அணி 9 இலக்குகளால் வெற்றியீட்டியது. ஏற்கனவே தொடரின் இரண்டு ஆட்டங்களை வென்றிருந்த இந்திய அணி இந்த வெற்றியின் மூலம் ஒருநாள் தொடரை தன்வசப்படுத்தியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதன்படி முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி ஆரம்பத்திலேயே தடுமாறியது. 23 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறிய இங்கிலாந்து அணியை ரூட், மோர்கன் ஜோடி தூக்கி நிறுத்தியது. இறுதி நேரத்தில் மொயின் அலியும் அதிரடியாக ஆட இங்கிலாந்து அணி 206 ஓட்டங்களைக் பெற்று கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டது. துடுப்பாட்டத்தில் மொயின் அலி 50 பந்துகளை முகங்கொண்டு 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 67 ஓட்டங்களையும், ரூட் 44 ஓட்டங்களையும், மோர்கன் 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் மொகமட் சமி 3 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார், ஜடேஜா தலா 2 இலக்குகளையும், அஸ்வின், ரெய்னா தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

207 எனும் இலகுவான இலக்கைத் துரத்திய இந்திய அணியின் வெற்றியை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் உறுதி செய்தனர். இங்கிலாந்து அணியின் பந்து வீச்சை அடித்து நொருக்கிய ரகானே, தவான் ஜோடி முதலாவது இலக்குக்காக 183 ஓட்டங்களைப் பரிமாறிக் கொண்டனர். 30.3 ஓவர்களில் வெற்றி இலக்கைக் கடந்த இந்தியா 9 இலக்குகளால் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் 100 பந்துகளை எதிர்கொண்ட ரகானே 4 சிக்ஸர்கள், 10 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 106 ஓட்டங்களையும், ஆட்டமிழக்காமல் களத்திலிருந்த தவான் 81 பந்துகளை எதிர் கொண்டு 4 சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 97 ஓட்டங்களையும், விராட் கோஹ்லி ஒரு ஓட்டத்தையும் பெற்றுக் கொண்டனர். ஆட்ட நாயகனாக சதமடித்து அசத்திய இந்திய வீரர் ரகானே தெரிவானார்.

(ரி)



# இந்தியாவில் மின்னல்

உலகின் மின்னல் வேக மனிதர் என்று அழைக்கப்படும் உசைன் போல்ட் நேற்று இந்தியாவை அடைந்துள்ளார். பெங்களூரில் உள்ள அவர் நேற்று மாலை அங்கு நடைபெற்ற கண்காட்சிக் கிரிக்கெட் ஆட்டத்தில் பங்கேற்றார். ஜமெய்க்காவைச் சேர்ந்த உசைன் போல்ட் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் அசைக்க முடியாத சம்பியன் ஆவார். உலகின் அதிவேக மனிதர் என்ற பெயரையும் பெற்றவர் உசைன் போல்ட்.

விளையாட்டு வீரர்களுக்கான சப்பாத்தினை தயாரிக்கும் தனியார் நிறுவனமான 'பூமா' ஏற்பாடு செய்த அணிக்கு தலா 7 வீரர்கள் கலந்து கொள்ளும் 4 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் ஆட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே அவர் இந்தியாவுக்கு சென்றுள்ளார்.

முன்னதாக பெங்களூரைச் சென்றடைந்த போல்ட்,தனது டுவிட்டரில் இந்தியா சென்றடைந்ததை குறிப்பிட்டிருந்தார். அத்துடன் மைசூர் தலைப்பாகை அணிந்து நூதனமான தோற்றத்துடனான ஒளிப்படத்தைப் பதிவேற்றம் செய்திருந்தார். இன்னொரு டுவிட்டில் யுவராஜ் சிங்கை குறியிட்டுள்ள அவர் ஹேய் யுவராஜ் சிங்.. நான் உன் பக்கத்தில் இருக்கிறேன். கொஞ்சம் கிரிக்கெட்டில் மோதிப் பார்க்கலாமா என்று யுவராஜை விளையாட்டாகச் சீண்டியுள்ளார். குறித்த நிறுவனத்தின் விளம்பர தூதுவராக, யுவராஜ்ஜும் உள்ளார்.


இந்தியாவுக்கு போல்ட் வருவது இதுவே முதல் முறையாகும். போல்ட் தடகள வீரராக இருந்தாலும் கூட கிரிக[illegible] ஆர்வமுள்ளவர். தான் தடகளத்திற்கு வந்திருக்காவிட்டால் தற்போது வேகப்பந்து வீச்சாளராக வலம் வ[illegible] என்று ஏற்கனவே அவா பலமுறை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீடு வாடகைக்கு உண்டு

மத்திய கல்லூரி முன்பாக கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு உண்டு.
0770278780

(51626)


# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை கதிரேசு

(எள்ளுக்காடு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் பூசகர்)

பருத்தித்துறை புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 447, சக்திபுரம் உருத்திபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கதிரேசு நேற்று (02.09.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சமியின் அன்புக் கணவரும், இரவிச்சந்திரகுமார் (மாவட்டச் செயலகம், கிளிநொச்சி & யாழ்ப்பாணம்), ஸ்ரீ நந்தகுமார் (மாரியம்மன் களஞ்சியம், உருத்திரபுரம்), ஜெயராஸ்குமார், உதயரஞ்சகுமார் (சக்திபுரம்), உதயவிஜயகுமாரி (பிராந்திய சுகாதார பணிமனை-கிளிநொச்சி), காலஞ்சென்ற தேவசசிகுமார், சிவசக்தியகுமார் (கரைச்சி தெற்கு ப.நோ. கூ.ச) இந்திரகுமார் (சக்திபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபனின் (அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சி) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2014) மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று [illegible] உருத்திரபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உருத்திரபுரம். (47865) (10.6) தகவல்: குடும்பத்தினர்.


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## யாழ் மாவட்ட உருளைக்கிழங்கு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 2014 காலபோக உருளைக்கிழங்குச் செய்கை

மேற்படி கிழங்குச் செய்கையில் ஈடுபட இருக்கும் விவசாயிகள் 15.09.2014ஆம் திகதிக்கு முன்னர் விவசாய சம்மேளனம் ஊடாக அந்தந்த பிரதேசத்தில் உள்ள உருளைக்கிழங்குச் சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர் :
இ.தெய்வேந்திரம்

(51621)

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாதேவி சபாநாயகம்

வட்டுக்கோட்டை மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சபாநாயகம் நேற்று (02.09.2014) செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்-சந்திரகாந்தி தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சபாநாயகத்தின் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், விவசாய திணைக்களம்) அன்பு மனைவியும், சிவகுமார் (ஓய்வுநிலை வர்த்தகவங்கி), றசினா, சந்திரசேகரன் [illegible] சியம்), [illegible] வலிமேற்கு பிரதேச செயலகம்), விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் வீதி, வட்டுக்காட்டை,
தொ.பேசி: 021 225 0656

(C/15675) (10.6) தகவல்: குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
13.06.1925

மறைவு
04.08.2014



கடந்த 04.08.2014 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

### அருணாசலம் செல்வரட்ணம்

அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (03.09.2014) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பம் சமேதரராய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணை ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(51623) (10.6)


## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல நகைவிற்பனை நிலையத்திற்கு G.C.E (A/L) படித்த பணியாளர்கள் தேவை, சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

லலிதா ஜுவலறி
இல.75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(E/15667) (12.3.6)

## வீடு விற்பனைக்கு

நாவற்காடு, வரணியில் 3½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. 2 அறைகள், சமையலறை, மலசல கூடம், கிணறு ஆகிய வசதிகள் உண்டு. மின்சார வசதி உடன் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் உண்டு. சுட்டிபுரம் கோயிலுக்கு கிழக்கே ¼ மைல் தூரத்திற்குள் அமைந்துள்ளது.

தொடர்பு: 077 248 7170

(47264) (10.6.3)

## வாடகைக்கு

யாழ். நகர மத்தியில் சிறாம்பியடி என்ற இடத்தினில் ஒரு பெரிய மற்றும் சிறிய அறையோடு அமைந்த வரவேற்பறையுடன் கூடிய சமையலறை மற்றும் குளியல் அறையினைக் கொண்ட தளபாட வசதிகளுடன் அமைந்த சிறிய வீடு. கார் நிற்பாட்டுவதற்கான போர்டிக்கோ வசதிகளை உள்ளடக்கியதும் விரும்பினால் தனியான சிறிய கிணற்றடியினையும் பாவனைக்கெனக் கொண்டது. இங்கிருந்து ரயில் நிலையம் மற்றும் யாழ். வர்த்தக நிலையங்கள் அருகினிலேயேயுள்ளன. மூவரை உள்ளடங்கிய-அரச கரும மற்றும் பாங்க், தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோர் / சிறு குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:0775160291. (முற்பணம் எதிர்பார்க்கப்படும்) (51626)

குறிப்பு : தளபாட வசதிகளுடன் கூடிய அறைபோன்று தனியார் பாவனைக்கெனத் தரப்படும்.


# மரண அறிவித்தல்

## சரவணமுத்து பரராசசிங்கம்

(கஜன் பிறா உரிமையாளர்)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இல.17, உடையார்லேன்,கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பரராச சிங்கம் நேற்று (02.09.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவரத்தினம், கோபாலகிருஸ்ணன் மற்றும் பராசக்தி ஆகியோரின் சகோதரனும் சத்தியநாயகி (கலா-இந்தியா), வரதரா ஜன், பேரின்பநாயகி(சூரிய), உதய குமாரி (உதயா-கனடா) அருட்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திரராஜ் (பிரான்ஸ்), ரஞ்சதாஸ், நடேச மூர்த்தி (கனடா), பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜநிதன்(புனித ஹென் றியரசர் இளவாலை), கயதாரணி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) லிங்கலோஜன் (கோண்டாவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2014)புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும்.

உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(51617)

தகவல்:
குடும்பத்தினர்
078 946 8141

# மரண அறிவித்தல்



## கணபதி தம்பு

நாவலடி,உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும்,பிரபல கட்டட ஒப்பந்தக் காரருமாகிய கணபதி தம்பு நேற்று (02.09.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி-ஆழ்வி தம்பதியரின் அன்புமகனும், வாக்கன்-முத்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் பாசமிகு கணவரும்,காலஞ்சென்றவர்களான வைத்தி, சேது,சின்னப்பிள்ளை,கிட்டினர் ,கார்த்திகேசு ஆகியோரின் சகோதரரும் சிவபாக்கியம், சிவகாந்தா, சிவபத்மா, சிவயோகம், சிவமணி(டென்மார்க்), சிவனேசலிங்கம் (புள்ளி விபரக் கணக்காளர் -திருகோணமலை), சிவராஜலிங்கம்(மாகாணப்பணிப்பாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் -வடமாகாணம்),சிவசோதிலிங்கம் (சுவிஸ்), அமரரான சிவநந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும்,கனகரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபர்),மாசிலாமணி (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), விவேகானந்தன் (ஓய்வுபெற்ற முதலியார்), சீவரத்தினம்(ரெக்னீசியன்), கதிரமலை(டென்மார்க்) ,கமலேஸ்வரி,சாந்தி,கவிதகலா (சுவிஸ்) அருந்தவச்செல்வம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று(03.09.2014) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் வல்லை இந்துமயானத்திற்கு பி.ப 2 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி

c(15671)

தகவல் குடும்பத்தினர்
T.P: 0776160204

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் தேசிங்கராசா


வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தேசிங்கராசா நேற்று (02.09.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம்-பொன்னம்மா தம் பதியரின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகேசு-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், தனுஜா (ஆஸ்திரேலியா), சுகந்தன் (Focus Entertinment), பாமினி (சங்கானை), நிறஞ்சினி (யா/வேலணை மேற்கு, நடராஜா வி.) ஆகியோரின் தந்தையும், தர்மபாலன், சிவபாலன், ரதிதேவி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாநந்தன், ஜெகதீஸ் வரன், றெஜினா, சசிகரன் ஆகியோரின் அன்பு மாமனும், திலக்சன், சங்கீர்த்தன், சகிலன், சுயாந்தன், கஜதீஸ், ஜதுசன், அக்ச ஜன், சாகித்தியா, லிசானி, லதுசானி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2014) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(51631) (10.6) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை சிவலிங்கம்

வேலணைத்துறையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவலிங்கம் நேற்று (02.09.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், திலகவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான நாகராசா-பூரணம் தம்பதியரின் மருமகனும், ரேவதி (லண்டன்), லவன் (லண்டன்), ஜெயமலர், சிவமலர் (பிரான்ஸ்), எழில் வேந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சாந்தலிங்கம், கனகலிங்கம், செல்வலிங்கம் மற்றும் காசிலிங்கம் (பிரான்ஸ்), திருவாசலிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர்), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), இராமலிங்கம் (பிரான்ஸ்), அருந்தவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இராமமூர்த்தி (லண்டன்), கஜந்திகா (லண்டன்), கஜேந்திரன், ஆனந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், கனகசபாபதி, துரைச்சாமி, கிருஸ்ணமூர்த்தி, சிவராசா, பகவதி, பேரின்பம், சரஸ்வதி, பத்மினி, காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் இரத்தினம், ரஞ்சினி, செல்வராணி, வசந்தகுமாரி, தேன்மொழி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், செல்வராசா, கந்தசாமி, நவரத்தினம், குலமணி, பத்மினி, யோகரட்ணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.09.2014) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தாழையம்பதி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலணை தெற்கு, துறையூர். (51629) (10.6) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## வேலாயுதர் முருகேசபிள்ளை

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதர் முருகேசபிள்ளை 31.08.2014 ஆஸ்திரேலியாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர்-செல்லமுத்து தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும், காலஞ்சென்ற பொன்னையா-மனோன்மணி தம்பதியரின் மருமகனும், நளினியின் பாசமிகு கணவரும், வினோத், விஜேய் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறுப்பிட்டியில் வசிக்கும் பேரின்பநாயகி, சந்திரசேகரம் பிள்ளை, அனவரதவிநாயகம்பிள்ளை, பரிமேலழகபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ரஜினி, ராகினி, கிரிதரன், காலஞ்சென்ற முரளிதரன், தாரிணி மற்றும் இலங்கையில் வசிக்கும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் மகேஸ்வரி, கமலாதேவி, தேவரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் கோபால கிருஸ்ணன்,ஸ்ரீ பிரகாசன், வாசுகி, சுகந்திரகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2014) வியாழக்கிழமை காலை 9.45 மணியளவில் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மினி (மருமகள்)
077 075 9509

(c/15673) (10.6) தகவல்: குடும்பத்தினர்.

**விற்பனைக்கு**

அச்செழு, நீர்வேலி பிரதான
வீதியில் , நீங்கைப்புலம் பகுதியில்
6 பரப்பு 6 1/8 குழி காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 968 7745 (சி/15662) (10.6.3)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையின் ஆசிரியர்
சந்திரராசா அவர்களின் பாசமிகு தந்தையார்

**S.நல்லதம்பி**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (61612) (5.6.3)

அதிபர், ஆசிரியர்கள்,கல்விசாரா ஊழியர்கள் நலன்புரி கழகம்
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

**யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - [illegible]**

## பதவி வெற்றிடம்

**பொதுமுகாமையாளர்- 101/07**

11450 - 14500
145X10 - 160X10

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மேலதிக விவரங்களைக் காரியாலய நேரத்தில் பார்வையிட்டு விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 16.09.2014ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல.111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கவும். (சி15664) (12.3.6)

ச.செல்வரத்தினம்,
தலைவர்,
யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம் (வ-து)

# மரக்கன்றுகள் விநியோகித்தல் குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம், செப்.3

வாழ்வின் எழுச்சி (திவிநெகும) வேலைத் திட்டத்தின் ஆறாம் கட்டத்தின் கீழ் பாடசாலைகளில் விவசாயப் பண்ணைகளைத் தாபிப்பதன் கீழ் விதை மற்றும் கன்றுகளை விநியோகிப்பது தொடர்பான செயலமர்வு நாளை மறுதினம் கொழும்பு இசுறுபாய கல்வி அமைச்சின் நான்காம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்த வேலைத் திட்டத்தை மேற்கொள்வது தொடர்பான நிகழ்வில் பங்குபற்ற மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கள், மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விவசாய விடயத்துக்குப் பொறுப்பான கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

"எமது மரக்கறி - எமது தோட்டம்" என்னும் தொனிப் பொருளான இந்த செயற்றிட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏச்.யு.பிரேமதிலக அறிவித்துள்ளார். (வ-9)

# மட்டக்களப்பில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, செப்.3

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கல்லடி பாலத்துக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை ஆணொருவரின் சடலம் மீட் கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்க்கப்பட்டவர் மட்டக்களப்பு நாகையா வீதியை சேர்ந்த ஒரு பிள்ளையின்தந்தையான த.விபிந் திரன் (வயது-39) எனவும், விபிந்திரனுக்கும் மனை விக்கும் இடையில் ஞாயிற் றுக்கிழமை குடும்பத்தகராறு ஏற்பட்டதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி என் . அப்துல்லா விசா ரணை மேற்கொண்டுள்ள துடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லு மாறு உத்தர விட்டுள்ளார். இது தொடர்பிலான மேலதிக விசாரணை களை மட்டக் களப்புபொலிசார் மேற் கொண்டு வருகின்றனர். த-10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
021-5671111

**குறைந்த விலையில் உன்னதமான பயணம்**



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

- Chennai
- Thiruchi
- Delhi
- Bangkok
- Honk Kong
- Paris
- Frankfruit
- Guangzhou
- Narita
- Melbourne
- Toronto
- Sydney
- Madurai
- Bombay
- Singapore
- Malaysia
- Rome
- Dubai
- London
- Zurich
- Perth
- New York
- Auckland
- Doha

**ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்**
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818
Skyline

## மரண அறிவித்தல்

**சின்னத்தம்பி நாகேந்திரம்**



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகேந்திரம் 02.09.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவயோக நாயகியின் அன்புக்கணவரும், மேஜர் நாகராசாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தற்போதைய முகவரி:
ஆலடிச்சந்தி,
கந்தர்மடம். (51615)(6.4.3)

தகவல்:
மகன் நா.அண்ணாத்துரை
சகோதரன் சி.நாகநாதன்
(றஞ்சன்)

## நகராட்சி மன்றம் சாவகச்சேரி கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 15.09.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே தினம் பி.ப 2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளுக்கு தாங்கள் கேள்வி கோரவிரும்பினால் அதற்கான கட்டணத்தை செலுத்தி, கேள்விப்படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT+NBT) |
|---|---|---|---|
| 01 | மீசாலை மேற்கு காத்திகேசு 1ம் வடக்கு வீதி | 12,500.00 | 1140.00 (நகராட்சிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தகாரர்கள் இக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்) |
| 02 | மீசாலை கிழக்கு ஏகாம்பரம் வீதி | 12,000.00 | |

கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சிமன்றத்தில் 12.09.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி செயலாளர், நகராட்சிமன்றம் சாவகச்சேரி என முகவரியிடப்பட்டு, நேரடியாகப் பெட்டியில் இடப்பட வேண்டும். இணைப்பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15,09.2014 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கேள்வியானது உறையிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக் விபரங்களை அலுவலக நேரத்தில் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சி மன்றம்
சாவகச்சேரி.
02.09.2014 (சி/15660) (4.6.3)

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிதம்பரப்பிள்ளை நாகலிங்கம்**
(ஆடம்மான்)

தோற்றம் 18.09.1930 மறைவு 15.08.2013

திதி: பூர்வபக்க அட்டமி
(03.09.2014)

உத்தம குணங்கள் கொண்டீர்
உன்னத வாழ்வு கொண்டீர்
அன்புள்ள கணவனானீர்
பாசமுள்ள தந்தையானீர்
இன்னல்கள் பல வந்தும்
இன்முகம் காட்டினீர்கள்
மண் விட்டு நீங்கள் மறைந்து
விண்ணோக்கி சென்றாலும்
எம் நெஞ்சம் விட்டு நீங்காமல்
என்றும் நிலைத்திருப்பீர்கள்

நீங்காத நினைவுடன்

"லிங்க பவனம்"
பண்ணாகம், சுழிபுரம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



மெய்யடியார்களே!

நாவற்குழி

## சித்திவிநாயகர் தேவஸ்தான மகோற்சவ விஞ்ஞாபனம்-2014

## மாம்பழத் திருவிழா-04.09.2014 வியாழக்கிழமை

**வட மாகாணத்தில் முதல்முறையாக யானை முகனாம் ஐங்கரன் கண்டி தலதாமாளிகையில் இருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட நிஜ யானை மீதான வீதி உலா**

சைவசமய புரான வரலாற்றில் விநாயகப் பெருமான் தாய் தந்தையரை வலம் வந்து வணங்கி பெற்றோரே உலகம் என்பதை மாம்பழக் கதை மூலம் இவ்வுலகிற்கு உணர்த்தியுள்ளார். இதுவே மாம்பழத்திருவிழாவாகும்.

**கிரியாகால விவரங்கள்**

காலை 8.30 மணி - ஸ்நபன கும்ப பூஜையும் மகா அபிசேகமும்
மு.ப. 10.00 மணி - ஸ்தம்ப பூஜை
மு.ப. 10.45 மணி - வசந்தமண்டப பூஜை
தொடர்ந்து நிஜ யானையில் எம் பெருமான் எழுந்தருளி அருட்காட்சியும், விசேட நாதஸ்வர இசையோடு எம்பெருமான் உள்வீதி வலம்வருவார்.
மாலை 5.00 மணி - ஸ்தம்ப பூஜை
மாலை 6.00 மணி - வசந்த மண்டப பூஜை
தொடர்ந்து உள்வீதியில் எம்பெருமான் மாங்கனி பெற்றுக் கொள்ளும் கிரியைகள் நடைபெற்று, எம்பெருமான் மாங்கனி பெற்ற ஆனந்தத்தோடு நிஜ யானையின் ஊர்வலத்தோடு அன்னப்பச்சி அலங்காரத்தில் எழுந்தருளி புகழ்பெற்ற நாதஸ்வர தவில் வித்துவான்களின் இசைமுழங்க வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட வானவெடி அலங்காரங்களோடு எம்பெருமான் வெளிவீதி வலம்வருவார்.

**இலங்கையில் முதன்முதலாக பிரபல இசைக் கலைஞர்கள் பங்குபற்றும் நாத நாட்டியம் விசேட கலை நிகழ்வு கீழைத்தேய மேலைத்தேய இசைக் கருவிகளின் சங்கமத்துடன் நாட்டிய ஆற்றுகை**

★ நாட்டிய நெறியாள்கை:- கலாநிதி அனந்தஜோதி தர்ஷனன் (சிரேஷ்ட விரிவுரையாளர் நடனத்துறை-யாழ். பல்கலைக்கழகம்)
★ நாட்டிய இசை, நெறியாள்கையும் குரலிசையும்:- கலாநிதி ஸ்ரீ தர்ஷனன் (தலைவர், இசைத்துறை-யாழ். பல்கலைக்கழகம்)
★ குழலிசை:- இசைஞானமணி G. நக்கீரன்
★ வயலின் இசை:- இசை லய ஞான வாரிதி A. ஜெயராமன்.
★ மிருதங்க இசை:- கலாவித்தகர் K. அனந்தகோபன்
★ தபேலா இசை :- இசைக்கலைமணி N. மதிருபன்
★ ஒக்டோபாட் இசை :- அருணாவின் லயநாதன் K. கேதீஸ்
★ முகர்சிங் :- கலாவித்தகர் K. நந்தகுமார்
★ பிரதான கீபோட் வாத்தியத்துடன் அருணாவின் இசை இளவரசர் K. ஜெகதீஸ்

**விசேட நாதஸ்வர இசை**



அகில உலகப் புகழ் நல்லூர் ஆஸ்தான வித்துவான் பிச்சையப்பா ரஜீவன் குழுவினர் - நல்லூர்.

கலாநிதி பஞ்சாபிகேசனின் பேரர்கள் விக்கினேஸ்வரன் சித்தாத்தன் விக்கினேஸ்வரன் பிரதித்தன் } குழுவினர், சாவகச்சேரி

இளம்புயல் நாதஸ்வர வித்துவான் நாகதீபன் குழுவினர் - கோண்டாவில்

**வில்லிசை நிகழ்வு**

கலைவாணர் சின்னமணியின் சிஷ்யர்கள் வழங்கும் கடி கனபதி வர எனும் பொருளில் வில்லிசை இடம்பெறும்

அணிசெய் கலைஞர்கள் வரிசையில்

| | | | |
|---|---|---|---|
| ஆர்மோனியம் | - சடாச்சரம் | நகைச்சுவை | - விஜயநாதன் |
| மிருதங்கம் | - சிவசுப்ரமணியம் | வில்லிசையில் | |
| கடம் | - சர்வேஸ்வரன் | கதை சொல்பவர் | - மதியழகன் |

**அனைத்து அடியார்களும் வருகை தந்து சித்திவிநாயகரின் நல்லருளை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

7ஆம் திருவிழா உபயகாரர்.

(39650) (10.6)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆதி மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வதிவிடமாகவும், இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### இராசரத்தினம் கோகுலன்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

எங்கள் அன்புத்தெய்வமே
புன்னகை பூத்த உன் முகமும்
உறவுகளை நேசிக்கும் உன்குணமும்
நட்பு பாராட்டும் உன் தன்மையும்
தன்னையே உருக்கி ஒளியூட்டி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
தெய்வமாகிவிட்ட எங்கள்
அன்புத்தெய்வத்தின் இனிய நினைவுகளை
மனதில் சுமந்து ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (04-09-2014) வியாழக்கிழமை மு.ப 11:00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்.

வீட்டு முகவரி
இல 21, கற்குழி, வவுனியா.

இராசரத்தினம் (A.K.R)
தொடர்புகளுக்கு:
தொலைபேசி: +94242224701 (இலங்கை)



**சேவை** வீடுகளுக்கு வந்து Internet & Email சொல்லிக் கொடுக்கப்படும். O/S Installation, Antivirus Installation, PC Repairing
077 685 8024



**விற்பனைக்கு**
DIGITAL DUPLICATER (JIAWEN JW 6033A) Printer உடன் விற்பனைக்கு.
T.P 0776450327



**உயிர்நிறை மொத்த விற்பனை**
பேரன்ஸ் : 260/=,
புறொயிலர் 1kg: 260/=,
சிவப்பு கல்பேட்: 1kg 225/=
நாடவேண்டிய இடம்:
S.S.பாம் சங்கானை
ARM பஹ்மி
0723217331, 0770468010



## மரண அறிவித்தல்

### ஜெயரட்னம் சிவனேஸ்வரி (பேபி) உரும்பிராய்



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஜெயரட்னம் சிவனேஸ்வரி நேற்று (02.09.2014) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரிய நாயகம்-சின்னம்மா தம்பதியரின் புதல்வியும், ஜெயரட்னத்தின் அன்பு மனைவியும், சிவஜெயந்தன், ஜெயந்தினி, சர்மிளா, கார்த்திகா, சிவபிரியா ஆகியோரின் அன்புத் தாயும், கிருஸ்ணவேனன், சுதாகரன், றாசினி, வருணன், ரிசோகரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பொன்மலர், ஞான மணி, சிவநாயகம், நவரத்தினம், (தலைவர் உரும்பிராய் முருகன் கோயில்) ஆகியோரின் சகோதரியும், நாகம்மா, செல்வரத்தினம், இராசரத்தினம், புண்ணியமூர்த்தி, சரஸ்வதி, நவரத்தினம், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனியும், கீரன், லதுசன், கரினா, பிரணவி, பிரித்திகா, பிரஸ்ரிகா, காவியன், தேனுகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், உதயசுதர்சினி (ஆசிரியை, புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), குணநேசன் (மகா சில்க்ஸ்) ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2014) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஒஸ்கா லேன்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (C/15672) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்

### இழுவை

ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டத்தில் அதனை உள்ளடக்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் வல்வெட்டித்துறை மீனவர்களால், இழுவை மடி வலை பயன்படுத்திக் கடலின் அடியில் கோலி மீன் பிடிப்பதற்கே தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, நீர்ப்பரப்பின் நடுவில் இழுவை வலையைப் பயன்படுத்தி மீன் பிடிக்க அனுமதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இவற்றை அவதானித்த முதலமைச்சர், இது தொடர்பில் ஆலோசனைக் குழு ஒன்றை நியமித்து மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமாறு வடமாகாண மீன்பிடி அமைச்சருக்குப் பணிப்புரை வழங்கியிருந்தார். இதன் அடிப்படையில் ஆலோசனைக் குழுவை அமைக்குமாறு அமைச்சர் பா.டெனீஸ்வரனினால், அமைச்சின் செய லாளருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டது.

அதற்கமைய வட மாகாணத்தில் உள்ள மாவட்ட மீன்பிடி உதவிப் பணிப்பாளர்கள், தேசிய நீர்வள ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம் மற்றும் இலங்கை தேசிய நீர் உயிரின வளஈர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், வடமாகாணசபை உறுப்பினர்கள், மத்திய அரசின் கடற்றொழில் நீரியல்வள அமைச்சில் இருந்து இது தொடர்பாக ஆலோசனை வழங்கக் கூடிய அதிகாரி ஆகியோரைச் சேர்த்து மொத்தமாக 15 பேர் கொண்ட குழுவைச் செயலாளர் அமைத்துள்ளார். அத்துடன் குழுவின் முதலா வது ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி பி.ப. 2 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள அமைச்சு அலுவல கத்தில் நடத்தப்படவுள்ளது. (த-5)

### பண்டாரவன்னி

பதற்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் நிதி உதவி வழங்கப்பட்டது. அதனை மேற்கொள்வதற்குரிய ஒப்பந்தம், பண்டாரவன்னியன் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

151 பயனாளிகளுக்கான மலசலகூடம் அமைப்பதில் மோசடிகள் இடம்பெற்றதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரினால் மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 2.7 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளமை ஆதாரபூர்வமாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், இந்த விடயத்தில் அசண்டையீனமாக இருந்த அரச அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறித்த கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பண்டாரவன்னியன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிதி மோசடி கணக்காய்வின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சங்கம் கலைக்கப்பட்டுப் புதிய நிர்வாகத் தெரிவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அத்துடன் 149 பயனாளிகளும், பொலிஸில் தனித் தனியாக முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் இடம்பெற்றபோது, கடந்த ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்திப் பணிப்பாளரினால், முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலருக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதில், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சரின் அறிவுறுத்தல் எனத் தெரிவித்து, கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகளைக் கிராம அபிவிருத்தி திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தித் திணைக்களத்தின் முறையான கருத்தைப் பெற்ற பின்னரே மேற்கொள்ளவேண்டும் என்று அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பண்டாரவன்னியன் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு எதிராக, திணைக்களத்தின் அறிவுக்கு எட்டாத வகையில் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளையும் உடன் நிறுத்துமாறும் கேட்டுள்ளார் என்று தெரிவித்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் கடந்த 29 ஆம் திகதி, மேற்படி பண்டாரவன்னியன் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு எதிரான முறைப்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் டெனீஸ்வரன் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது அமைச்சரினால், மேற்படி முறைப்பாடு தொடர்பில் மீளவும் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகப் பண்டாரவன்னியன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மோசடி நடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்த, அதனோடு தொடர்புடைய சகல அரச அதிகாரிகளையும் இனங்கண்டறிந்து அவர்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுப்பதற்காகவே மீளவும் விசாரணை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளதாக அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்தார். (த-5)

### வழி

பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தக்கூடாது என்று தடை விதிப்பதை ஏற்கமுடியாது. லீசிங் அடிப்படையில் பஸ்களை எடுத்துச் சேவையில் ஈடுபடுத்தி அதன் மூலமாக வரும் வருமானத்தைக் கொண்டே லீசிங் பணத்தைச் செலுத்தி வருவதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த பஸ்களின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வழி அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களைச் சேவையில் அமர்த்த யாழ்.பொலிஸார் தடை விதித்துள்ளனர். (த-4)

### வடக்கு

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாண அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெருமளவு நிதி இன்னமும் பயன்படுத்தப்படாமல் இருப்பதாக அரசதரப்பினரால் பரப்புரை செய்யப்படு கிறது. வடக்கு மாகாண சபை மீது மக்கள் அதிருப்தி கொள்வதற்காக இத்தகைய பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் ஒவ்வொரு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் குறிக்கப்பட்ட காலம் தேவை. விவசாய நடவடிக்கைகளுக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுமானப் பணிகள் இடையூறாக அமைந்து விடக்கூடாது என்பதால் சிறுபோக அறுவடை முடிவடைந்த பின்னரே அதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த வருடம் வழமைக்கு மாறாகக் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளதால் பெரும் கட்டுமானப் பணிகளுக்கு நீரைப் பயன்படுத்தினால் வறட்சியால் அவதிப்படும் மக்கள் மேலும் துன்பப்பட நேரிடும். இதனால் குறைந்தளவு நீர்த் தேவை உள்ள வேலைகள் மாத்திரமே தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன.

எனவே, ஒதுக்கப்பட்ட நிதியில் விவசாய அமைச்சுக்கான வேலைத்திட்டங்கள் இந்த வருட இறுதியில் இருந்து ஆரம்பிக்கப்படும். (த-14)

### வாழ்வின்

சஹன அருண என்ற தலைப்பில் நாடெங்கிலுமுள்ள பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விளக்கக் கையேடு தனிச் சிங்கள மொழியிலேயே இருந்தமை பற்றித் திவிநெகும பயனாளிகள் கவலை வெளியிட்டனர்.

வடக்கு-கிழக்கில் தமிழ் மொழி மூலம் கருமமாற்றும் சகல பிரதேச செயலகங்கள் மூலமாகவும், தமிழ்மொழி பேசும் திவிநெகும பயனாளிகளுக்கும் நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தனிச் சிங்களத்தில் அமைந்த கையேடுகளே விநியோகிக்கப்பட்டன.

அவசரமாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் தமிழ்மொழி மூலம் இந்தத் துண்டுப் பிரசுரத்தை வெளியிடக் கால அவகாசம் இருந்திருக்கவில்லை என்று ஏறாவூரில் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் கலந்து கொண்ட வைபவத்தில் பேசும்போது வாழ்வின் எழுச்சித்திட்ட மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் ஏ.எம். அலிஅக்பர் குறிப்பிட்டார். (த-32)

### வேலை நிறுத்தம்

வந்துள்ளது. அவர்கள் தமது பணிகளைத் தொடங்கியுள்ளனர் என்று நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

தமக்கும் சுகாதார அமைச்சுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுக்களில் இணக்கப்பாடு காணப்பட்ட தனையடுத்து இந்தப் போராட்டத்தைக் கடந்த சனிக்கிழமை தொடக்கம் கைவிட்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பணிக்குத் திரும்பியதாக அவர்கள் தெரிவித்தனர். பதவியுயர்வு உட்பட மூன்று கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது. (த-4)

### கடற்படை

மடைந்தது. அதில் பயணித்தவர்கள் காயம் எதுவுமின்றித் தப்பிக் கொண்டனர்.

யாழ்.ஸ்ரான்லி வீதியும் கே.கே.எஸ். வீதியும் இணையும் சிவன் கோயில் சந்தியில் நேற்று நண்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தையடுத்து அந்த வழியூடான போக்குவரத்துத் தடைப்பட்டது. அந்த இடத்திலிருந்து ஓட்டோவை அகற்றக் கடற்படையினர் முயன்றபோதும் பொலிஸார் வந்தால்தான் அதனை அகற்ற முடியும் என்று ஓட்டோக்காரர் கூறினார். இதனையடுத்து அவ்விடத்தை அண்மித்து நின்றிருந்த பொலிஸார் அங்கு விரைந்து விசாரணை மேற்கொண்டு ஓட்டோவை அகற்றி மேலதிக விசாரணையை மேற்கொண்டனர். (த-4)

### வவுனியா

கப் பிரகடனம் செய்துள் ளது. இது தொடர்பிலான அதி விசேட வர்த்தகமானி அறிவித்தல், பௌத்த சாசன அமைச்சரும் பிரதமருமான தி.மு.ஜயரத்னவினால் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் மடுகந்த பிரதேசத்தில் ஸ்ரீ தலதா விகாரை அமைந்துள்ளது. குறித்த விகாரை 4.86 ஹெக்டேயர் விஸ்தீரணத்தில் அமையப் பெற்றுள்ளது.

விகாரை அமைந்துள்ள காணியின் நீண்ட காலப் பாதுகாப்பைக் கருதி அந்தப் பிரதேசத்தைப் புனித பிரதேசமாகவும், அதனை 'வவுனியா மடுகந்த ஸ்ரீ தலதா விகாரை புனித பூமி' என்று அறிமுகப்படுத்திக் கொள்ள முடியும் எனவும் அதிவிசேட வர்த்தகமானியினூடாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (த-5)

### முள்ளிவாய்க்

யுள்ளார்.

கடிதம் அனுப்பி நான்கு மாதங்கள் நிறைவடைந்துவிட்டன. இதுவரை பதில் தரப்படாமையானது உறுப்பினர்களின் கோரிக்கையைப் புறந்தள்ளும் செயற்பாடு மட்டுமன்றி எமது அடிப்படை உரிமையை மீறும் செயலாகவுமே கருதுகிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, உறுப்பினர்களிடம் இருந்து கடிதம் கிடைத்தது. அதற்கமைய சபையின் செயலாளரிடம் விளக்கம் கோரப்பட்டது. அதற்குச் சபையின் செயலாளர் வழங்கிய பதிலை, சபை நடவடிக்கைக் குழுவுக்கு நான் சமர்ப்பித்தேன். அங்கு செயலாளரின் விளக்கம் ஆராயப்பட்டது. அதன் பின்னர் மேற்படி விடயத்தில் மேல் நடவடிக்கை எடுப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். (த-5)

### 4 மாதக்

முல்லைத்தீவு கேப்பாபிலவைச் சேர்ந்த இராசரட்ணம் ராஜினி (வயது-24) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த ஜூலை மாதம் 23 ஆம் திகதி தீயில் எரிந்த நிலையில் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அதேவேளை, குறித்த பெண்ணுக்கு அவரது கணவரே தீவைத்தார் என்றும், தீ வைத்த பின்னர் அவர் தப்பியோடி விட்டார் என்றும் கூறப்படுகின்றது. ராஜினி ஏற்கனவே திருமணவர். அவருக்கு 7 மற்றும் 4 வயதுகளில் இரு பிள்ளைகள் உள்ளனர். அவரது கணவர் வன்னிப் போரில் உயிரிழந்து விட்டார். இந்தநிலையில் அவர் 6 மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரை மணம் முடித்துள்ளார்.

இரண்டாவது கணவர் ராஜினியைக் கொடுமைப்படுத்தி வந்தார் என்றும், நித்தமும் அவர் ராஜினியை அடித்துத் துன்புறுத்தி வந்தார் என்றும் கூறப்படுகின்றது. இந்தநிலையில் அதைப் பொறுக்க முடியாத நான்கு மாதக் கர்ப்பிணியான ராஜினி, கணவரை அச்சுறுத்தும் நோக்குடன் மண்ணெண்ணையைத் தன்மேல் ஊற்றிக் கொண்டு பயமுறுத்தினார் என்றும், அப்போது அவரது கணவர் அவருக்கு தீ வைத்துவிட்டுத் தப்பியோடி விட்டார் என்றும் கூறப்படுகின்றது.

ராஜினியின் அலறல் சத்தம் கேட்டு, அண்மையில் வசிக்கும் அவரது தந்தை வந்து அவரை கடும் எரிகாயங்களுடன் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளார். அதன் பின்னர் அவர் வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சைகள் பயனளிக்காது அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். அதன்பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. பெண்ணின் கணவர் மட்டக்களப்புக்குத் தப்பிச் சென்று விட்டார் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-4)

### பிற்போடப்பட்டது

மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்தும் விசாரணை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவென 5 சர்வதேச நிபுணர் களும் ஜனாதிபதியால் நிய மிக்கப்பட்டனர்.

சர்வதேச நிபுணர்களும் பங்கெடுக்கும் ஆணைக்குழு விசாரணை, கிளிநொச்சியில் இந்த மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை யில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற் போது குறித்த அமர்வு பிற் போடப்பட்டுள்ளது. அந்த அமர்வு எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையிலேயே இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனை வழங்கும் நிபுணர் குழுவினர் இன்னமும் இலங்கைக்கு வராமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (ற-5)

### போர்குற்ற

ணையை எதிர்த்து கோஷம் எழுப்பியுள்ளார். அத்துடன் மனித உரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னான்டோ மற்றும் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன ஆகியோருக்கு எதிராகவும் கோஷம் எழுப்பியுள்ளார்.

கோஷம் எழுப்பிக் கொண்டிருந்த அவர் திடீரெனத் தனக்கு தானே தீ வைத்துள்ளார். அதனால் அவரது உடல் முழுவதும் தீ பரவியுள்ளது. அருகிலிருந்தவர்கள், கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவுக்கு அறிவித்துள்ளனர். உடனடியாகவே சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு படையினர் தீயை அணைத்தனர். தீயில் 75 சதவீதமான உடல் பகுதி எரிந்த நிலையில், குறித்த முன்னாள் இராணுவச் சிப்பாய் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தநிலையில், நேற்று மாலை 3.30 மணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிருக்குப் போராடிய நிலையில் அவர் பொலிஸா ருக்கு வைத்தியசாலையில் வைத்து வாக்குமூலம் வழங்கியுள்ளார். "இலங்கைக்கு எதிராக ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட போர்க் குற்ற சர்வதேச விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தீக்குளித்தேன்"- என்று பியசேன வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பொலிஸார் கூறு கின்றனர். குறித்த நபர் 22 வருடங்கள் இராணுவத்தில் இருந்தவர் என்றும் பொலி ஸார் மேலும் தெரிவித்துள் ளார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 27 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. அதில் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையின் வாய்மொழி மூல அறிக்கை சமர்ப்பிக்கப் படவுள்ளது. இந்தநிலையிலேயே மேற்படி தீக்குளிப்புச் சம்பவம் நடந்துள்ளது. (ற-5)

### வளலாயில்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த பகுதியில் மாதிரிக் கிராமம் அமைத்து ஆயிரத்து 300 பேரைக் குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக அந்தப் பகுதியில் எஞ்சியிருந்த வீடுகள், கட்டடங்கள், காடுகள் என்பன தரைமட்டமாக அழிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அழிக்கப்பட்ட பகுதியில் வீதிகள் அமைக் கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின் றது. (ற-5)

### பான் கீ-மூனுக்கு

குறிப்பிட்டுள்ளது.

கிருலப்பனையில் அமைந்துள்ள போதி பௌத்த நிலையத்தில் நேற்று நடைபெற்ற பொதுபல சேனாவின் வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### முல்லைத்தீவில்

தீவு மாவட்டத்தில் உள்ள மக்களை அவர்களது வீடுகளுக்கே சென்று சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்தார் ஜோன் ராங்கீன். புதுக்குடியிருப்பு பகுதியிலும் முல்லைத்தீவின் ஏனைய பகுதிகளிலும் அவர் இவ்வாறு மக்களை நேரடியாகவே சந்தித்து தகவல்களைத் திரட்டினார்.

அதேவேளை, பிரிட்டன் தூதுவர் சந்தித்துச் சென்றபின்னர் தம்மை இராணுவப் புலனாய்வாளர்கள் என்று கூறியோர் மிரட்டிவிட்டுச் சென்றனர் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். பிரிட்டன் தூதுவர் என்ன விடயங்கள் குறித்து கேட்டறிந்தார் என்றும் அவர்கள் விவரம் கோரினர் என்றும் மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ற-5)

### யாழ். மாவட்ட

"வடக்கு மாகாண விவசாய அமைச்சால் மாவட்ட ரீதியாக வழங்கப்பட்டுவரும் இழைய வளர்ப்பு முறையிலான வாழைகளை விவசாயிகளுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மாவட்ட ரீதியாக விவசாயிகளுக்கு இந்த வாழைகள் வழங்கப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்தில் வாழைச் செய்கை மிகவும் பிரபல்யம் மிக்கது. பாரம்பரிய முறைகளில் விவசாயம் செய்யக் கூடிய நிபுணத்துவம் மிக்க விவசாயிகளும் இங்குதான் உள்ளனர். விவசாயிகள் தரமான உற்பத்திகளை மேற்கொண்டு அதற்குரிய பயன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இது பொருத்தமான காலப்பகுதி என்பதால், தற்போது விவசாயத் திணைக்களத்தால் இழைய வளர்ப்பு முறையிலான வாழைகள் வழங்கப்படுகின்றன. தொழில்நுட்பத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த வாழைகளை செய்கை செய்யும்போது நன்னீர் பற்றாக்குறைக்கு ஏற்றவாறு சொட்டு நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தி நீரை மீதப்படுத்த முடியும்."- என்றும் அவர் அங்கும் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டார். (ற-14)

# புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சைகள் செப்ரெம்பர் 9 முதல் தெல்லிப்பழையில்

புற்றுநோயாளர்களின் நன்மைகருதி தினமும் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை யாழ்.போதனா வைத்தியசாலையின் கிழக்குப் புறவாசலில் இருந்து (பருத்தித்துறை வீதிப் பக்கமுள்ள) தெல்லிப்பழை புற்றுநோயாளர் வைத்தியசாலைக்கு 3 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை நோயாளர்கள் செல்வதற்கான வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும்- எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதியிலிருந்து அனைத்துப் புற்று நோயாளர்களுக்குமான சிகிச்சைகள் தெல்லிப்பழை புற்று நோயாளர் வைத்திய சாலையிலேயே நடைபெறும். அதன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சைகள் எதுவும் நடைபெறமாட்டாது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கி வரும் பெண்களுக்கான புற்றுநோயாளர் விடுதியானது புதிதாகக் கட்டப்பட்டு இயங்கி வரும் தெல்லிப்பழை பாதை புற்றுநோயாளர் வைத்தியசாலைக்கு இடமாற்றப்படு வதற்கான வேலைகள் நடைபெற இருப்பதால் இந்தத் தினங்களில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பெண்களுக்குரிய புற்றுநோய் சிகிச்சைகள் எதுவும் நடைபெறமாட்டாது.

மேற்படி தினங்களில் ஏற்கனவே சிகிச்சைக்கு வரும்படி திகதி குறித்துக் கொடுக்கப்பட்ட நோயாளர்கள் 9ஆம் திகதி தெல்லிப்பழை புற்றுநோயாளர் வைத்தியசாலைக்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்படி தினங்களில் அவசரமாக சிகிச்சை தேவைப்படுவோர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற முடியும்.

வெள்ளிக்கிழமைகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறும் புற்றுநோயியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி இ.கிருசாந்தியின் புற்றுநோயாளர்களுக்கான கிளினிக் வியாழக்கிழமைகளில் தெல்லிப்பழை பாதை புற்றுநோயாளர் வைத்தியசாலையில் நடைபெறும். இதே போல் சனிக்கிழமைகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறும் புற்று நோயியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி இ.கவிதாவின் புற்றுநோயாளர்களுக்கான கிளினிக் புதன்கிழமைகளில் தெல்லிப்பழை பாதை புற்று நோயாளர் வைத்தியசாலையில் நடைபெறும். (ஒ)

## வவுனியா மருத்துவமனைக்கு இணையத்தளம் ஆரம்பம்



வவுனியா, செப்.3

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் இணையத்தளம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வவுனியாவில் அமைந்துள்ள வடமாகாண சுகாதார அமைச்சின் உப அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.அகிலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கலந்துகொண்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.அகிலேந்திரன் உரை நிகழ்த்துகையில், மத்திய சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கும் வட மாகாண சுகாதார அமைச்சரின் ஆலோசனைக்கும் அமைவாக இன்றைய தினம் இந்த இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (வ-402-421)

## சைவச் சிறுவர் இல்லத்துக்கு 25 பரப்பு வயல் நன்கொடை



யாழ்ப்பாணம், செப், 3

தனக்குச் சொந்தமான 25 பரப்பு நெல் வயலை அகிலேஸ்வரன் குமாரசாமி என்பவர் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து கனடாவில் வசித்துவரும் இவர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். இதன்போதே அவர் குறித்த வயற் காணியை சைவச் சிறுவர் இல்லத்துக்கு வழங்கியுள்ளார். இது தொடர்பில் சைவ சிறுவர் இல்ல நிர்வாகத்தினர் கூறுகையில்;

அகிலேஸ்வரனின் சுயவிருப்பின் பெயரில் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள காணி செம்மணிப் பகுதியில் உள்ளது. இல்லத்துக்கு நன்கொடையாக நிதி உதவிகள் செய்பவர்களே அதிகம். காணி உதவிகள் கிடைப்பது குறைவு. அந்தவகையில் வயற் காணியை நன்கொடையாக வழங்கியிருப்பது வரவேற்கத்தக்க விடயம். சைவச் சிறுவர் இல்லத்தில் தற்போது 204 மாணவர்கள் உள்ளனர். கருணை இல்லத்தில் 34 மாணவிகள் உள்ளனர். இவர்களது தேவைக்குப் பயன்படுத்துமாறே அகிலேஸ்வரன் எம்மிடம் வயல் நிலத்தை கையளித்துள்ளார். வயல் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மாணவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளது- எனத் தெரிவித்தனர். (த-10)

## காரைநகர் ஆயிலி சிவஞானோதயாவில் கற்றல் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்



காரைநகர், செப்.3

காரைநகர் ஆயிலி சிவஞானோதயா வித்தியாலயத்தில் கடந்த 25 வருடங்களுக்குப் பின் நேற்றுமுன்தினம் மீண்டும் திங்கட்கிழமை கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலையில் பால் காய்ச்சும் நிகழ்வு மற்றும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது. வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியர் இ.வசீகரன் குறித்த பாடசாலையின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அதிபரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் காரைநகர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பு.ஶ்ரீவிக்னேஸ்வரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், காரைநகர் பிரதேச சபை எதிரணித் தலைவர் வீ.கண்ணன், தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபர் திருமதி த.வாசுகி மற்றும் காரைநகர் கோட்டப் பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் கல்விபயின்று வந்த தரம் ஒன்று மாணவர்கள் அந்தப் பாடசாலையில் புதிதாக இணைந்ததை அடுத்து தரம் ஒன்று வகுப்புடன் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் 5 லட்சம் ரூபா நிதியில் பாடசாலை புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-250)

## பொலிஸ் உத்தியோகத்தரின் தலையைப் பதம்பார்த்த தேங்காய்

தென்மராட்சி, செப்.3

கிணற்றுக்கு அருகில் காணப்பட்ட தென்னை மரத்திலிருந்து வீழ்ந்த தேங்காய் அங்கு குளித்துக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் தலையைத் தாக்கியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு நுணாவிலில் இடம்பெற்றது. கடமைக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய பொலிஸ் உத்தியோகத்தர் குளித்துக் கொண்டிருந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தேங்காய் தலையில் வீழ்ந்ததில் மூச்சையுற்ற பொலிஸ் உத்தியோகத்தர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் தீவிர சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் மயக்கம் தெளிந்தார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய உத்தியோகத்தரான குருநாகல் நல்லூர் சூட்திரிபிரியவைச் சேர்ந்த டீ.எம். திஸாநாயக்க (வயது-33) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவராவார். (வ-9)




BSc (Hons) / BA (Hons) / BEng (Hons) / LLB (Hons)

BTEC HND
Full Time / Part Time

Foundation Course

O/L

After A/L

இலங்கையில் சர்வதேச உயர்கல்வி கற்கை நெறிகளை வழங்கும் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனம் எனும் Edexcel, UK நிறுவனத்தின் சான்றிதழுடன் வெற்றி நடைபோடும் BCAS Campus வழங்கும் Access Programme (Degree Foundation) எனும் பாடநெறியினை GCE A/L பரீட்சையினை எழுதி முடித்திருக்கும் மாணவர்களாகிய உங்களுக்கு கணனி, ஆங்கிலம் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றில் திறமைகளை விருத்தி செய்வதற்கான முறையான பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதோடு 6 சர்வதேச வரவேற்பை பெற்ற சான்றிதழ்களையும் இப்பயிற்சி நெறி முடிவில் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்பும் கிடைக்கின்றது.

அத்தோடு குறுகிய காலத்திற்குள் UK, USA, Australia, Canada போன்ற நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களினூடாக (Hons) Degree பட்டப்படிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை இதன் மூலம் இலகுவாக கிடைக்கிறது.

IELTS

Dip. in English

கொழும்பிலிருந்து வருகை தரும் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஐரோப்பிய ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில் முழுமையான ஆங்கிலச் சூழலில் பாடநெறிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன | FREE Study Pack
உயர்கல்வி மற்றும் உயர்தரத்திற்கு பின்னரான கற்கை நெறி தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கு BCAS Jaffna Campus இனை நாடுங்கள்.

5 Certificates by BCAS | 2 Certificates from Edexcel, UK

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910 | E: info@bcas.lk
தொடர்புகளுக்கு 0777 102131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

# பிள்ளையை தாக்கிய தாய்க்கு எச்சரிக்கை

ஆலயப் பகுதியில் வைத்து தனது 5 வயதுப் பிள்ளையைக் கடுமையாகத் தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளம் குடும்பப் பெண்ணைக் கடும் எச்சரிக்கைக்குப் பின் விடுவித்துள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். சந்நிதி ஆலயச் சூழலில் தனது 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை வைத்துப் பிச்சை எடுத்ததுடன், கற்பூரம் விற்கும் தொழிலிலும் ஈடுபட்டு வந்த இளவாலைப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண், தனது ஐந்து வயதுடைய பிள்ளையைக் கடுமையாகத் தாக்கியதுடன் கழுத்துப் பகுதியிலும் கால்களால் மிதித்துள்ளார். இது குறித்து ஆலயப் பகுதியில் நின்றவர்களால் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதனை அடுத்து குழந்தையைக் காப்பாற்றிய சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். தாயைக் கைது செய்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் தாக்கப்பட்ட குழந்தையையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தினர். பரிசோதனையின் பின்னர் மருத்துவ அறிக்கையில் குழந்தை கடுமையாகத் தாக்கப்பட்டமைக்குரிய காயங்களோ வேறு அடையாளங்களோ இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும்- இதனை அடுத்து குறித்த பெண்ணிடம் குழந்தையை ஒப்படைத்த பொலிஸார் அவரை ஆலயச் சூழலில் நடமாடக்கூடாது என்று எச்சரிக்கை செய்து விடுத்துள்ளதாகவும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (கு-108)


**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ்.றோட், இணுவில்.
இரு இடத்திலும்
≡ கணக்கீடு { B. முகுந்தன் (B.B.A (Hons), Fm Spl., M.B.A. Fm. Spl.)
**A/L 2015**
ஆரம்பம் 06.09.2014 சனி
≡ கிரயக் கணக்கீடு≡
யாழ்.நகரில் → சனி, ஞாயிறு → 10 - 12 AM
இணுவில் → சனி, ஞாயிறு → 12.30-2 PM
⋆ தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
⋆ உங்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.
(C/15669)(10.5)

**Personal Class**
கணிதம் & விஞ்ஞானம்
English & Tamil Medium
(5:619) தொடர்பு : 077 122 8826

**ஆசிரியர்கள் தேவை**
கொழும்பில் பாடநூல்களையும், பயிற்சி வினாத்தாள்களையும் தயாரித்து தேசிய ரீதியில் வெளியிடும் நிறுவனத்திற்கு தமிழ் மொழியில் பாடநூல்களையும், மாதிரி வினாத்தாள்களையும், தவணை அடிப்படையில் வினாத்தாள்களையும் தயாரித்து வழங்கக்கூடியவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்
(C/15668)
தொ.பே : 0715794468 / 0114014438

**யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக!!!**
100% சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறிகள் தற்பொழுது ஆரம்பமாகின்றன!!
CCTV Camera Installation Class

Diploma in Mobile Phone Repairing (Hardware & Software Repair)

LED Board Designing Class

Internet Money Making Class

By :- Mr.S.Selvathashan, B.Sc (Hons), M.Sc in IT
www.facebook.com /selvathashan
வகுப்புக்கள் யாழ்ப்பாணம், மானிப்பாய், நெல்லியடி ஆகிய இடங்களில் ஆரம்பமாகின்றன.
(தனிப்பட்ட வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளது)
மேலதிக விபரங்களுக்கு - 0777 110 862
(A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் இணையலாம்)

**மிக அற்புதமான அபூர்வமான பொன்னான உண்மையான வாய்ப்பு**
**கனடா PR (நிரந்தரக்குடியுரிமை) உடன் படிக்க உழைக்க அரியவாய்ப்பு**
3 பேருக்கு மட்டுமே. 04.09.2014 வரை மட்டுமே.
தவறவிடாதீர்கள்.
மிகக் குறைவான கட்டணத்துடன் இது சாத்தியமாகின்றது.
**திசைகாட்டி** (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
(5:380)(6.1.3)



## மரண அறிவித்தல்



**ஜெயவீரசிங்கம் சூரியப்பிரகாசம்**

(நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை - திருகோணமலை)

குரும்பைகட்டி, புலோலியை பிறப்பிடமாகவும் 216, டைக் வீதி திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயவீரசிங்கம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியின் சிரேஷ்ட புத்திரன் சூரியப்பிரகாசம் 02.09.2014 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் தவச்செல்வராணியின் அன்புக்கணவரும், நிலக்ஷ்மன் (புகுமுக மாணவன், பொறியியல்பீடம், மொறட்டுவை), நிலக்ஷ்சாந்த் (2015 A\L தி\கோணேஸ்வரா இந்துக்கல்லூரி), திவ்வியாஷினி (தி\ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தவனம் பாக்கியம் தம்பதியின் மருமகனும், சந்திரப்பிரகாசத்தின் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) சகோதரனும், தேவந்தி சந்திரப்பிரகாசத்தின் மைத்துனரும், யதுகுலன், கவிஷேசன், ராகவேந்தன் (உடுப்பிட்டி, அ.மெ.த.கல்லூரி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.09.2014 புதன்கிழமை கிளானை வளவு, பொலிகண்டி கிழக்கில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் ஊறணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:- சந்திரப்பிரகாசம்
தொ.இ. - 0776079346


**SPOKEN ENGLISH**
மூன்று மாத வாரநாள் பயிற்சிநெறி
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
01.09.2014 இலிருந்து பதிவுசெய்யும் முதல் 100 பேருக்கு அனுமதிகட்டணம் 20 பாடப்புத்தகங்கள் (தமிழ்-ஆங்கிலம்) மற்றும் VIDEO DVD இலவசம்!!
வாரநாள் பிரிவுகள் (திங்கள், புதன்) ஆரம்பம்
1.காலை 8.00-10.00 2.காலை 10.00-12.00
06.09.2014 வரை பதிவுகளை மேற்கொள்ளமுடியும்!
நேரடியான உரையாடற்பயிற்சி வழங்கும் இலங்கையின் ஒரேயொரு பயிற்சிமையம்,
எமது இறுதிப்பிரிவுகளில் பயிற்சிபெற்ற 3000 பேருக்கான சான்றிதழ்கள் வெகுவிரைவில் வழங்கப்படும்.
SAAMSON Experts in English Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

**CIMA**
12 வருட கால உன்னத கல்விச் சேவையை வழங்கிவரும் மகத்தான நிறுவனத்தில் CIMA கல்விக்காக இணைந்து உங்கள் கல்விக் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
06 September 2014 (Saturday)
10 September 2014 (Wednesday)
நேரம்: காலை 9.00 மணி


" தரம் ஒன்றே எமது தாரக மந்திரம்"
மேலதிக விபரங்களுக்கு
021 2220727, 021 7200777
Wisdom Business Academy
The Specialist in CIMA Education
154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(பிறவுண் வீதியும் நாவலர் வீதியும் இணையும் சந்தி)

**CIMA** நிதித்துறையில் பயிற்சி பெற்ற வணிகத்தலைவராக உயர்ந்திடுங்கள்
@ Spectra Skills Starts on: 06 Sep 2014
6.9.2014 க்கு முன் பதிவு செய்பவர்களுக்கு
Rs. 5,000 தொடக்கம் Rs 50,000 வரையான புலமைப்பரிசில்
தாமதம் எதற்கு? சிறந்த தீர்மானம் எடுத்து மாற்றத்தை ஏற்படுத்திடுங்கள்.
மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றிடுங்கள்
பதிவுகளுக்கு உங்கள் பெயரை 77 15 19 390 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்
Tel:021 222 1422 / 1423 No 19, Stanley Road, People's Bank 2nd floor, Jaffna

**சொகுசு புகையிரத சேவை** Luxury Train Service
Colombo - Jaffna
★ A/C Wifi
★ Computer பாவிக்கக்கூடிய மேசை தனியாக
★ Phone, Computer Charge செய்ய தனியாக பிளக்
★ தனியான கழிவறை
யாழ். கொழும்பு வெள்ளவத்தை வரை பஸ் வசதியுடன் தேநீர், கோப்பி, சுடுதண்ணீர் இலவசம்.
1690/=
பயணத்தின் போது உங்கள் பிறந்த தினம் திருமண தினம் போன்றவற்றை நண்பர்களுடன் Cake வெட்டிக் கொண்டாடக்கூடிய வசதிகள்

புறப்படும் நேர அட்டவணை
யாழ்- கொழும்பு
யாழ்.பஸ் புறப்படல் -6.30 pm
பளை புகையிரதம் புறப்படல் -8.00 pm
கோட்டை வருகை-4.50 am
வெள்ளவத்தை பஸ் வருகை-5.20 am
கொழும்பு -யாழ்
வெள்ளவத்தை 29 வீகாரை லேன் பஸ் புறப்படல்-7.00 pm
கோட்டை புகையிரதம் புறப்படல்-8.15 pm
பளை வருகை-4.50 am
பஸ் யாழ் வருகை -5.40 am
**Manoj Express Service**
80, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 751 7019/077 229 3206


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தம்மை மதிப்பவர்களும், மதியாதவர்களும் அவர்கள் விரும்பியபடி நடக்குக; இழிவான ஈயும் மிதித்து ஏறித் தலையில் இருக்கும்; இதை உண ரும் மேலோர் கோபம் கொள்ளாதிருத்தல் நலம்.
- சமண முனிவர்.

# புதன் பொய்கை

A

உதயன் 03 செப்ரெம்பர் 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

ராஜராஜன்

உலகில் எங்கு பார்த்தாலும் இனம், மதம், நிறம் தொடர்பான வேற்றுமைகள் தலைதூக்கிக் காணப்படுகின்றன. கறுப்பு நிறத்தவனை வெள்ளையன் அருவருப்புடன் பார்க்கின்றான். தனது நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவர்களை அதே நாட்டில் வாழும் பெரும்பான்மை இனத்தவர்கள் ஒதுக்கி வைக்கின்றனர்.



# மனிதம் மனிதனுக்கு வேண்டும்

மனிதம் என்ற சொல்லில் இருந்து பிறந்ததுதான் மனிதன் என்ற வார்த்தை. மனிதம் இல்லாதவன் மனிதனாக இருக்க முடியாது.

இன்று மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் மனிதம் தொலைந்துபோய் விட்டது. இதனால்தான் உலகில் அட்டூழியங்கள் மலிந்து காணப்படுகின்றன. எதுவித குற்றமும் புரியாத அப்பாவி ஊடகவியலாளன் ஒருவன் ஈவீரக்கமற்ற தீவிரவாதி ஒருவனால் கழுத்துத் துண்டிக்கப்பட்டுக் குருதி ஒழுகிய நிலையில் கிடக்கின்றான். இந்தக் காட்சியைப் பார்க்கும்போது உள்ளம் பதறித்துடிக்கின்றது. வேறொரு இடத்தில் தவறு செய்ததாகக் கூறி பெண்ணொருவரைக் கல்லால் எறிந்து கொலை செய்கின்றனர். இவ்வாறு எத்தனையோ சம்பவங்களைக் கூறமுடியும். நாகரீகமானதொரு சமுதாயத்தில் இத்தகைய கீழ்த்தரமான சம்பவங்கள் இடம்பெறுவதை நாம் விரும்பியோ விரும்பாமலே ஏற்றுக் கொண்டாக வேண்டியுள்ளது. வேறு வழியே இல்லை.

மனிதர்கள் தமது மனச்சாட்சியிலிருந்து என்றைக்குப் பிறழ ஆரம்பிக்கின்றார்களோ அன்றே மனிதத்தையும் இழந்து விடுகிறார்கள்.

விபத்தொன்றில் சிக்கி வேதனையில் துடிதுடித்துக்கொண்டு சாவின் விளிம்பில் நிற்கும் ஒருவனைக் கண்டும் காணாமற் செல்பவன் தனது மனச்சாட்சியைக் கொன்றவன் ஆகிறான். உதவி செய்வதனால் தனக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடுமோவென அவன் எண்ணுவது சரியென நியாயப்படுத்தப்பட்டாலும், மனச்சாட்சியின் பிரகாரம் அதனைத் தவறெனவே கொள்ள வேண்டும்.

இரக்க உணர்வு எமது மனங்களில் சுரக்கும் போது அங்கு ஏனைய நல்ல குணங்கள் தானாகவே வந்து சேர்ந்து விடுகின்றன. புரட்சிக் கவிஞர் எனப் பெயர்பெற்ற மகாகவி சுப்பிரமணியம் பாரதியாரை அறியாதவர்கள் தமிழர்களாக இருக்க முடியாது.

அவரது முற்போக்குச் சிந்தனைகளும், கவித்துவமும் மிகவும் உயர்வானவை. அதேவேளை மிகுந்த இரக்க குணமும் அவரிடம் குடிகெண்டிருந்தது. ஆனால் அவரது வாழ்க்கையின் பெரும்பகுதி வறுமையிலேயே கழிந்தது. இருந்த போதிலும் அவர் மிருகங்கள் மற்றும் பறவைகளிடத்தில் எப்போதும் அன்பு செலுத்தி வந்தார். ஒரு நாள் அவரது மனைவியார் உணவு தயாரிப்பதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். சிறிதளவு அரிசி மட்டுமே வீட்டில் இருந்தது. அன்று சோற்றை ஆக்குவதற்கு அவரது மனைவி அதனையே நம்பியிருந்தார். அப்போது பாரதியார் வீட்டின் விறாந்தையில் அமர்ந்திருந்தவாறு முற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது குருவிகள், காகங்கள் அடங்கலான பறவைகள் அங்கு காணப்பட்டன. உடனே உற்சாகமடைந்த பாரதியார் உள்ளே சென்று அங்கு இருந்த அரிசி முழுவதையும் எடுத்து வந்து முற்றத்தில் தூவினார். இதனைக் கண்டதும் அந்தப் பறவைகள் யாவும் பறந்து வந்து அரிசியை ஆவலுடன் உண்டன. இதனைக் கண்டதும் பாரதியாருக்கு உற்சாகம் மேலிட உரத்துப் பாடத் தொடங்கினார்.

இதனைக் கேட்டு வெளியே வந்த அவரது மனைவியாரின் கண்ணில் அரிசி வைக்கப்பட்டிருந்த வெற்றுப் பாத்திரமே தெரிந்தது. அவர் தமது கணவரின் செயலுக்காக அவரைக் கடித்து கொண்டார். ஆனால் பாரதியாரோ எவ்வித கவலையுமில்லாமல் சிரித்தவாறு, 'இன்றைக்கு சோறு ஆக்காதுவிட்டால் நாம் இருவரும் தான் பட்டினி கிடக்க நேரிடும். ஆனால் அதோ பார், எத்தனை பறவைகள் எமது வீட்டின் அரிசியை உண்டு மகிழ்கின்றன. இதைப் பார்த்துப் பார்த்தே எமது வயிறுகள் நிறைந்து விடும்' என்று மனைவியைப் பார்த்துக் கூறினார். பாரதியாரின் உயர்ந்த இரக்க குணம் இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் எம்மில் பலர் எச்சில் கையால் கூடப் பறவைகளைத் துரத்த மாட்டார்கள்.

இன்று உலகில் எங்கு பார்த்தாலும் இனம், மதம், நிறம் தொடர்பான வேற்றுமைகள் தலைதூக்கிக் காணப்படுகின்றன. கறுப்பு நிறத்தவனை வெள்ளையன் அருவருப்புடன் பார்க்கின்றான். தனது நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவர்களை அதே நாட்டில் வாழும் பெரும்பான்மை இனத்தவர்கள் ஒதுக்கி வைக்கின்றனர். மதங்களுக்கிடையிலும் வேறுபாடுகள், குழப்பங்கள் மலிந்து காணப்படுகின்றன. இன்று ஈராக் நாட்டில் ஒரே மதத்தைச் சார்ந்த இரு பிரிவினர் மோசமாகத் தம்மிடையே மோதிக் கொள்வதும், உயிர்ப் பலி எடுப்பதும் வழக்கமான நிகழ்வாக மாறிவிட்டது. இவற்றை யெல்லாம் பார்க்கும்போது மனிதர்களாகப் பிறக்காமல் இருந்திருக்கலாம் என்ற எண்ணமும் எழுகின்றது.

முன்பெல்லாம் கடவுளிடம் ஏற்பட்ட பயமும் அதீதமான பக்திக்கு வழிவகுத்ததெனக் கூறலாம். ஏதாவது தவறு செய்து விட்டால் கடவுள் தண்டனை வழங்கி விடுவார் என்றே அன்று வாழ்ந்த மக்கள் நம்பினார்கள். இதனால் தவறுகள் குறைந்த அளவி லேயே இடம்பெற்றன. ஆனால் இன்று இறைவன் குடிகொண்டுள்ள ஆலயங்களில் திருடும் அளவுக்கு மனிதர்கள் துணிந்து விட்டனார். இறைவன் மீதான பயம் இல்லாமல் போனது மட்டுமன்றி அந்த இறைவனுக்கே சவால் விடுமளவுக்கு மனிதர்கள் மாறிவிட்டனர். இத்தகையவர்கள் எதனையும் செய்வதற்குத் தயங்க மாட்டார்கள். கொடிய மிருகங்களை விட கேவலமானவர்கள் இவர்கள். புத்த பெருமான் அஹிம்சையின் மறு உருவமாகத் திகழ்ந்தார். நோய், மூப்பு, இறப்பு ஆகிய மூன்றையும் நேரடியாகக் கண்ட பின்னர் தமது அரச போகத்தைத் துறந்து துறவியாக மாறியவர் அந்த மகான். அவரது போதனைகள் அன்பு, அமைதி, சமாதானம், சகிப்புத்தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டன. அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றவர்களுக்கு தீங்கு செய்வதையும், எதிரிகளைக் கொலை செய்வதையும் ஆதரித்துக் கருத்துக்கள் தெரிவிக்கவில்லை. ஆனால் அவரது வழியைப் பின்பற்றுவதாகக் கூறுபவர்கள், புத்தரின் போதனைகளுக்கு எதிரானவர்களாகக் காணப்படுகின்றனர். வன்முறைகளைத் தூண்டி வருகின்றனர். தமக்குப் பிடிக்காதவர்களை வதைப்பதில் இன்பம் காண்கின்றனர்.

இந்து மதமும் கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவற்றை வலியுறுத்திக் கூறுகின்றது. ஆனால் ஆலயங்களில் உயிர்ப்பலி நிகழ்வதும் இந்துக்கள் புலால் உண்பதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மனிதம் உள்ளவர்களாக மனிதர்கள் இருந்திருந்தால் இவ்வாறு நடக்க முற்பட்டிருக்க மாட்டார்கள். ஆகவே நாம் மிருகங்கள் போன்று நடப்பதை விடுத்து 'மனிதர்களாகவே இருக்கப் பழகுவோம். மனிதர்களாகப் பிறந்திடவே நல்ல மாதவம் செய்ய வேண்டுமம்மா' என்ற கூற்றுக்கு ஏற்ப நாம் மனிதர்களாக வாழ்ந்தாலே போதும்.

மறு பிறவி என ஒன்று இருந்தால் இனிமேல் மனிதப் பிறவி எமக்குக் கிடைக்காமலும் போகலாம். ஆகவே கிடைத்த பிறவியை பயனுள்ள வகையில் அமைத்துக்கொள்வது அனைவரதும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

இன்றும் ஒரு சிலரிடம் மனிதம் மறையாது துலங்குவதைக் காண்கின்றோம். அவர்கள் தெய்வதற்குச் சமமானவர்கள். தொழுவதற்கு ஏற்றவர்கள். அவர்கள் செல்லும் பாதையை நாம் பின் தொடர்ந்தாலே போதும். அன்றே மனிதர்களாக மாற்றம் பெற்று விடுவோம்.





## ‘நிஜம்’ மாதாந்த சஞ்சிகை வெளியீடு

அக்கரைப்பற்று பௌமியின் 'நிஜம்' மாதாந்த சஞ்சிகை கொழும்பு தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டு சஞ்சிகையின் முதல் பிரதியை மனித நேயன் தேசமான்ய இர்சாத் ஏ காதரிடம் கையளித்தார்.
தேசமான்ய பூர்வா அப்துல்கையும் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆஸ்திரேலியாவில் இருந்து வந்து கலந்து கொண்ட முன்னாள் பிரதியமைச்சர் நிசாமுத்தீன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொத்துவில் எஸ்.பி மஜீத், முன்னாள் அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.
நவமணி ஆசிரியர் என்.எம். அமீன், சட்டத்தரணி இரா.சடகோபன், ராதா மேத்தா, அமைச்சா ஹக்கீம், எஸ்.நிசாமுத்தீன் கிண்ணியா அமீர் அலி ஆகியோர் உரையாற்றினார்கள். ஏ.ஆர்.எம். ஜிப்றி, கலைவாதி கலீல், எஸ்.ஜ. நாஹூரக்கனி, ஈழகணேஸ் தர்மலிங்கம் மற்றும் அறிவிப்பாளர் எம்.ஜ.எம். இர்பான் ஆகியோரால் இன்னிசைக் கீதம் இசைக்கப்பட்டது. நூலாசிரியர் பௌமி ஏற்புரையும் நன்றியுரையும் வழங்கினார். கொழும்பில் உள்ள இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் அரசியல்வாதிகளும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## கைதடியூர் துரை எழுதிய இரு நூல்கள் வெளியீடு






கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமாகிய கைதடியூர் என்.கே.துரைசிங்கம் எழுதிய 'உயிரி' சிறுகதைத் தொகுதி மற்றும் 'காலம் ஆனவர்கள்' கட்டுரைத் தொகுதி ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 30 ஆம் திகதி கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.
மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பெரும் எண்ணிக்கை யான எழுத்தாளர்களும் கலை ஆர்வலர்களும் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.
விழாவின் வரவேற்புரையை கு.சுரேஸ்குமார் நிகழ்த்த ஆசியுரைகளை சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.தங்கராசா, கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர்.
வாழ்த்துரைகளை ஓய்வுநிலை அதிபர் த.அப்புத்துரை வழங் கினர். கைதடி சச்சிதானந்த ஆச்சிரம தலைவர் லயன் குழந்தைவேலு ஆகியோர் நிகழ்த்தினர்.
'உயிரி' சிறுகதை தொகுதி நூலின் வெளியீட்டுரையை ஓய்வு நிலை அதிபர் ப.செல்லத்துரையும் 'காலம் ஆனவர்கள்' கட்டுரைத் தொகுதி நூலின் வெளியீட்டுரையை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரனும் நிகழ்த்தினர்.
'உயிரி' சிறுகதை தொகுதியின் முதற் பிரதியை இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய விசாரணை அதிகாரி சி.தெய்வந்திரமும் 'காலம் ஆனவர்கள்' கட்டுரைத் தொகுதியின் முதற்பிரதியை பண்டாரவளை கல்வி வலய தமிழ்ப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகனும் பெற்றுக் கொண்டனர்.
இரு நூல்களின் மதிப்பீட்டுரைகளை மூத்த எழுத்தாளரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய கே.ஆர்.டேவிட் மற்றும் கை.சரவணன் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை கி.நிஷாகரன் நிகழ்த்தினார். (வ-9)

## பிடல் காஸ்ட்ரோவை சந்தித்த 8 வயது சிறுவன்

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவை, அந்நாட்டு சிறுவன் ஒருவர் சந்தித்துள்ளார். அமெரிக்க ஏகாதிபத்திய அடக்குமுறையை எதிர்த்துப் போராடி, புரட்சியின் மூலம் கியூபா நாட்டின் ஆட்சியை பிடல் காஸ்ட்ரோ கைப் பற்றியிருந்தார்.
அதனைத் தொடர்ந்து 49 ஆண்டுகள் கியூபாவின் அசைக்க முடியாத ஜனாதிபதியாக ஆட்சி செய்தார்.
தற்போது, 88 வயதாகும் பிடல் காஸ்ட்ரோ, அரசியல் பணிகளில் இருந்து விலகி தலைநகர் ஹவானாவில் உள்ள இல்லத்தில் பூரண ஓய்வில் உள்ளார்.
அவரை மானசீக தலைவராக ஏற்றுக்கொண்டுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு கிடைக்காததொரு அரிய வாய்ப்பு, அந்தநாட்டைச் சேர்ந்த 8 வயது சிறுவனுக்கு கிடைத்துள்ளது.
சிறுவயது முதல் தங்கள் நாட்டின் வீரத்திருமகனைப் பற்றிய வரலாற்றை படித்தறிந்த மர்லான் மெண்டேஸ் என்ற அந்தச் சிறுவன், பிடல் காஸ்ட்ரோவைப் போன்றே பச்சை நிற உடைகள் அணிந்து, அவரது சிறப்பு அடை யாளமான தொடை வரை உயர்ந்த காலணிகள் மற்றும் பாதி நெற்றியை மறைக்கும் துணித் தொப்பியுடன் கியூபாவின் ஊடகங்களில் காட்சியளித்துள்ளான்.
குறித்த சிறுவனை பேட்டி கண்ட ஊடகங்கள், அவனது புரட்சிகரமான சிந்தனைகளை ஊடகங்களில் வெளியிட்டன. அதைக் கண்ட பிடல் காஸ்ட்ரோவின் குடும்பத்தினர், தனது மானசீக தலைவரை நேரில் சந்திக்க வரும்படி அவனுக்கு அழைப்பு அனுப்ப அந்த மாபெரும் மக்கள் தலைவரைச் சந்தித்துப் பேசும், அரிய வாய்ப்பு மர்லான் மெண்டேஸுக்குக் கிடைத்தது.
ஹவானாவில் உள்ள முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் வீட்டில் கடந்த 16 ஆம் திகதி நிகழ்ந்த இந்தச் சந்திப்பு குறித்து நெகிழ்ச்சியுடன் குறிப்பிடும் மர்லான் மெண்டேஸ், “அவரை நேரில் சந்தித்தபோது உணர்ச்சிவசப்பட்டுப் போய்விட்டேன். என்னுடன் சிறிது நேரம் பேசிய அவருடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டேன். என் அன்புக்குரிய நண்பர் மர்லான் மெண்டேஸுக்கு என்று தனது கைப்பட எழுதி, கையொப்பமிட்ட ஒரு வாழ்த்து அட்டையையும் அவர் எனக்குப் பரிசாகக் கொடுத்துள்ளார்” என்று தெரிவித்துள்ளான்.






# காரைநகர் கிழவன்காடு கலாமன்ற அறநெறி பாடசாலை மாணவரின் கலைநிகழ்ச்சிகள்

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்பட்ட நல்லூர் உற்சவகாலக் கலைவிழாவில் பூங்காவனத் திருவிழாவன்று மாலை காரைநகர் கிழவன்காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை மாண்வர்களின் கலைநிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக இடம்பெற்றன. மாணவர்களின் கலைநிகழ்வுகளைக் காணலாம். (வ-250)





# குட முழுக்கு பாமாலை இறுவட்டு வெளியீடு

கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலய (காளிகோவில்)பஞ்சதள இராஜகோபுர கும்பாபிசேகத்தையொட்டி திருமதி ஜெனித்திரா ஜெயரூபனால் பாடப்பட்ட குட முழுக்குப் பாமாலை இறுவட்டு வெளியீடு கடந்த வியாழக்கிழமை முற்பகல்10.30 மணியளவில் ஆலய மண்டபத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் க.தேவராசா தலைமையில் நடை பெற்றது. நிகழ்வில் ஆசியுரையை ஆலயத்தின் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோ. பாலகிருஷ்ணகுருக்கள் வழங்கினார்

வெளியீட்டுரையை நல்லூர் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.தமிழ்மாறன் நிகழ்த்தினார். இறுவட்டை பாடலாசிரியை வெளியிட்டு வைக்க பேராசிரியர் தேவராசா பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்பு பிரதிகளை பேராசிரியர் தேவராசா வழங்கிக் கௌரவித்தார். (வ-86)





# மாணவர்களுக்கான ஆற்றுகை நிகழ்வாக தெய்வீக சுகானுபவம் III

தெய்வீக சுகானுபவம் III எனப் பெயரிடப்பட்ட கலாசார நிகழ்வுத்தொடரின் மூன்றாம் அங்கமாகிய இரண்டு நாள் நிகழ்வு ஓகஸ்ட் மாதம் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நல்லூர் உற்சவ காலத்தின் சமகாலத் தில் நடத்தப்பட்டது. இக்கலா சார விழாவானது கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையின் அனுசரணையோடு வடமாகாண கலாசாரத் திணைக்களத்தாலும் இந்தியத் துணைத் தூதரகத்தாலும் இந்திய இலங்கை அறக்கட்டளை மையத்தாலும், ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
திருமதி. லாவண்யா ஆனந்தின் ஆற்றுகையைக் காணவந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்களால், புகழ்வாய்ந்த திறந்தவெளி அரங்காகிய சங்கிலியன்தோப்பு நிரம்பி வழிந்தது. திருமதி. லாவண்யா ஆனந்த்தால் நீராவியடி, இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் நடத்தப்பட்ட பயிலரங்கில் பாடசாலை மாணவர்கள், இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வட மாகாணத்தின் முன்னணிக் கலைஞர்கள் போன்றோர் முழுமையாகப் பங்குபற்றினர்.
இவ்விழாவானது வடமாகாணத்தின் பல்வேறு பாடசாலை மாணவர்களுக்கும் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களுக்குமான பயிலரங்கம் மற்றும் மாலை நேர திறந்த வெளியரங்கின் ஆற்றுகையாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது.
இந்த விழாவின் முதல் அமர்வாகிய ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி காலை நடத்தப்பட்ட பரதநாட்டியம் பற்றிய பயிலரங்கில், திருமதி. லாவண்யா ஆனந்த் பரதநாட்டியத்தின் நுணுக்கங்கள் பற்றி 500 இற்கு மேற்பட்ட வடமாகாணத்தின் பரதநாட்டிய மற்றும் இசை பயிலும் மாணவர்களுக்கும் கலைஞர்களுக்கும் விளக்கமளித்தார். அவர் மாணவர்களோடு மிகச்சிறப்பான கலந்துரையாடல் அமர்வை நடத்தியதோடு தன்னிடம் கேட்கப்பட்ட தொடர்ச்சியான கேள்விகளுக்கும் பதிலளித்தார். நிகழ்வுக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.
திருமதி. லாவண்யா ஆனந்தின் மாலை நேர பரதநாட்டிய ஆற்றுகை நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். யாழ்ப்பாண நகர முதல்வர், ஆளுநரின் செயலாளர், பதில் இந்தியத் துணைத்தூதர், வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர், வ்டமாகாண சபையின் கலாசாரத்திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பல பிரமுகர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். ஆளுநர் தனது உரையில் ஓகஸ்ட் மாதமானது வடமாகாணத்தவர்களுக்கு முக்கியமான மாதம் என்றும் இக்காலப்பகுதியிலேயே பல கோயில்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன என்றும் தொவித்தார். தெற்கில் கதிர்காமம் ஆலயத்தில் சாதி சமய வேறுபாடின்றி மக்கள் ஒன்றுகூடுவர்.
கண்டிய மலைகளில் பெரஹெராவானது ஆடம்பரமாகவும் வண்ணமயமாகவும் நடைபெறும். வடக்கில் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த திருவிழாவானது 25 நாள்களுக்கு நடைபெறும். இக் கோயிலின் திருவிழாக்கள் ஏனைய ஆலயங் களைவிட கூடிய புனிதத் தன்மையை மாகாணம் முழுவதும் ஏற்படுத்துகிறது. இதனால் தான் குடாநாட்டுக்கு வெளியிலுள்ளவர்களும் வெளிநாட்டினரும் நல்லூருக்குப் புனிதப் பயணம் வருகின்றனர்.
இவை யாவற்றையும் கருத்தில் கொண்டு இந்தியக் கலைஞர்களின் இசை நடன ஆற்றுகைகள் கடந்த மூன்ற வருடங்களாக தொடர்ச்சியாக ஒழுங்கு செய்யப்படுகின்றன. இதன் நோக்கம் இசை ரசிகர்களுக்கு மகிழ்வூட்டுவதும் எமது இளம் தலைமுறை கலைஞருக்கு இந்தியக் கலைஞர்களைச் சந்திக்கவும் கலந்துரையாடவும் சந்தர்ப்பம் அளிப்பதுமாகும்.
இந்திய இசை மற்றும் நடனக் கலைஞர்களிடமிருந்து பல்வேறு நுணுக்கங்களை மாணவர்களும் இளங்கலைஞர்களும் அறிந்து கொள்ளமுடியும்.
அனைவரும் இந்தியா சென்று அங்கு நடைபெறும் பயிலரங்குகளில் பங்கேற்க இயலாது. எனவே இளைஞர் யுவதிகளுக்கு இதுவொரு அரிய சந்தர்ப்பமாகும் திருமதி லாவண்யா ஆனந்தின் பயிலரங்கும் மாலைநேர ஆற்றுகையும் வட மாகாண மாணவர்கள் மற்றும் நடனக்கலை ஆர்வலர்களின் ப்ங்குபற்றலினால் மிகப் பெரும் வெற்றியாக அமைந்ததுடன் எதிர்கால கலாசார நிகழ்வுகளை ஒழுங்கமைக்கக் கூடிய உயர்தர நிகழ்வாகவும் அமைந் தது. இந்த நிகழ்வு இந்திய இலங்கை உறவை, குறிப்பாக வடமாகாணத்துடனான உறவை உயர்மட்டத்துக்கு இட்டுச்சென்றது.





## தெய்வீக சுகானுபவ வாய்ப்பாட்டு ஆற்றுகைப் பயிற்சிப் பட்டறை







யாழ் இந்தியத் துணைத தூதரகம்,மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை கலை,கலாசார அலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் தெய்வீக சுகானுபவ வாய்ப்பாட்டு ஆற்றுகைப் பயிற்சிப் பட்டறை திங்கள்கிழமை பகல் யாழ் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்னிந்தியாவின் பிரபல இசைத்துறை மேதை ரீ.வி.ராம் பிரசாத் கலந்து கொண்டு பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்தார். இசைத் துறையின் உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய ஆக்க நிகழ்வுகளின் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. யாழ் இந்திய உதவித்தூதரகத்தின் பதில் துணைத் தூதர் கே.தட்சணாமூர்த்தி, வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்,மற்றும் கலை,கலாசார அலுவல் கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக நுண் கலைப்பீட மாணவர்கள், யாழ்.மாவட்ட கலைத்துறை மாணவர்கள்,பல்கலைகழக பேராசியர்கள், விரிவுரையாளர்கள்,ஆசிரியர்கள் ஆர்வலர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.
(வ-86)

03 SEP 2014
பொது சன நூலகம்

# பறக்க ஆசைப்பட்ட செடியன்!



ஒரு கிராமத்தில் செடியன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் செடி உயரம்தான் வளர்ந்திருந்தான். அதனால் அவனுக்கு அந்தப் பெயர். செடியனுக்கு பறவைகள் போல பறக்க ஆசை.

ஆனால் நாம் மற்றவர்கள் போல சராசரி உயரம் இல்லையே. நம்மால் பறக்க முடியுமா என்று ஒரு சந்தேகம். சிட்டுக் குருவியிடம் தன் சந்தேகத்தைக் கேட்டான் செடியன்.

செடியா! நான் உன்னைவிட உருவத்தில் மிகச் சிறியவன். ஆனால், என்னாலேயே பறக்க முடியும்போது, உன்னால் பறக்க முடியாதா என்ன? எனத் தன்னம்பிக்கையை செடியன் மனதில் வளர்த்தது.

ஆமாம். ஆமாம். என்னால் பறக்க முடியும் என்று சொல்லிக் கொண்டே ஆற்றுப் பக்கம் வந்தான் செடியன். அங்கு நாரைகள் மீன்களைப் பிடித்து சாப்பிட்டுக் கொண்டே இருந்தன.

செடியன் ஒரு நாரையின் அருகே சென்றான் பறவையே எனக்கு ஒரு உதவி செய்வாயா? எனக் கேட்டான். என்ன உதவி? எனக் கேட்டது நாரை.

உன் இறக்கையில் இருந்து ஒரே ஒரு சிறகைத் தருவாயா. நான் பறக்க வேண்டும் எனக் கேட்டான்.

அந்த நாரையும் ஒரு சிறகைத் தந்தது.

மகிழ்ச்சியோடு வாங்கித் தனது பொக்கெற்றில் வைத்துக் கொண்டான். இதுபோல பல நாரைகளிடம் இருந்து ஒவ்வொரு சிறகாக வாங்கி சேகரித்துக் கொண்டான். அங்கிருந்து மகிழ்ச்சியுடன் புறப்பட்டு, கோயில் அருகே வந்தான். அங்கே பூ விற்றுக் கொண்டிருந்த ஒரு பாட்டியிடம் பேசினான்.

பாட்டி.. பாட்டி.. இந்த சிறகுகளைப் பறவை சிறகுகள் மாதிரி கட்டிக் கொண்டு பறக்கப் போகிறேன். எனக்கு சிறகுகளைக் கட்டிக் கொடுக்க முடியுமா? என்று கேட்டான் செடியன். நான் கட்டிக் கொடுத்தால் எனக்கு நீ என்ன தருவாய்? என்று கேட்டார் பாட்டி. நான் பறந்து போய் மலைக்கு அந்தப் பக்கம் இருக்கின்ற பூக்களைப் பறித்து வந்து கொடுக்கிறேன் என்று சொன்னான் செடியன்.

பாட்டியும் சிறகுகளை வைத்து கட்டிக் கொடுத்தார். அதை உடம்பில் கட்டிக்கொண்டு மலை உச்சிக்குப் போனான். அங்கிருந்து பறக்க முயற்சி செய்தான். ஆனால் செடியனால் பறக்க முடியவில்லை. .

பறவை சிறகுகளைக் கட்டினால் மட்டும் நம்மால் பறந்துவிட முடியுமா என்ன? எவ்வளவோ முயற்சி செய்தான். அவனால் பறக்க முடியவில்லை. தோல்வி அடைந்த அவன் கோபத்தில் உடம்பில் கட்டியிருந்த சிறகுகளைக் கழற்றி வீசினான். அது மலையின் கீழே ஓடிக்கொண்டிருந்த நதியில் விழுந்தது. நீரினால் வேகமாக அடித்துச் செல்லப்பட்ட அந்த சிறகுகள் ஆற்றின் மறு கரையில் குளித்துக்கொண்டிருந்த காட்டு இளவரசியின் கால்களைச் சுற்றிக் கொண்டது.

இளவரசி அதனைக் கையில் எடுத்தாள். இவ்வளவு சிறகுகளுடன் யார் இதை இங்கே அனுப்பியது என்று தெரிந்துகொள்ள ஆர்வம் ஏற்பட்டது.

தனது சேவகர்களோடு அந்த மலைமீது ஏறிவந்தாள் இளவரசி. அங்கே செடியன் ஒரு மரத்தைக் கட்டிக்கொண்டு அழுது கொண்டிருந்தான்.

சேவகர்களோடு வந்த இளவரசி, யார் நீ? ஏன் அழுகிறாய்? என்று கேட்டாள்.

செடியன், தனது கதையைச் சொன்னான். இளவரசி சிரித்தாள்.

நாமெல்லாம் மனிதர்கள். நம்மால் பறக்க முடியாது. ஆனால், சாதனை செய்ய முடியும். உன்னைப் பார்த்ததும் எனக்குப் பிடித்து விட்டது. நகைச்சுவையாகவும் பேசுகிறாய். அதனால் உன்னை அரண்மனையில் நகைச்சுவை மன்றத்தின் தலைவனாக நியமிக்க இளவரசரிடம் சொல்றேன் என்றாள். இதைக் கேட்டதும் செடியனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அன்று முதல் அவன் வாழ்வில் வசந்தம் வீச ஆரம்பித்தது. கிடைத்த சம்பளத்தில் தனக்கு உதவிய அத்தனை பறவைகளுக்கும் தானியங்களை வாங்கி வந்து கொடுத்தான். பறவைகளும் சந்தோஷத்தில் செடியனை வாழ்த்தின.

## பொது அறிவு

- இயந்திர துப்பாக்கியை கண்டுபிடித்தவர் யார்?
  ஜேம்ஸ் பக்கில்
- பல் இல்லாத பிராணி எது?
  தேவாங்கு
- அதிக நீர் அருந்தும் பறவை எது?
  புறா
- கரப்பான் பூச்சியின் இரத்தத்தின் நிறம் யாது?
  வெள்ளை
- இலங்கைக்கு மிக அருகில் உள்ள நாடு எது?
  இந்தியா
- உலகில் எரிமலைகள் அதிகமாகக் காணப்படும் நாடு எது?
  இந்தோனேசியா

சி. சுவேத்தா

## தகவல் துளிகள்

- காக்கைகளே இல்லாத நாடு சிங்கப்பூர்
- ஜோர்தான் நதியில் மீன்களே இல்லை
- உலகில் 90 வீதமான வைரம் ஆபிரிக்காவில் கிடைக்கிறது
- கொசுக்களே இல்லாத நாடு பிரான்ஸ்
- உலகிலே மிகப் பெரிய உயிரினம் நீலத்திமிங்கிலம்
- அதிக பெண் எழுத்தாளர்களை கொண்ட நாடு ரஷ்யா

சா. ஜிந்துஜா,
கோண்டாவில்.

## உயிரினங்களின் ஆயுட் காலம்

பருந்து - 100 ஆண்டுகள்
கழுகு - 100 ஆண்டுகள்
கழுதை - 35 ஆண்டுகள்
திமிங்கிலம் - 35 ஆண்டுகள்
குதிரை - 25 ஆண்டுகள்
புலி -18 ஆண்டுகள்
நாய் -15-20 ஆண்டுகள்
பூனை -15-20 ஆண்டுகள்
சிங்கம் -16 ஆண்டுகள்
நீர் வாத்து -14 ஆண்டுகள்
தவளை -10 ஆண்டுகள்

மெ.பு. சகாய பென்ஹறனன்



## கெட்டிக்காரி

அமெரிக்காவில் தென்மேற்குப் பகுதியில் உள்ள கிளார்க்ஸ் நட்கிரேக்கர் என்ற பறவைக்கு அதிகமான ஞாபக சக்தி. பனி குறைவாகப் பெய்யும் போது மலையின் 30 ஆயிரம் தானியங்களுக்குக் குறையாமல் ஒளித்து வைக்கிறது. ஒரு இடத்தில் 4 அல்லது 5 விதைகளைச் சேமித்து வைக்கிறது. இது பேரல் 30 ஆயிரம் விதைகளை ஒளித்து வைத்தும் பின்னர் குளிர் காலம் வந்ததும் அந்தச் சிறிய பறவை தான் ஒளித்து வைத்திருந்த விதைகளை எடுத்து மகிழ்வுடன் சாப்பிடும் கெட்டிக்காரி.

## எனையுயர வைப்பாய் என்றாயே

பெற்றெடுத்துப் பாராட்டிப் பெருமகிழ்வு கண்டாய்
பேரன்பாய் வளர்த்துப் பெருமையும் கொண்டாய்
உற்றதுயர் தனையெலாம் ஊதியே யழித்தாய்
ஊர்புகழ நான் வாழ உளமார உழைத்தாய்
வெற்றியெலாம் நான்பெறவே வேதனைகள் சுமந்தாய்
வேரெனவே நீயிருந்து வீழாமற் காத்தாய்
மற்றவர் புகழ்ந்திடும் மாண்புறு நிலைதந்தாய்
மாநிலம் போற்றிட மகிழ்வதும் கண்டாய்

பத்து மாதம் சுமந்தாய் பகலிரவாய் விழித்தாய்
பாலூட்டிச் சீராட்டிப் பாசமாய் வளர்த்தாய்
வித்தகனாய் கல்வி பெற விரும்பியே யுழைத்தாய்
வேண்டாத துயரெலாம் வேகமாய் அழித்தாய்
இத்தரையி லுன்மைந்தன் இனிதுமே வாழ்ந்திட
இல்லாளை இணைத்து இன்பமும் கண்டாய்
உத்தமியே யெனக்குயிர் கொடுத்தப் பெருந்தாயே
உவந்துமே யுனைக்காக்க வருள்தருவாயே

எத்தனை துயர்வரினும் எதிர்த்துமே நின்றாய்
ஏரகம் போற்றிடும் நிலையதும் தந்தாய்
சத்தியமே காத்தாய் சான்றோனாய் வளர்த்தாய்
சாந்தமே யுருவாய்த் தரணியில் மிளிர்ந்தாய்
இத்தனை பணியெலாம் எனக்காகச் செய்தாய்
இக்கடன் நானெப்போ இப்புவியில் தீர்ப்பனோ
எத்தனை பிறப்பது எனக்கமைந்த போதிலும் நீயே
என்றாயாய் பிறப்பாய் எனையுயர வைப்பாய்

செ. சுதாகரன்





# பயன்படுத்தப்பட்ட செல்பேசிகளிலிருந்து எவ்வாறு தங்கத்தை பிரிதெடுப்பது?

பயன்படுத்தப்பட்ட செல்பேசிகளில் இருக்கும் தங்கத்தை பிரித்தெடுப்பதன் மூலம் மின்னணுக் கழிவுகளில் இருந்து செல்வத்தை உருவாக்க முடியும் என்று ஐரோப்பிய ஆணையத்தின் சுற்றுச் சூழல் ஆணையாளர் ஜெனஸ் பொடோக்நிக் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார். அதைத்தொடர்ந்து செல்பேசிகளில் இருந்து தங்கத்தை பிரித்தெடுப்பது தொடர்பான விவாதம் மின்னணு தொழில்நுட்பத் துறையில் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது.

சரி இந்த பயன்படுத்தப்பட்ட ஸ்மார்ட் போன்களில் இருந்து எவ்வளவு தங்கத்தைப் பிரித்தெடுக்க முடியும்?

இதுகுறித்த பல்வேறு ஆய்வுகள், மதிப்பீடுகள் இருந்தாலும், பொதுவான மதிப்பீட்டின்படி ஒரு கைப்பையில் இருக்கும் உபயோகப்படுத்தப்பட்ட செல்லிடப் பேசிகளில் இருந்து ஒரு கிராம் தங்கத்தைப் பிரித்தெடுக்க முடியும் என்பதை பல்வேறு தொழில்நுட்ப ஆய்வுகள் நிரூபித்திருக்கின்றன.

மின்னணுக் கழிவுகள் குறித்த ஐ.நா. மன்றத்தின் அறிக்கை ஒன்றில் 41 செல்லிடப்பேசிகளில் ஒரு கிராம் தங்கம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதேசமயம் பிரஸ்ஸல்ஸில் இருக்கும் உமிகோர் என்கிற தொழில்நுட்ப நிறுவனம் வெறும் 35 செல்லிடப் பேசிகளில் இருந்தேகூட ஒரு கிராம் தங்கத்தைப் பிரித்தெடுக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறது. இந்த நிறுவனத்தின் கணக்குப்படி ஒரு தொன் பயன்படுத்தப்பட்ட செல்லிட பேசிகளில் இருந்து 300 கிராம் தங்கத்தை பிரித்தெடுக்க முடியும்.

இந்த ஆய்வுகளின் அடிப்படையில் கருத்து வெளியிட்ட ஜெனஸ் பொடோக்நிக், நிலத்தில் இருந்து தங்கத்தை பிரித்தெடுக்கும் போது ஒரு தொன் தங்கத்தில் இருந்து ஒரே ஒரு கிராம் தங்கம் தான் பிரித் தெடுக்கப்படுவதாக தெரிவித்ததோடு ஆனால் 41 ஸ்மார்ட் போன்களில் இருந்து நாம் அதே ஒரு கிராம் தங்கத்தைப் பிரித்தெடுக்க முடியும் என்று வாதிட்டார். அதாவது தங்கச் சுரங்கங்களில் சுமார் ஆயிரம் கிலோ தாதில் இருந்து ஒரு கிராம் தங்கத்தை பிரித்தெடுப் பதைவிட, வெறும் 41 ஸ்மார்ட் போன் களில் இருந்து அதே அளவான ஒரு கிராம் தங்கத்தைப் பிரித்தெடுப்பது இலேசானது என்பது அவரது வாதம்.

செல்பேசிகளில் இருந்து தங்கத்தை பிரித்தெடுப்பது லாபம் தருமா?

இந்த கணக்கெல்லாம் கேட்பதற்கு நன்றாக இருந்தாலும், செல்பேசிகளில் இருக்கும் தங்கத்தைப்பிரித்துஎடுக்கஆகும்செலவை விட பிரித்தெடுக்கப்படும் தங்கத்தின் மதிப்பு அதிகம் இருந்தால் மட்டுமே இந்த மாதிரி செல்லிடப்பேசிகளில் இருந்து தங்கத்தைப் பிரித்து எடுக்கும் செயற்பாடு வர்த்தக ரீதியில் லாபம் ஈட்டும் தொழிலாக மாற முடியும்.

இந்தக் கோணத்தில் பார்த்தால், நம்மி டம் இருக்கும் ஒரு செல்பேசியில் இருந்து கிடைக்கும் தங்கத்தின் மதிப்பு என்பது சராசரியாக இன்றைய நிலையில் வெறும் நூறு (இந்திய) ரூபாய்க்கும் குறைவாக இருக்கிறது. இந்த நூறு ருபாய்க்கும் குறைவான மதிப்புள்ள தங்கத்தை பிரித்தெடுக்க ஆகும் செலவோ அதைவிட அதிகமாக இருக்கும் என்கிறார்கள் மின்னணு தொழில்நுட்ப வல்லுநர்கள். ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட செல்பேசிகளில் இருந்து தங்கத்தைப் பிரித்தெடுப்பது வர்த்தக ரீதியில் லாபம் தரக்கூடிய தொழில் அல்ல என்கிறார்கள் இவர்கள்.

> செல்பேசிகளில் இருக்கும் தங்கத்தைப் பிரித்து எடுக்க ஆகும் செலவை விட பிரித்தெடுக்கப்படும் தங்கத்தின் மதிப்பு அதிகம் இருந்தால் மட்டுமே இந்த மாதிரி செல்லிடப் பேசிகளில் இருந்து தங்கத்தைப் பிரித்து எடுக்கும் செயல் வர்த்தக ரீதியில் லாபம் ஈட்டும் தொழிலாக மாற முடியும்.

ஆனால் வேறு சில மின்னணு தொழில்நுட்ப வல்லுநர்களோ, தங்கத்தை பிரித்தெடுக்க ஆகும் செலவை விட, பிரித்தெடுக்கப்படும் தங்கத்தின் மதிப்பு கூடுதலாக இருக்கும் என்றும், இது லாபகரமான முயற்சியாகவே இருக்கும் என்றும் வாதாடுகிறார்கள்.

இந்த வாதப்பிரதிவாதங்கள் ஒரு புறம் இருக்க, இன்னொரு கணக்கு இதில் இருக்கும் வேறொரு சிக்கலை விளக்குகிறது. இன்றைய நிலையில் நிலத்தில் இருந்து ஒரு நாளைக்கு சுமார் ஏழரைத் தொன் தங்கம் வெட்டி எடுக்கப்படுகிறது. இதே அளவு தங்கத்தை நாம் பயன்படுத்தப்பட்ட செல்பேசிகளில் இருந்து எடுக்க வேண்டுமானால் ஒரு நாளைக்கு சாராசரியாக சுமார் 30 கோடி செல்பேசிகளை நாம் மறு சுழற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தோமானால், உலகத்தில் தற்போது இருக்கும் சுமார் எழுநூறு கோடி செல்பேசிகளும் 23 நாள்களில் மறுசுழற்சி செய்து முடிந்துவிடும் என்கிறார்கள் மின்னணு விஞ்ஞானிகள்.





தென்னவன்

# பாரம்பரிய கலாசார விழுமியங்களை எடுத்தியம்பிய தென்மராட்சி பிரதேச கலாசார விழா — 2014

பாரம்பரிய கலாசார விழுமியங்களை பும் கலை நிகழ்வுகளைக் கொண்ட கலாசாரப் பெருவிழா தென்மராட்சி பிரதேச கலாசாரப் பேரவையால் 30.09.2014 அன்று சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலாசார மண்டபத் தில் நிறைவான நிகழ்வுகளுடன் நடத்தப்பட்டது.

பிரதேச சலாசாரங்களுடன் கூடிய கலை நிகழ்வுகளான நடனம், இசை நாடகம், நாட்டுக்கூத்து, விவாத அரங்கு உள் ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுடன் கண்ணைக் கவரும், செவிக்கு இனிமை தரும் நிகழ்வுகளுடன், பிரதேசத்தில் கலைகளின் வளர்ச்சிக்கு நீண்ட காலம் சேவையாற்றி வரும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் நடத்தப்பட்டன.

பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவரும், தென்மராட்சி பிரதேச செயலருமான திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு கலை பண்பாட்டுத் துறையுடன் தொடர்புடைய பதவிகளை வகித்து மாகாணத் தில் கலைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயற்பட்டு வரும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச் சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம், யாழ்.மாவட்ட கலாசார அலுவலர் திருமதி சுகுணாளினி விஜயரத்தினம் சாவகச்சேரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டீ.எம்.திலகரட்ண ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

காலாதிகாலமாகப் போற்றப்பட்டுவரும் கலைகளை இளம் சமுதாயத்தினருக்கு எடுத்தியம்பும் வகையில் பிரதேச ரீதி யாக இவ்வாறான விழாக்கள் பிரதேச மக்களால் நடத்தப்படு வது பிரதேசத்தில் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் கிடைக்கும் பெருமையாகுமென ஆசியுரை வழங்கிய பிரதேச மதத் தலைவர்களான கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், அருட்பணி ஏ.கே.செல்வ்நாயகம் அடிகள், மௌலவி ரிஸ்வி மணாறி ஆகியோர் தெரிவித்தனர்.

தென்மராட்சி பிரதேச புகழ்புத்த நாதஸ்வர வித்துவான் கே.எம்.பஞ்சாபிகேசனின் வழித்தோன்றல்களான விக்கி னேஸ்வரன் சித்தார்த்தன், விக்னேஸ்வரன் பிரதித்தன் ஆகியோரின் நாதஸ்வர இசையுடன் கூடிய மங்கல இசை மழை அனைவரையும் கவர்ந்தது.

வரவேற்புரையை பிரதேச கலாசாரப் பேரவையின் உப தலைவரும், தென்மராட்சி கல்வி வலய மாணவர்களின் தமிழ்பாட விருத்திக்கு அரும்பாடுபட்ட ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளரான க.சின்னத்தரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் தெய்வேந்திரராஜா சிந்துஜனின் வரவேற்பு நடன மும் சாவகச்சேரி பூர்ணா நர்த்தனாலய மாணவிகளின் சுலோகா நாட்டியாஞ்சலியும் நடனத்தின் பெருமைகளை எடுத்தியம்பின.

கலைத்திறன்களை இன்றும் கூட கிராமங்களிலிலேயே காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறான கலைகளை வெளிக்கொணர்வோரை அந்தக் கிராமங்களில் உள்ள பொது அமைப்புகள் இனங்கண்டு ஊக்குவிக்கவேண்டும் என்று கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கலாசார அலுவலர் திருமதி சுகுணாளினி விஜயரத்தினம் தனது உரையில் குறிப்பிட்டார்.

பிரதேசத்தில் கௌரவமான பதவியில் இருந்தாலும் தானும் ஒரு இசைக்கலைஞர் என்பதை நிரூபிக்கும் வகையில் இசையால் அனைவரையும் மயக்கி விழாவுக்கு பெருமை சேர்த் தார் உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம்.

நீண்டகாலமாகப் பாதுகாக்கப்பட்டுவரும் கலைகளைக் கண்டும் கேட்டும் ரசிக்கக்கூடிய மனோபக்குவம் இன்றைய இலத்திரனியல் சாதனங்களின் வரவால் வெகுவாகக் குறைத் துள்ளதை எம்மால் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. 30 வருடங்களுக்கு முன்னர் நாட்டுக்கூத்து என்றால் விடியவிடிய மக்கள் விழித்திருந்து அவற்றைக் கண்டு கழித்தனர். ஆனால் தற்போது அவ்வாறான நிகழ்வுகளை கண்டுகழிக்க வருவோரின் தொகை குறைந்துள்ளதால் கூத்துக்கள், நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள் இடம்பெறுவது குறைவடைந்துள்ளன. இருப்பினும் சில கிராமங்களில் நடைபெறும் ஆலய நிகழ்வுகளில் நாட்டுக் கூத்துக்கள் இன்றும் இடம் பெற்றுவருவது கலைகளுக்கு அந்தந்த கிராம மக்கள் வழங்கி வரும் ஊக்குவிப்பாகக் கருத முடிகிறது என்று மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம் தமது உரையில் கூறினார்.

அடுத்து பிரதேசத்தில் நீண்டகாலமாக கலை இலக்கியப் பணிகளில் ஈடுபட்டுவரும் கலைஞர்கள் கௌரவிப்பு இட்மபெற்றன. அதில் நீண்டகாலமாக இலக்கியப் பணி களை மேற்கொண்டுவரும் பேராசிரியர் கனகசபை அருணா சலம், மட்டுவில் நா. நல்லதம்பி, நாவற்குழி செ.குமாரசாமி ஆகியோரும் - கல்வயல் வே.குமாரசாமி-கவிதை, பொ.இராஜ குலசிங்கம்-ஓவியம், மட்டுவில் கி.கலாமோகன் -சிற்பம், விடத்தற்பளை காசிநாதர் -நாட்டுக்கூத்து, மிருசுவிலூர் வே. விநாசித்தம்பி- புராணபடனம், மட்டுவில் பொன் ஸ்ரீ வாம தேவன் - இசை, கலாநிதி கே.எம்.பஞ்சாபிகேசன - நாதஸ் வரம் , செ.மகேஸ்வரன் - வில்லிசை மீசாலையூர், தென்ம ராட்சி ஐ.கிருஷ்ணன் - ஊடகம், கரம்பகம் ஆ.இராசதுரை -பாரம்பரிய நாட்டாரியல் கலைகள் ஆகியோருக்கு கலை சாகரம் விருதுகள் வழங்கப்பட்டன.

கலை அறிவு, ஆழம், அகலம், கரைகாணாத் தன்மை, திறமை, தன்னடக்கம், தற்றுணிவு ஆகியவற்றைக் கொண்ட வர்களே உண்மையான கலைஞர்களாகத் திகழ்கின்றனர். அதனாலேயே இவ்வாறான கலை இலக்கியப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கலைஞர்களுக்கு கலைச்சாகரம் என்ற விருதுகள் பேரவையால் வழங்கப்படுகின்றன என்று கலைஞர் கௌரவிப்பு உரையில் ஆசிரியர் க.கமலநாதன் கருத்து வெளியிட்டார்.

ஒவ்வொரு கிராமத்திலும் கலைஞர்கள் இலைமறைகாய் களாக காணப்படுகின்றனர். அவர்களை வெளி உலகுக்குத் தெரியப் படுத்த வேண்டிய கடப்பாடு அந்தந்த கிராமங்களில் உள்ள பொது அமைப்புகளுக்க உரியது. பிரதேச செயலகத் தால் எதிர்காலங்களில் நடத்தப்படவுள்ள இவ்வாறான நிகழ்வுகளில் பிரதேசத்தில் உள்ள பல்வேறு திறமைகளைக் கொண்ட கலைஞர்களைக் கௌரவித்து கலை வெளிப் பாடுகளை மீண்டும் கிராமங்களில் ஆரம்பிக்க வேண்டும் என்று வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தனது முதன்மை விருந்தினர் உரையில் குறிப்பிட்டார்.

பேரவையினால் கலாசார பெருவிழாவையொட்டி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பாசில்களும் சான்றி தழ்களும் வழங்கப்பட்டன.

விழாவின் சிறப்புக்கு மகுடம் வைத்தாற் போல் இறுதி நிகழ்வாக கொடிகாமம் ஏ வீ.எம். நாடகக்குழுவினரின் சத்தியவான்

# புற்றுநோய் அறிகுறியை கண்களும் வெளிக்காட்டுமாம்

புற்றுநோய் என்பது அமைதியாகக் கொல்லும் ஒரு நோய். அழையா விருந்தாளியாக உட லுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டு, பல வருடங்கள் ஆட்சி நடத்தி, உடலின் அனேக உறுப்புகளை ஆக்கிரமித்து, அழித்த பிறகுதான் தன் அரக்கத்தனத்தின் அறிகுறிகளைக் காட்டிச் சிரிக்கும். சந்தேகத்தின் பேரில், ஆரம்பக் கட்டத்திலேயே பரி சோதனை செய்து, சிகிச்சைகளை மேற்கொண்டு, தப்பிக்கிறவர்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகளே.

புற்றுநோயைக் காட்டிக் கொடுப்பதில் கண்களுக்கு மிகப் பெரிய பங்கு உண்டு என்றால் நம்ப முடிகிறதா..? உடலின் எந்தப் பாகத்தில் புற்றுநோய் வந்தாலும், அதன் அறிகுறிகள் கண்களில் பிரதிபலிக்குமாம். ஆச் சரியமான, அதிசயமான இந்தத் தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறார் கண் சிகிச்சை நிபுணர் பிரவீண் கிருஷ்ணா. கண்களில் பூச்சி பறக்கின்ற உணர்வு, தண்ணீர் கசிதல், விழித்திரை பிரச்சினை நோய்கள் வயதானவர்களுக்கு வரக்கூடியவை.

இவையெல்லாம் பெரும்பாலும் முதுமையின் அறி குறிகள் என்று அலட்சியப்படுத்துவோர்தான் அதிகம். வயதானால் பார்வை குறைவடைவதும், பூச்சி பறக் கிறதும் வழமையானவைதானே ஆனால், அதெல் லாம் அவர்களின் உடலில் எங்கயோ புற்றுநோய்



தாக்கியிருப்பதற்கான அறிகுறியாக இருக்கலாம் என்று யோசிக்க எவருக்கும் தோன்றாது. நடுத்தர வயதுக்குப் பின்னர் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோயும், ஆண்களுக்கு நுரையீரல் புற்றுநோயும் தாக்கும் வாய்ப்புகள் அதிகம்.


திடீரென்று கட்டி தென்படல், கட்டி, எடை குறைதல், கழி வறைப் பழக்கங்கள் மாறிப் போவது, இருமல், குருதியுடன் வெளியேறும் சளி இவ்வாறு புற்றுநோய்க்கான பொதுவான அறிகுறிகளைத் தாண்டி, கண்களிலும், அதைக் கண்டு பிடிக்கலாம்.


மனித உடலில் அதிகப்படியான ஒட்சிசன் விழித்திரைக்குத் தான் செல்கின்றது. அந்த ஒட்சிசன், விழித்திரைக்குப் பின் னால் உள்ள கொறொய்ட்(Choroid) பகுதி மூலமாகத்தான் .விழித்திரைக்குப் போகும். உடம்பின் இரத்த ஓட்டம், உடல் முழுமையாக ஒன்றோடு ஒன்றிணைந்து போகும். அதனால், குருதியில் உள்ள புற்றுநோய் செல்கள், கொறொய்ட் மூலமாக, விழித்திரைக்கும் போகும். விழித்திரையில் தண்ணீர் கசிந்து, விழித்திரை முன்னாடி வரும். திடீர் பார்வைக் குறைபாடு தான் இதன் அறிகுறி.

சிலருக்கு (non hodgkin's lymphomad) என்று சொல்லக் கூடிய இரத்தப் புற்றுநோய் இருக்கும். கண்ணில் பூச்சி பறக்கிறது, வெளிச்சம் அதிகமாகத் தெரிவதையும் முதுமையின் அறிகுறிகளாகவும், மறதி, நடக்கும்போது ஏற்படும் பிரச்சினைகளை, அல்சீமர் நோயுடனும் தொடர்புபடுத்திப் பார்த்து, வேறு சிகிச்சைகளை மேற்கொண்டிருப்பர். விழித் திரை நிபுணரால்தான் அதைச் சரியாகக் கண்டுபிடிக்க முடியும். பி ஸ்கான் மூலமாக விழித்திரையைப் பரிசோ தித்து, கொறாய்ட் கட்டி இருக்கிறதா?, அது எங்கிருந்து வந்தது என்பதையும் கண்டுபிடிப்பார்கள். பின்னர் விழித்திரவத்தை எடுத்து சோதனைக்குட்படுத்தி, புற்றுநோய் இருப்பதை உறுதி செய்து. அப்படி உறுதி யானாதால், அதற்கான சிகிச்சைகளை ஆரம்பிக்க வேண்டும் என்கிறார் தமிழக வைத்தியர் பிரவீண்.

# எமது உடல் பற்றி எமக்கே தெரியாத அதிசயங்கள்

ஒவ்வொரு சிறுநீரகமும் ஒரு மில்லியன் வடி கட்டிகளைக் கொண்டுள்ளது. அவைகள் ஒரு நிமிடத்துக்கு 1.3 லீற்றர் இரத்தத்தை வடிகட் டுகிறது. மேலும் ஒரு நாளில் 1.4 லீற்றர் சிறுநீரை வெளியேற்றுகிறது.





மனிதன் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவனுடைய உயரம் சிறிது அதிகரிக்கும், தூங்கி எழுந்த பின்னர் மீண்டும் பழைய உயரமே இருப்பான். இதற்குக் காரணம் மனிதன் உட்காரும் போது அல்லது நிற்கும் போது புவி ஈர்ப்பு விசையின் காரணமாக எலும்புகளின் மீது ஏற்படும் அழுத்தமாகும்.

**இரத்த நாளங்கள், செல்கள்**

எமது உடல் எடையில் 14 சதவிகிதம் எலும்புகளால் ஆனவை, 7 சதவீதம் இரத்தம் ஆகும்.

நுரையீரலில் 30,000 மில்லியன் இரத்த நாளங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டால் அதன் நீளம் 2,400 கிலோமீற்றராக இருக்கும்.

ஒவ்வொரு சிறுநீரகமும் ஒரு மில்லியன் வடிகட்டிகளைக் கொண்டுள்ளன. அவைகள் ஒரு நிமிடத்துக்கு 1.3 லீற்றர் இரத்தத்தை வடிகட்டுகின்றன. மேலும் ஒரு நாளில் 1.4 லீற்றர் சிறுநீரை வெளியேற்றுகின்றன.

மனிதனின் ஒரு தனித்த இரத்த அணு, உடல் முழுவதையும் சுற்றிவர 60 வினாடிகள் மட்டுமே எடுத்துக் கொள்ளும்.

மனித உடலின் மிகப்பெரிய செல் பெண்ணின் கரு முட்டையாகும், மிகச்சிறிய செல் ஆணின் விந்தாகும்.

எமது உடலில் உள்ள இரத்தக் குழாய்களின் நீளம் சுமார் 600,000 மைல்கள். அதாவது இந்தத் தொலைவில் நாம் இரண்டு முறை உலகத்தைச் சுற்றி வந்துவிடலாம்.



**தசை**

கண்களின் தசையானது ஒருநாளில் 100,000 முறை அசைகிறது. அதற்கு சமமான வேலையை உங்கள் கால்களுக்கு கொடுக்க வேண்டும் என்றால் தினமும் 80 கிலோமீற்றர் தூரம் நடக்க வேண்டும்.

மனிதன் ஒரு அடி எடுத்து வைக்க 200 தசைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**கால்கள்**

காலின் பெருவிரல் இரண்டு எலும்புகளைக் கொண்டிருக்கும், ஆனால் ஏனைய விரல்கள் ஒவ்வொன்றும் மூன்று எலும்புகளைக் கொண்டிருக்கும். கட்டை விரலின் நீளமும், மூக்கின் நீளமும் சமமாகும்.

மனித கால்களில் ஒரு ட்ரில்லியன் வரையிலான பக்றீரியாக்கள் இருக்கும்.

**கண்கள்**

எமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம், இதற்கு 500 வீதமாக ஒளிகளை பிரித்தெறியும் சக்தியுண்டு.



**மூளை**

மனித மூளையில் சுமார் 100 பில்லியன் நரம்பு செல்கள் உள்ளன, 35 வயது அடைந்தது முதல் மூளையில் தினமும் 7,000 நரம்பு செல்கள் இறக்கின்றன.

நாம் சுவாசிக்கும் மொத்த ஒட்சிசனில் 20 சதவீதம் மூளைக்குச் செல்கிறது. எமது மூளை 80 சதவீதம் நீரால் ஆனது, மூளையின் செயற்றிறன் பகலை விட இரவில் அதிகமாக இருக்கும்.

**இறப்பு**

மனிதன் உயிரிழந்த பின்பு உறுப்புகள் செயல் இழக்கும் நேரம்

கண்கள்- 31 நிமிடங்கள், மூளை- 10 நிமிடங்கள், கால்கள் 4மணிநேரம், தசைகள்- 5 நாள்கள், இதயம்- சில நிமிடங்கள்

# காகிதம் பிறந்த கதை!

நாம் தினமும் எழுதப் பயன்படுத்தும் காகிதங்கள் எவ்வாறு உருவாகி இருக்கும் என்று சிந்தித்தது உண்டா?

மனிதன் தனது நினைவாற்றலைத் தாண்டி சில தகவல்களைச் சேகரித்து வைக்கவும், மற்றவர்களுடன் பகிரவும் முற்பட்டபோது தரன் எழுத்துக்கள் உருவாகின. ஆதி மனிதன் முதன் முதலில் எழுத்துகளைப் பதித்து வைத்தது கற்களின் மீதுதான். அப்படி எழுதப்பட்ட கற்களை, தேவை ஏற்பட்டபோது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு எடுத்துச் செல்வதில் ஏற்பட்ட சிரமங்களைத் தொடர்ந்து, விலங்குகளின் எலும்புகளிலும், மூங்கில் தடிகளின் மீதும் மனிதன் எழுதத் தொடங்கினான்.

நாம் இன்று பயன்படுத்திக் கொண்டிருக்கும் கடிதங்களின் தோற்றத்தைப் போன்ற பொருளில், உலகில் முதன்முதலில் எழுதியவர்கள் எகிப்தியர்கள்தான்.

கி.மு.7 ஆம் நூற்றாண்டில் எகிப்தின் நைல் நதியின் டெல்டா பகுதியில் விளைந்த 2 முதல் 3 மீற்றர் உயரம் வரை வளரக்கூடிய ஒரு தாவரம் 'பாப்பிரஸ்' ஆகும்.


இந்தப் பாப்பிரஸ் தாவரத்தின் தண்டுப் பகுதியை நுண்ணிய துண்டுகளாக வெட்டி, அதனுடன் நீர் மற்றும் சில தாதுக்களைச் சேர்த்துப் பதப்படுத்தி, பின்பு அதனை சூரிய ஒளியில் நன்றாக உலர வைத்து, எழுதுவதற்கென்று பயன்படுத்தினர்.

கடிதம் என்ற சொல் பிறந்ததும் பாப்பிரஸ் என்ற வார்த்தையில் இருந்துதான்.

இதேவேளை சீனர்களும் விலங்குகளின் எலும்புகளிலும், மூங்கில் தடிகளிலும் எழுதி வந்துள்ளனர்.

கி.மு.206 ஆம் ஆண்டு காலகட்டத்தில் சீனாவின் ஹான் வம்சத்தில் நீதிமன்ற ஆவணக் காப்பாளராக வேலை பார்த்து வந்தவர் சாய் லூன். எலும்புகளிலும், தடிகளிலும் எழுதுவதற்குப் பதிலாக மாற்று வழியைக் கண்டுபிடிக்க இவர் முற்பட்டார்.

அப்போது உதயமானது தான் பேப்பர், இதற்காக பல பரிசுகளை வழங்கி அரசு அவரைக் கௌரவப்படுத்தியது. ஆனால் அப்போது பேப்பரின் தடிப்பு 5 மில்லி மீற்றராகத்தான் இருந்தது. சிறிது காலத்துக்குப் பிறகு சாய் லூன் ஒரு காட்சியைப் பார்க்க நேரிட்டது.



அதாவது ஒருவகைக் குளவி, மரத்தைத் துளையிட்டு, அதன் மூலம் கிடைத்த சிறு மரத்துகள்களைக் கொண்டு, தனது கூட்டை வலிமையாகக் கட்டிக் கொள்வதைக் கண்டார்.

அப்போதுதான், மரத்தைக் கூழ்மயமாக அரைத்தால், பேப்பரை நாம் விரும்பும் வடிவில் மற்றும் அளவில் தயாரித்துக் கொள்ளலாம் என்பதை அவர் அறிந்து கொண்டார்.

அதனையடுத்து பேப்பர் தொழிற்சாலை நிறுவப்பட்டாலும், சீனர்கள் இந்த நுட்பத்தை யாருக்கும் சொல்லாமல் இரகசியம் காத்து வந்துள்ளனர்.

அதன்பின் கி.பி.751 இல் நடந்த போரில் அரேபியர்களிடம் சீனா தோற்றுப் போகவே, பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்ட சீனர்களிடம் இருந்து அரேபியர்கள் பேப்பர் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை அறிந்து கொண்டனர்.

தொடர்ந்து உஸ்பெஸ்கிஸ்தானிலுள்ள மர்கண்ட் என்ற இடத்தில் அதிகாரபூர்வமாக பேப்பர் தயாரிக்கும் ஆலை நிறுவப்பட்டது.

இந்த நுட்பம் ஏனைய நாடுகளுக்கும் பரவவே, 1844ஆம் ஆண்டில் சார்லஸ் மற்றும் கெல்லர் ஆகியோர் இணைந்து வெள்ளை நிறப் பேப்பரை உருவாக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டறிந்தார்கள்.

